
சிவமயம்

# இறையருள் அமுதம்




ஆக்கம் : கலாபூஷணம் மூ. சிவலிங்கம்


வெளியீடு : இணுவில் சைவத்திருநெறிக்கழகம்

புரட்டாதி 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இறையருள் அமுதம்



இணுவில் சிவகாமி அம்மன்

## கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

வெளியீடு :

இணுவில் சைவத்திருநெறிக்கழகம்

புரட்டாதி, 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையருள் அமுதம்

ஆக்கம் : கலாபூஷணம் மூ. சிவலிங்கம்
(ஓய்வுநிலை கிராம சேவையாளர்)

வெளியீடு : இணுவில் சைவத்திருநெறிக்கழகம்

முதற்பதிப்பு : புரட்டாதி, 2014

பதிப்புரிமை : நூலாசிரியருக்கு

கணினி வடிவமைப்பும்
மலர் அமைப்பும் : சுடர்நிலவு கிரபிக்ஸ், இணுவில்

அச்சுப் பதிப்பு : ஈஸ்வா டிஜிற்றல் பிறஸ், திருநெல்வேலி.

விலை : ரூபா 180/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SIVAPOOMI TRUST
# சிவபூமி அறக்கட்டளை

**Head Office :** Sivapoomi
Kondavil East,
Kondavil.

E_mail:- sivapoomi@gmail.com,
Web:- www. sivapoomi.org

T.P No: 021 2227938



**Board of directors**

**President**
*Dr.Aru Thirumurugan*
Prinicipal
Skandavaroodaya College
Chunnakam

**Vice President**
*Mr.K.Sivaji*
Rtd.Prinicipal
Skandavaroodaya College
Chunnakam

*Mrs. K.Kugathasan*
Kondavil

**Secretary**
*Mr.P.Srivigneswaran*
Divisional Dirctor
Department of Education

**Asst. Secretary**
*Mr.M.Thayaharan*
Manager
H.N.B Bank

**Treasurer**
*Dr.S.Kugathasan*
Eye Surgeon
Jaffna.

**Asst. Treasurer**
*Mr.M. Vijayaragunathan*
Accountant
Jaffna.

**Patron**
Rishi Thondunathan Swami




**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்**

## செஞ்சொற்செல்வரின்
## ஆசிச்செய்தி

திருவருளை வளர்க்கும் திருநூல்கள் தினம் தினம் வெளிவர வேண்டும். மனிதர்கள் புனிதர்களாக வாழ்வதற்கு அருள்வளம் தரும் நூல்கள் ஆற்றுப்படுத்த வேண்டும். இணுவில் திருவூர் பெற்ற இனிய ஆத்மா கலாபூஷணம் மூ.சிவலிங்கம் ஐயா என்றால் மிகையாகாது. இமைப்பொழுதும் இனிய பணிகள் பற்றிச் சிந்திக்கின்ற புண்ணிய ஆத்மா. செயற்கரிய காரியங்கள் பல ஆற்றிவரும் செயல்வீரன். இப்பெருந்தகையின் முயற்சியினால் **"இறையருள் அமுதம்"** என்ற இனிய நூல் உருவாக்கப்பட்டுள்ளமை பெருமை தருகிறது. அருளால், அற்புதத்தால் இறைவனுக்கு இசை அர்ச்சனை செய்த சிறப்பையும், சிவசக்தி விரதங்களின் மகத்துவத்தையும் இந்நூல் வெளிப்படுத்துகிறது. அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் அமைந்த இந்நூல் சைவ உலகால் வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை. முதறிஞர் மூ.சிவலிங்கம் திருப்பணி தொடரத் திருவருளை வேண்டி என் இனிய ஆசிகளையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

கலாநிதி. ஆறு. திருமுருகன்
தலைவர், சிவபூமி அறக்கட்டளை
தலைவர்,
துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# அணிந்துரை

"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது"

\- ஔவையார்

"மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

\- அப்பரடிகள்

என்னும் சான்றோர் கூற்று மானிடப் பிறப்பின் - மக்கட் பிறப்பின் உயர்வை எமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

இவ்வுலகில் காணும் மனிதர் வையத்தில் வாழ்வாங்கு வாழ, அவர்கள் எந்நாட்டவர்களாயினும், எம்மொழி பேசுபவர்களாயினும், ஒரு குறிப்பிட்ட நெறியிலே, ஒழுகலாறிலே, நடத்தைக் கோலத்தில் வாழ வேண்டும் என வழிகாட்டுவதே சமயம்.

உலகம் பலவிதம். அதனால் மக்களும் பலவிதமானவர். அவ்வழி சமயங்களும் பலவிதமாகக் காணப்படுகின்றன. மக்களின் வரலாற்றுக்கேற்பச் சமயங்களின் வரலாறும் உள.

உலகத்திற் காணப்படும் சமயங்களில் மிகப் பழமையானதும் இன்றும் உயிர்ப்புடன் விளங்கியும் திகழ்வது சைவ சமயம்.

எச்சமயத்திற்கும் (1) கொள்கை விளக்கம் (தத்துவம்) (2) அதனை எடுத்தியம்பும் நூல்கள் (3) அதன்படி ஒழுகி உயர் பயன் அடைந்தோர் ஆகியன அமைந்திருக்க வேண்டும். அத்தகைய இருப்பினாலேயே அச்சமயம் நிலைபேறுடையதாய் விளங்கும். இல்லை எனில் எளிதில் தோன்றி எளிதில் மறைந்துவிடும்.

சைவசமயத்தின் கொள்கை விளக்கமாக உள்ளது. அதன் தத்துவம் என்றும் நிலையான பொருள்களாக பதி, பசு, பாசம் என்பனவே கோட்பாடாக உள்ளது. இவற்றின் விரிவான தன்மைகளை எடுத்தியம்புவனவே அதன் முதன் நூல்களாகிய வேத சிவாகமங்கள்.

"வேதமோடாகமம் மெய்யாம் இறைவனூல்" என்று கூறப்பட்டுள்ளது அறிக. இவ்வேத சிவாகமங்களில் பேசப்பட்டன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றையே பின்னர் தோன்றிய புராணங்கள், இதிகாசங்கள், திரு முறைகள், சித்தாந்த சாத்திரங்கள், ஏனைய அருளாளர்களின் அருள் நூல்கள் எடுத்தியம்புகின்றன.

மேற்கூறப்பட்டவற்றுள் வடமொழியிலும் தமிழ்மொழி யிலும் பல உளவாயினும், யாவும் மனிதனை உயர்நிலைக்கு இட்டுச்செல்லவே வழிப்படுத்துவதை ஊன்றிக் கற்போர் உணர்வர்.

மெய்ம்மை உணர்ந்த பெரியோர்களை மெய்யுணர்ந்தோர் என்றும், மெய்யடியார்கள் என்றும், பொய்யடிமையில்லாத புலவோர் என்றும் அழைப்பர்.

ஐயுணர்வினால் உண்டாவது அறிவு. அவ்வறிவினால் மெய்யுணர்வு தோன்றா இடத்து அவ்வறிவினால் பயன் இல்லை. இதனை வள்ளுவர்,

"ஐயுணர்வு எய்தியக்கண்ணும் பயனின்றே
மெய்யுணர்வு இல்லா இடத்து"

என்று இடித்துரைக்கின்றார். அவர் ஆக்கிய தமிழ் வேதமாகிய திருக்குறளின் நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களுள் ஒன்றே "மெய்யுணர்தல்" என்ற அதிகாரம். இதன் உயர்வு நுண்மாண் நுழைபுலம் உடையோர்க்கே புலப்படும்.

தமிழ்வேதமாகிய திருக்குறள் எமக்கு முதனூல் ஆவது போல வேதசாரமாகிய திருமுறைகள் அதன் வழித்தாகிய சித்தாந்த சாத்திரங்கள், ஏனைய அருளாளர்களின் அருட்பாடல்கள் யாவும் எம்மை - மனிதரை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி, அதன் பேறாக வானுறையும் தெய்வத்துள் எம்மையும் சேர வைப்பன.

பொய்காட்டிப், பொய்யகற்றிப், போதானந்த மெய்ப் பொருளைக் காட்டுவனவாகிய இத்தெய்வத்தமிழ்ப்பாடல்களை, தீந்தமிழ்ச் செய்யுள்களை, அறிவியற்கருவூலங்களை, பக்திச் சுவை நனிசொட்டும் பாக்களை, கருத்தூன்றிக் கற்கவும், கற்பிக்கவும், நமது சமுகம் - இளஞ்சிறார்களும், பெரியார்களும் ஒருப்பட வேண்டும் - முற்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளஞ்சிறார்கள் மூலநூல்களைத் தேடிக் கற்க இயலாத போது அந்நூல்களைப் பற்றியும், ஆக்கியோர் பற்றியும், அவற்றின் பொருட்சிறப்பினையும், கற்பதால் ஏற்படும் விழுமியங்களையும் எடுத்துக்காட்டி வழிப்படுத்துவது ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் கடனாகும்.

சான்றோர் என்பவர் சால்புடையவர் ஆவர். சால்பு என்பது அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்து பண்புடைத்தென்பர். இத்தகைய பெரியோர் "நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று கருதி அயராது இயங்குவர். அவர்கள்

"கள்ளத்திறைவர் துயர்கருதி கருணை
வெள்ளத்தலைவர் மிக"

என்பதற்கிணங்க கருணை எனும் அருள் நிறை அருளாளர்களைப் பற்றியும் அவர்தம் பாடல்கள் பற்றியும் அவ்வழியில் பயின்றுவரும் உழுவலன்புடை நெஞ்சர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம் அவர்கள் **"இறையருள் அமுதம்"** எனும் அருமையான நூலினை சிறார்களுக்கென விசேடமாக வெளியிடுகின்றேன் என வெளிப் படுத்தினாலும் அவர்தம் நூல் ஏனைப் பெரியோர்க்கும் உரிய தாகும் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

பெயருக்கேற்றவாறு இறையருள் பெற்றவர்கள் தாம் மாந்திய அமுதத்தினைத் தம் வாழ்வின் மூலம், அருளிச் செய்த பாடல்கள் மூலம் வெளிப்படுத்திய தன்மையினை தமது நூலின் மூலம் யாமும் பெறலாம் என உணர்த்தும் முகமாக பொருத்தமாக **"இறையருள் அமுதம்"** தந்த நூலாசிரியர் பல்லாண்டு சகல சுகநலன்களுடன் வாழ்ந்து இன்னும் பல நூல்களை ஆக்கி சமூகத் திற்குப் பணி செய்ய வேண்டுவோமாக.

**சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை**

**கொக்குவில்** **தலைவர்,**

**16-07-2014** **அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# முன்னுரை

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

இந்து சமயம் போற்றும் பரதகண்டம் பூமண்டலத்தில் மத வழிபாட்டின் நடுநாயகமாக விளங்குகிறது.

இந்து சமயத்தின் சைவசமயமே மெய்ச்சமயமாக ஆதரிக்கும் செந்தமிழ் நாட்டின் செம்மொழியாம் தீந்தமிழ் இனிய வளம் கொண்டது. இவ்வரிய பைந்தமிழ் பேசும் மறத் தமிழர்கள் உள்ளன்போடு வழிபடும் தூய சமயம் சைவ சமய மாகும்.

இச்சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவ பெருமான் அந்தமில்லாத அனாதியானவர். இவருக்குப் பெற்றோரும் தோன்றிய காலமும் இல்லாது தான்தோன்றீஸ் வரராக அமைந்தவர். இவர் பரதகண்டத்தின் தென்னாடாம் தமிழகத்தின் பாண்டிமாதேவியைத் திருமணம் செய்த தனிப் பெரும் கடவுளாவார். இதனால் இவர் தென்னாடுடைய சிவன் எனப் போற்றப்படுகிறார். இவரால் நெறிப்படுத்தப்படும் சைவ சமயம் அநாதியானது. அருள் மிக்கது. யாவரையும் நல்வழிப்படுத்தி உய் விக்கும் பெருமை வாய்ந்தது.

சிவனார் இவ்வுலகம் உய்யும் வண்ணம் பல்லுயினங் களையும் படைத்துக் காத்தும் அழித்தும் வருகிறார். உலக மாதாவான மகாசக்தியே சிவனாரை இயங்க வைக்கிறது. இறைவன் தமது முத்தொழிலையும் செயற்படுத்தவெனத் தமது அம்சத்தில் உருவெடுத்த பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரையும் நியமித்தார். சக்தியின் அம்சமான சரஸ்வதி, மகா லட்சுமி, துர்க்கை ஆகிய முச்சக்திகளையும் தோற்றுவித்த மகா சக்தி மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகி யோருடன் இணைத்து முத்தொழிலையும் நிறைவுடன் இயங்கச் செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசக்தியின் திருக்குமார்களான விநாயகர், முருகன் ஆகிய இருவரும் சிவசக்தியின் பேரருளால் ஓதி உணராமல் உலகம் உய்யும் வண்ணம் பல அற்புதங்களையும் திருவிளையாடல் களையும் புரிந்து அருள் பாலிக்கின்றனர். இறைவன் தம்மால் தோற்றுவிக்கப்பெற்ற சிவநெறியைச் சிறப்புடன் பிரகாசிக்கச் சித்தங்கொண்டார். தம்மாற் படைக்கப்பெற்ற பல்லின உயிரினங் களில் மனித குலத்துக்கு மட்டும் சிந்தித்துச் செயலாற்றும் ஆறாவது அறிவான பகுத்தறிவையும் படைத்தார். இப்பகுத்தறிவால் மனிதகுலம் எதிர்கால நன்மை கருதி நல்லதையே செய்து முன் னேறவும் இறையருள் பாலித்தது. மனித குலத்தவரும் இறை யருளை எண்ணி சிவநெறியைப் போற்றி வாழவும் தலைப் பட்டனர்.

நல்வினைப் பயனை நாடும் மனித குலம் இறைவனையும், இறைவனின் குணங்களையும் தத்துவங்களையும் நன்கு உணர வேண்டும். எம்பெருமானின் சிவநெறியை உள்ளன்போடு பூசித்து வழிபடவேண்டும். மனிதனின் பக்தியை மெச்சிய இறைவன் சமய தத்துவங்களையும் ஆகமங்களையும் விதிமுறைகளையும் சைவ மரபினையும் யாவரும் உணரும் வண்ணம் உதவுகிறார். இச்சிவ நெறியைத் தவறின்றிக் கடைப்பிடிக்கும் வண்ணம் குருவாய் வந்து நல்லுபதேசஞ் செய்யவும் (மந்திரிப் பதவியிலிருந்த திருவாதவூரருக் குக் குருவுபதேசம் செய்து நெறிப்படுத்தினார்.) விதிமுறைகளைப் போதிக்கவும், இறைவனை இசைய வைக்கும் பண்ணிசையை யாவருக்கும் அறிய வைத்தார். பண்ணிசையில் திருமுறைகளை ஆக்கவும் போதிக்கவும் சிவநெறிப்படி வாழ்ந்து காட்டவும் நாயன் மார்கள், அருளாளர்கள், ஞானிகளை அவதரிக்கச் செய்து பணி சிறக்க வைத்தார்.

இறைவன் தமது திருவிளையாடலினால் பல சிவநெறி யாளர்களைத் தோற்றுவித்தார். சிவநெறி நலிவுறாது சிறப்படை யும் நோக்கில் அவர்கள் திருமுறைகளையும், புராணங்களையும், காவியங்களையும், இறைவன் புகழையும் பாட வைத்தார். தம் கருணையால் அவர்கள் பாடுவதற்கான முதல் அடியை எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து ஞானத்தையும் ஊட்டிப் பாட வைத்தார். காரண காரிய மின்றி ஏதும் நடைபெறாது. எம்மவரை உய்விக்கும் வண்ணம் சிவசக்தியும் திருக்குமார்களும் தமது பெருங்கருணையினால் சிவ நெறியைப் புகட்டவெனச் சித்தங்கொண்டனர். சிவசிந்தனையை இடையறாது நுகரும் வண்ணம் பன்னிரு திருமுறைகளையும் புராண இதிகாசங்களையும் தோற்றுவித்தனர்.

விநாயகப்பெருமானின் பெருங்கருணை ஔவையாரி னால் அகவற் பாடலைப் பாட வைத்தது. சமய குரவர்கள் நால்வர், சேந்தனார், காரைக்கால் அம்மையார், சேக்கிழார் ஆகியோர் இறைவன் எடுத்து கொடுத்த முதல் அடியுடன் பன்னிரு திருமுறை களையும் ஓதினர். மேலும் நந்தனார், பட்டினத்தார் ஆகியயோர் சிவப் பரம்பொருளின் பெருமையை நிலைநாட்டிச் சிவநெறி பிரகாசிக்க உதவினர்.

கேதாரநாதம் என்னும் சுயம்புலிங்கத் திருத்தலத்தினது கேதாரகௌரி விரத நோன்பு சிவநெறியில் சிவசக்தியின் பெருமையையும் விரத மகிமையையும் புலப்படுத்துகிறது. நவ ராத்திரி விரதமும் விரதகாலத்தில் படிக்கும் சக்தியின் பாடல்களை யும் படித்துச் சக்தி வழிபாட்டின் பெருமையை உணர்த்துகிறது.

முருகப் பெருமான் தன் புகழை யாவரும் உணர்ந்து ஒழுக வல்ல கந்தபுராணத்தையும் திருப்புகழையும் உருவாகவெனத் தாமே தரிசனங் கொடுத்தும் தடுத்தாட் கொண்டும் கச்சியப்பச் சிவாச் சாரியார் மற்றும் அருணகிரிநாதரையும் பணித்தார். இறையருளி னாலே எமக்குக் கிடைத்த அமுதமான வரலாறுகள் எம்மை உய்விக் கின்றன.

எமது சைவசமயம் காலத்துக் காலம் அருகி வருவது யாவரும் கண்ட உண்மையாகும். இன்றைய விஞ்ஞான தொழில் நுட்பம், மின்அஞ்சல், ஒலி ஒளிக் காட்சிகள், சினிமா மோகம், அந்நிய நாகரிகம் யாவும் எம்மக்களின் சமய நலிவுக்கு உதவு கின்றன. இதனால் நிலை தடுமாறாது சைவமும் தமிழும், நன் னெறியும் பிஞ்சுச் சிறார்கள் மூலம் வளர்ப்பது சிறப்பானதென யாவரும் உணர்ந்தனர். இதற்குதவியாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தூண்டுதலினால் அறநெறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் சைவச்சிறார்கள் சைவநெறியை விருப்புடன் கற்று வருகின்றனர்.

இச்சைவச் சிறார்களின் தேவை கருதிய பலரின் வேண்டு தலுக்கேற்ப இந்த நூலில் இறைவனின் தூண்டுதலால் திருமுறை களைத் தோற்றுவித்தும் புராண காவியங்களைப் படைத்தும் உதவிய பதினாறு அருளாளர்களின் வரலாறும் தொடர்புகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இறைவனின் தொடர்பில் அமைந்ததால் இந்த மலர் "இறையருள் அமுதம்" என்னும் பெயருடன் வெளிவருகிறது. சைவச் சிறார்களின் வேண்டுதலுக்காகவே இலகு தமிழில் சமய வரலாற் றைச் சுருக்கமாக விளக்கி எழுதினேன். இதனை எழுத வைத்த எமதூர் குலதெய்வமான இணுவில் சிவகாமி அம்பாளின் திருப் பாதங் களில் இம்மலரினைக் காணிக்கையாக்கி மனநிறைவடைகின்றேன்.

கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

## இணுவில் சிவகாமி அம்பாளின் அற்புதம்

இவ்வூரில் முன்னூறு வருங்களுக்கு முன் வாழ்ந்த முத்தமிழ் வித்தகரும் ஒல்லாந்தராட்சியில் பணி புரிந்தவரு மான சின்னத்தம்பிப்புலவர் யாரோ செய்த தவறுதலால் ஒல்லாந்தரின் சிறையில் அடைபட்டார். சிறையில் வாடிய புலவர் சிவகாமி அம்பாளை வேண்டிப் பாடிய சிறைமீட்புப் படலம் பதிகத்தின் ஏழாம் பாடல் பாடியதும் சிறைக்கதவு தானாகவே திறந்தது. புலவரின் பெருமையையும் அம்பாளின் புதுமையையும் குறிக்கும் பாடல் இதுவாகும்.

"துப்பூட்டு மென்றனது துன்னார்தாம சிறைப்படுத்தும்
அப்பூட்டுத் தீயவர்தம் அரியசிறை வீட்டிலிருக்கும்
இப்பூட்டும் நிற்பூட்டா யென்சிறையை நீக்கியருள்
செப்பூட்டுத் திருப்பொற்றாட் சிவகாமசுந்தரியே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. விநாயகர் அகவல் ........................................ 01
2. திருஞானசம்பந்தர் ........................................ 04
3. திருநாவுக்கரசர் ........................................ 08
4. சுந்தரர் ........................................ 12
5. மாணிக்கவாசகர் ........................................ 16
6. சேந்தனார் ........................................ 22
7. காரைக்கால் அம்மையார் ........................................ 26
8. நம்பியாண்டார் நம்பி ........................................ 31
9. பட்டினத்தார் ........................................ 36
10. சேக்கிழார் ........................................ 41
11. நந்தனார் ........................................ 46
12. மகாசக்தியின் கேதாரகௌரி விரதமும் திருக்கேதாரநாதமும் ........................................ 50
13. நவராத்திரி விரதம் ........................................ 59
14. குமரகுருபரர் ........................................ 65
15. கச்சியப்பச் சிவாச்சாரியார் ........................................ 70
16. அருணகிரிநாதர் ........................................ 73



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சைவநெறியுடன் செம்மொழியாம் தமிழை கருவில் உருவான புலமையால் ஓதாமல் உணர்ந்த விநாயகரின் தூய பக்தையான ஔவையாரின் பாடலையும் அறிவோம். உடல் தளர் வுற்றதால் ஊன்றுகோலுடன் கல்விப் பணியாற்ற உலா வந்தவர் ஔவையார். இவர் இடையறாது விநாயகர் பூசை செய்வது வழக்கம். ஒரு நாள் சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமானும் கைலைக்குச் செல்வதாகவும் வந்தால் கூட்டிச் செல்வதாகவும் ஔவைக்குத் தெரிவித்தனர். இதன் நோக்கில் வழமையாக ஆறுதலாகச் செய்யும் விநாயகர் பூசையை அவசரமாகச் செய்யத் தொடங்கினார் ஔவையார். வழமையை விட வேகமாகப் பூசை செய்வதையிட்டு விநாயகப் பெருமான் வினாவினார். தாம் சுந்தரருடன் கைலை செல்ல எண்ணியதை ஔவையார் தெரிவித்தார்.

இதைக் கேட்டதும் விநாயகர் அவசரமின்றி மெதுவாகப் பூசித்ததும் தாம் அவரைக் கைலையிற் சேர்ப்பதாகவும் சொன்னார். விநாயகப் பெருமானின் பெருங் கருணையை வியந்த ஔவை பூசை முடிந்ததும் "விநாயகர் அகவல்" என்னும் தலைப்பில் பாமாலையைத் தொடுத்தார். பாடி முடிந்ததும் ஔவையாரை விநாயகப்பெருமான் தமது துதிக்கை மூலம் தூக்கிக் கொண்டு இமைப் பொழுதிற் கைலையிற் சேர்ந்தார்.

## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி யென்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்த றிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத் தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முகதூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசெனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுங் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே!

முற்றும்.

*"ஏரார் இணுவில்வாழ் எந்தை கணபதியின்*
*தாரார் திருவடியைத் தாழ்பணிந்தோர் - ஆரா*
*அமிழ்தம்போல் வாழ்வார் அருட்செல்வம் சூழ்வார்*
*தமிழ் உள்ளளவும் தழைத்து."*

-திருமுருக கிருபானந்தவாரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநெறியைத் துலக்க வந்து மூன்று வயதில் தேவாரம் பாடிய திருஞானசம்பந்த சுவாமிகள்



மெய்ச்சமயமாம் சிவநெறி, வேற்று மதங்களின் பரம்பலி னால் அவ்வப்போது நலிவடைந்துள்ளது. தூய சமய பக்தர்கள் தம்மை உய்விக்கும் வண்ணம் இறைவனிடம் வேண்டிக் கொண்டனர்.

சோழவளநாட்டின் தலைசிறந்த திருவூராம் சீர்காழியிலே வாழ்ந்த வேதியர் சிவபாதவிருதயர் என்னும் சிவபக்தர் தமக்கென மழலைச் செல்வம் இல்லாத போதும் நலிவடையும் சைவ நெறியை உய்விக்கவென ஒரு சற்புத்திரனை வழங்குமாறு இறை வனை வேண்டினார். இறைவன் தமது திருக்குமரன் முருகனின் அம்சமான பாலகனொருவனைச் சிவபாதவிருதயருக்கு மகனாக அவதரிக்கச் செய்தார். ஓதாமல் உணர்ந்து வளர்ந்த பாலகன் மூன்றாம் வயதில் தந்தையுடன் சீர்காழியிலுள்ள தோணியப்பரின் ஆலயஞ் செல்ல இறையருள் பாலித்தது. ஆலயஞ் செல்வோர் ஆலய முன்றலிலுள்ள திருக்குளத்தில் நீராடியே செல்வர். சிவபாத விருதயர் தமது மகனைக் குளத்தின் படியிலிருத்திவிட்டு நீராடினார். நீராடும்போது தந்தையைக் காணாத தனயன் எதிரிலிருந்த ஆலயக் கோபுரத்தை நோக்கி "அம்மே அப்பா" எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறி அழுதான். இதையுணர்ந்த அம்மையும் (தோணி) அப்பரும் பாலகனை அணுகினர். உமையவள் அழுத பிள்ளைக்குத் தமது திருமுலைப்பாலைச் சுரந்து கிண்ணத்தில் வழங்கினார். சக்தியின் (ஞானப்) பாலுண்ட பாலகன் கவலை நீங்கி இன்புற்றான். (இவை யாவும் தெய்வாதீனமாக இமைப்பொழுதில் நடந்த சம்பவமாகும்.)

நீராடியதும் தந்தை வந்தார். தன் மகன் பாலுண்டதை உணர்ந்தார். "உனக்குப் பால் தந்தது யார்?" என அதட்டினார். இறைவன் இச்சிறுவனுக்குப் பாலைக் கொடுத்து ஆட்கொண்ட தால் சிவஞானத்தையும் பெற்றார். எதிரேயுள்ள தோணியப்பரின் கோபுரத்தைச் சுட்டிக் காண்பித்து "தோடுடைய செவியன்" என்று தொடங்கும் பாடல் மூலம் தெரிவித்தார். தந்தையுடன் அவ் விடத்திலிருந்த அனைவரும் இறைவன் திருவருளை வியந்தனர். பாலுண்ட சிவஞானத்துடன் சம்பந்தமுடையதால் இப்பாலகன் "திருஞானசம்பந்தன்" என அழைக்கப்பட்டார்.

இவ்வற்புதம் புரிந்த ஞானசம்பந்தனை யாவரும் தோணி யப்பரின் ஆலயத்துக்கு அழைத்துச் சென்றனர். அவர் ஆலயத்தில் முழுப்பதிகம் பதினொரு பாடலையும் பாடி மகிழ்வித்தார். திருஞானசம்பந்தர் தமது பதினாறு வயதில் இறைவனின் சோதி யுடன் கலக்கும் வரை பல்லாயிரக் கணக்கான தேவாரங்களைப் பாடினார். இவற்றுட் பல சிதைந்த போதும் 4159 பாடல்கள் (384 பதிகங்கள்) பன்னிரு திருமுறைகளுள் முதன் மூன்று திருமுறை களாக வகுக்கப் பெற்றுள்ளன. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த பாடல்கள் யாவும் "திருக்கடைக்காப்பு" என அழைக்கப்படுகிறது. இவர் பல அற்புதங்களையுஞ் செய்தார்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தென்னிந்தியாவிலுள்ள சகல சிவாலயங்களையும் நேரிற் சென்று வழிபட்டவர். அவ் வாலயங்களதும் இறைவனின் பெருமைகளையும் சிறப்பையும் நோக்கியே பதிகங்கள் பாடினார். அக்காலத்தில் பிரயாண வசதி யில்லாத காரணமாக இலங்கையின் மாதோட்டத்துத் திருக் கேதீஸ்வரரையும் திருகோணமலையின் திருக்கோணேஸ்வரரை யும் ஞானக் கண்ணால் நோக்கினார். தென்னிந்தியக் கரையில் நின்றவாறே இலங்கையின் இரு திருத்தலங்கள் மீதும் ஒவ்வோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகங்கள் பாடி இன்புற்றார். அதே போல் வட இந்திய பஞ்சநாதத் திருத்தலங்களில் ஒன்றாகிய சுயம்புலிங்கமான திருக் கேதாரநாததிருத்தலத்தையும் தமிழகத்தில் நின்று ஞானக் கண் ணால் நோக்கி வழிபட்டு இறைவன் மீது ஒரு பதிகம் பாடினார்.

இறைவன் சைவ சமயம் உய்யும் வண்ணம் முருகனின் அம்சமாக அவதரிக்கச் செய்து பாலைக் கொடுத்து ஆட்கொண்டு சிவஞானத்தை உணர்த்தியதால் திருஞானசம்பந்தசுவாமிகள் பாடிய மூன்று திருமுறைகளும் (4159 பாடல்கள்) இன்றைய சைவ சமய மக்களுக்கு இறையருள் அமுதமாகவே கிடைத்துள்ளன.

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய
## திருக்கேதாரத் தேவாரப் பதிகம்

பண் : செவ்வழி 2ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார் மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யுமிடமென்பரால்
வண்டு பாட மயிலால் மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே 1

பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும் பதினெட்டொடாறும் விரிந்தார்க்கிடம்
தாது விண்ட மதுவுண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம் பாட மடமந்தி கேட்டுகளுங் கேதாரமே. 2

முந்திவந்து புரோதாய மூழ்கி முனிகள் பலர்
எந்தை பெம்மா னென நின்றிறைஞ்சும் மிடமென்பரால்
மந்திபாயச் சரேலச் சொரிந்தும் முரிந்துக்கபூக்
கெந்தநாறக் கிளருஞ் சடையெந்தை கேதாரமே. 3

உள்ளமிக்கார் குதிரைம் முகத்தார் ஒருகாலர்கள்
எள்கலில்லா இமையோர்கள் சேரும் மிடமென்பரால்
பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ கேட்டுப் பிரியாது போய்க்
கிள்ளையேனற் கதிர் கொணர்ந்து வாய்ப்பெய்யுங் கேதாரமே 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியூ லி யுணர்வார்கள் வேதத்தினொண் பொருள்களால்
வாழியெந்தை யெனவந்தி றைஞ்சும் மிடமென்பரால்
மேழிதாங்கி உழுவார்கள் போலல்விரை தேரிய
கேழல் பூழ்தி கிளைக்க மணிசிந்துங் கேதாரமே. 5

நீறுபூசி நிலத்துண்டு நீர்மூழ்கி நீள்வரைதன்மேல்
தேறுசிந்தையுடையார்கள் சேரும் மிடமென்பரால்
ஏறிமாவின் கனியும் பலாவின்னிருஞ் சுளைகளும்
கீறிநாளும் முசுக்கிளையொடுண்டுகளுங் கேதாரமே. 6

மடந்தைபாகத் தடக்கிம் மறையோதி வானோர் தொழத்
தொடர்ந்த நம்மேல் வினைதீர்க்க நின்றார்க் கிடமென்பரால்
உடைந்த காற்றுக் குயர்வேங்கை பூத்துதிரக்கல் லறைகண்மேல்
கிடந்த வேங்கை சினமாமுகஞ் செய்யுங் கேதாரமே. 7

அரவமுந்நீ ரணியிலங்கைக் கோனையரு வரைதனால்
வெருவவூன்றி விரலால் அடர்த்தார்க் கிடமென்பரால்
குரவங்கோங்கங் குளிர்பிண்டி ஞாழல்சுர புன்னைமேல்
கிரமமாக வரிவண்டு பண்செய்யுங் கேதாரமே. 8

ஆழ்ந்துகாணார் உயர்ந்தெய்த கில்லார் அலமந்தவர்
தாழ்ந்துதந்தம் முடிசாய நின்றார்க் கிடமென்பரால்
வீழ்ந்துசெற்று நிழற்கிறங்கும் வேழத்தின் வெண்மருப்பினைக்
கீழ்ந்து சிங்கங் குருகுண்ண முத்துதிருங் கேதாரமே. 9


கடுக்கள் தின்று கழிமீன் கவர்வார்கள் மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பார் அவரெய்த வொண்ணா இடமென்பரால்
அடுக்க நின்றவ் வறவுரைகள் கேட்டாங் கவர்வினைகளைக்
கெடுக்க நின்ற பெருமான் உறைகின்ற கேதாரமே. 10

வாய்ந்தசெந்நெல் விளைகழனி மல்கும்வயற் காழியான்
ஏய்ந்த நீர்க்கோட் டிமையோர் உறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்து சொன்ன அருந்தமிழ்கள் பத்தும்மிசை வல்லவர்
வேந்தராகி உலகாண்டு வீடுகதி பெறுவரே. 11

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையில் திருப்பதிகம் பாடி "அப்பர்" என அழைக்கப் பெற்ற திருநாவுக்கரசுநாயனார்



தமிழகத்தில் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருவாமூர் சிறந்த ஞானசீலர்களைச் சைவ உலகிற்கு வழங்கிய புண்ணிய திருவூராகும். சிவநெறிபூண்டு இல்லற வாழ்வில் நல்லறம் காத்த சிவத்திரு புகழனாரும் அவர்தம் தர்மபத்தினி மாதினியாரும் செம்மையாக வாழ்வாங்கு வாழ்ந்தனர்.

இவர்களின் நற்றவப் பயனாகத் தவப்புதல்வி திலகவதி யாரும் சமய குரவரான மருணீக்கியாரும் இரு மதலைகளாக அவதரித்தனர். இவர்கள் இருவரும் பெற்றோரின் வழிகாட்டலில் சிவநெறியிலும் கல்வியறிவிலும் நற்பண்பிலும் சிறந்து விளங் கினர். திலகவதியார் பருவ வயது வந்ததும் தாயாரின் நெறிப்படுத் தலில் ஒரு குடும்பப் பெண்ணுக்குரிய சகல பணிகளையும் சிவப் பணி மற்றும் ஆசார சீலத்தையும் பேணி வந்தார். சிறு வயதிலிருந்தே மருணீக்கியார் சைவப் பண்புடன் கல்வியிலும் சிறப்படைந்தார். திருமணப் பருவம் வந்ததும் பெற்றோர் தமது மரபுக்கும் பண்புக்கும் ஏற்றவரும் சிறந்த அரச போர்வீரருமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிப்பகையாரைத் தமது மகளுக்குத் திருமணஞ் செய்ய நிச்சய தார்த்தஞ் செய்து வைத்தனர். நாட்டில் ஏற்பட்ட யுத்த நெருக் கடியில் போர்முனைக்குச் சென்ற கலிப்பகையார் மாண்டார். திலகவதியார் விதவைக் கோலத்துடன் சிவநெறியையே தஞ்ச மென வாழ்ந்தார். சிறிது காலத்தில் பெற்றோர் இருவரும் ஒருவர் பின்னொருவராக இயற்கை எய்தினர். சலிப்படைந்த திலகவதி யார் தாமும் மரணத்தை நாட முற்பட்டார். இதையறிந்த மருணீக்கியார் தம்மை ஆதரிக்க இருந்த சகோதரியும் இறக்க முற்பட்டதால் தாமும் மரணத்தை எதிர்கொண்டார். இறை யருளின் கருணையினால் இருவரும் சிவநெறியைத் துணைக் கொண்டு வாழ முன்வந்தனர்.

சமய தத்துவங்களையும் மனித வாழ்வின் எதிர்கால நிலையையும் நன்குணர்ந்த மருணீக்கியார் இந்த நிலையற்ற வாழ்வில் அறப்பணியை நிலைநாட்ட எண்ணினார். இதன் பேறாகத் தண்ணீர்ப்பந்தல், அறச்சாலைகள் நிறுவுதல், குளங்கள் தோண்டுதல், பயன்தரும் மரங்களை நாட்டிக் கனிதரும் சோலை களாக்குதல் போன்ற நற்பணிகளைச் செய்தார். மேலும் தம்மை நாடி வந்து உதவி கோருபவருக்கு உதவியும் செய்து இன்புற்றார்.

நிலையற்ற வாழ்வை எண்ணித் துறவு பூண்டு சமய ஆய்வில் இணைந்தார். இதனால் கொல்லாமை என்னும் விரதம் பூண்ட சமண சமயமே மேலானதென எண்ணி இருள் சூழ்ந்த சமண சமயத்தை நாடினார். பல சமண நூல்களைக் கற்றுத் திறமையுடன் சமண சமயத்தின் தலைவராகவும் மேலோங்கி "தருமசேனர்" என்னும் பெயருடன் பல்லாண்டுகள் சமண மென்னும் இருளில் மூழ்கினார்.

திலகவதியாரோ தமது இல்லத்தை விட்டு திருவதிகை வீராட்டானேஸ்வரரைத் தஞ்சமென்றடைந்து ஆலய மடத்தில் தங்கியிருந்து சிவப்பணியிலிணைந்தார். அதிகாலை துயி லெழுந்து புனித நீராடி ஆசாரத்துடன் ஆலயஞ் சென்று ஆலயத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் உள்ளுட புறமும் கூட்டிச் சுத்தஞ் செய்வார். ஆலய உட்பகுதியில் பசுஞ்சாணி கொண்டு மெழுகி இன்புறுவார். தொடர்ந்து ஆலய நந்தவனத்தில் நறுமலர் கொய்து நல்ல மாலைகள் தொடுத்து இறைவனின் பூசை அலங்காரத்திற்காக வழங்குவார். தம்மாலான ஆலயப் பணி நிறைவில் பாமாலைகளை ஓதிய வண்ணம் ஆலய தரிசனத்தை நிறைவு செய்வார். ஓய்வு நேரத்தில் சமய நூல்களையும் நீதி நூல்களையும் கற்பதுடன் சிவத்துறவியாக வாழ்ந்தார். காலங்கள் கடந்தன. முதுமைப் பருவம் கிட்டியது. தம் பணி போலத் தமது தம்பியும் சிவநெறியில் வாழ்ந்தால் சிவநெறி பிரகாசிக்குமென எண்ணினார்.

காலங்கள் கடந்து முதுமையடைந்தாலும் தம்பியை சிவ நெறியில் இணைக்குமாறு திருவதிகை வீரட்டானேஸ்வரருக்கு விண்ணப்பித்தார். திலகவதியாரின் கனவிற் தோன்றிய எம் பெருமான் "உன் தம்பி முற்பிறவியில் முனிவராகத் தவம் செய்தான். அப்போது செய்த தவறுதலுக்காக இப்பிறவியில் அனுபவிக்கிறான். அவனுக்குச் "சூலை" நோயைக் கொடுத்து ஆட்கொள்வோம் அஞ்சற்க" என்று கூறி மறைந்தருளினார்.

இறைவனின் சக்தியால் தருமசேனரைச் சூலைநோய் பெரிதும் வாட்டியது. செய்வதறியாத நிலையில் அவர் தமது சகோதரியிடம் வந்து சரணடைந்தார். தமது தம்பியின் நிலை கண்ட திலகவதியார் இறைவனை நினைந்து தம்பிக்குத் திருநீறிட்டார். சிறிது குணமடைந்த நிலையில் தம்பியை இறைவன் சந்நிதிக்கு அழைத்துச் சென்றார். இறைவனை வணங்கிய மருணீக்கியார் தமக்குப் பூரண சுகம் கிடைக்கப் பாடும் ஆற்றலைப் பெற்றார். "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்ற தொடரில் ஒரு பதிகத்தைப் பாடினார். அவரின் நோய் அகன்று பூரண சுகமடைந்தார். அப்போது இறைவன் அசரீரியாக "நீ அரிய பதிகம் பாடினாய் அதனால் உனக்கு நாவுக்கரசு என்ற பெயர் வழங்குவதாக" என்றருளினார். மருணீக்கியார் தமது வாழ்வில் பெரும் பகுதியை (முதுமை வரை) தமது மதியீனத்தால் பாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமண சமயத்தில் மூழ்கினாலும் கொடிய நோயை விலக்கிய இறைவனை வியந்தார். தமது மூச்சுள்ளவரை அனைத்துச் சிவாலயங்களிலும் சிவப் பணியாம் உளவாரப் பணி செய்வதே மேல் என உணர்ந்தார், செயற்பட்டார்.


நாவுக்கரசர் உள்ளன்போடு சிவாலயப் பணியாற்றி இன்புறுவதைச் சகிக்காத சமணர்கள் தமது அரசர் மூலம் பல கொடிய தண்டனைகளை ஏற்படுத்தினர். முதுமையான சைவத் துறவியை ஆட்டுவிக்கும் இறைவனின் திருவடி நிழல் சைவ சமயத்தின் பெருமையை உணர்த்தியது. முதலில் சமணர்கள் சுண்ணாம்பு அறையில் அடைத்தனர். நாவுக்கரசர் இறைவனை வேண்டி "மாசில் வீணையும்" என்ற தொடரில் பாடினார். சுண்ணாம்பு அறை குளிர்ந்த பொய்கையாக மாறியது. கருங்கல்லிற் கட்டிக் கடலில் வீசினார்கள். "சொற்றுணை வேதியன்" என்ற தொடரில் பாடினார். கருங்கல் தெப்பமாக மிதந்தது. இது போன்ற பல உயிர் பறிக்கும் கொடுமைகளைச் செய்தார்கள். இறைவனின் திருவடி நிழல் காப்பாற்றியது. இறையருளின் அமுதமான பாடல்களாற் பல அற்புதங்களையும் செய்தார்.

எத்தீவினை வந்தாலும் இறையருளால் மகத்தான பாடல்களைப் பாடியும் சிவாலயங்கள் தோறும் உளவாரப் பணி செய்தும் பற்றற்ற துறவு வாழ்வில் இன்புற்றார். நாவுக்கரசர் தென்னிந்திய சிவாலயங்களனைத்தையும் தரிசித்ததுடன் உளவாரப் பணியையும் மேற்கொண்டார். முதுமைக் காலத்தில் தமது அயராத சிவ பக்தியால் ஆலயங்கள் தோறும் பல்லாயிரம் பாடல்களைப் பாடினார். அவற்றுட் பல சிதைவுற்ற போதும் **313** பதிகங்களில் **3045** பாடல்கள் கிடைக்கப்பெற்றன. இவை யாவும் "தேவாரம்" என்னும் பெயரில் வழங்கப்பெறுகிறது. திருநாவுக்கரசு நாயனார் அருளிய **3045** தேவாரங்களும் பன்னிரு திருமுறைகளில் முறையே **4, 5, 6** என்னும் மூன்று திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளன. இறையருளின் அமுதமாக எமக்குக் கிடைத்த இப் பாடல்கள் சைவ சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந் துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி நாயனார் (வன்றொண்டர்)



திருக்கைலாயத்தில் சிவப்பணியாற்றியவர் ஆலாலசுந்தரர். இவர் சிவபூசை அலங்காரத்துக்கான நறுமலர்களைத் தேவ நந்த வனத்திற் கொய்து மாலைகளாகவும், பூசை வேளைக்கான தனி மலர்களாகவும் வழங்கி வந்தார். இதே போல உமாதேவியாரின் கூந்தலை அலங்கரிக்கும் மென்மலர்கள் தேவியின் சேடியர்களான அனிந்திதை, கமலினி என்போரினால் இதே நந்தவனத்தில் கொய்து வழங்கப்பெற்றன.

ஒருநாள் ஆலாலசுந்தரர் உமையாளின் சேடியர்களான அனிந்திதை, கமலினி ஆகியோர் மலர் கொய்யவரும்போது இருவர் மீதும் மையல் கொண்டார். எல்லாம் வல்ல எம் பெருமான் மூவரும் மையல் கொண்டதை உணர்ந்தார். ஆலால சுந்தரரை அழைத்து "நீ போய் பூவுலகில் அவதரித்து உன் ஆவலை நிறைவு செய்து வா" எனப் பணித்தார். சுந்தரரின் வேண்டுதலை அறிந்து "உரிய காலத்தில் வந்து தடுத்தாட்கொள்வோம்" என்றும் கூறினார்.

சுந்தரர் இறைவனின் சித்தப்படி திருமுனைப்பாடி நாட்டின் திருநாவலூரைச் சேர்ந்த சிவநெறி பூண்ட வேதியரான சடையனார்-இசைஞானியார் தம்பதியினரின் தவப் புதல்வனாக அவதரித்தார். தமது இறையருட் செல்வனுக்கு நம்பியாரூரன் எனப் பெயரிட்டுச் சிறப்பாக வளர்த்து வந்தனர். நம்பியாரூரன் தமது அழகுக்கேற்பச் சிறந்த ஆடை அணிகள் அணிந்த சிறுவனாக தெருவீதியில் குறுநடை நடந்து சிறுதேர் உருட்டி விளையாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார். ஒருவேளை அவ்வூர் அரசனான நரசிம்மமுனையர் என்பவர் வீதியுலா வந்தார். நம்பியாரூரனின் அழகைக் கண்டு அவரின் பெற்றோரின் ஆசிபெற்றுத் தமது சுவீகார புத்திரராக அழைத்துச் சென்றார். நம்பியாரூரன் அரச மாளிகையில் அரச போகத்தில் சிறப்புடன் வாழ்ந்தார். இவரின் பெற்றோர் தமது குல மரபுப் படி அவ்வப்போது வந்து நம்பியாரூரரின் சமயச் சடங்குகளைச் செய்து வந்தனர்.

சீருஞ் சிறப்புடனும் வாழ்ந்துவரும் நம்பியாரூரனின் பெற்றோர் மகனின் திருமணப் பருவம் வந்ததும் திருமண ஏற்பாடு செய்தனர். அரச அலங்காரச் சிறப்புடன் மணமக்களை திருமண மண்டபத்துக்கு அழைத்து வந்தனர். அச்சமயம் முதிர்ந்த வேதியராகக் காணப்பெற்ற இறைவன் கையிலிருந்த ஓலையைக் காண்பித்து மணமகன் என் அடிமை இவனுக்கு இவ்விடத்தில் திருமணஞ்செய்ய விடமாட்டேன் என வாதாடினார். இதனால் சினமடைந்த நம்பியாரூரர் வேதியரைப் பித்தன் என்றும் பலவாறு வைது வாதாடினார்.

சபையிலுள்ளோர் வேதியரின் இல்லிடமான திரு வெண்ணெய் நல்லூரில் இவர்களின் வழக்கை விசாரணை செய்ய முடிவு செய்தனர். இருவரதும் ஆதாரங்களை விசாரணை செய்த சான்றோர்கள் சுந்தரர் வேதியரின் அடிமையெனக் கூறினர். வேதியர் சுந்தரரைத் தமதில்லமான திருவருட்துறைக்கு அழைத்து ஆலயத்தினுட் சென்றதும் மறைந்துவிட்டார். வழக்காடிய வேதியர் இறைவனே என உணர்ந்த சுந்தரர் இறைவனின் கருணையை எண்ணி வியப்படைந்தார். அச்சமயம் இறைவன் அரசரீரியாகத் தன்னுடன் வாதிட்டதால் சுந்தரரை "வன் றொண்டர்" எனக் கூறி தமிழ்ப்பாட்டினால் தம்மை அர்ச்சிக்கு மாறு அருளினார். சுந்தரர் இறைவன் பெருமையை எவ்வாறு தொடங்கிப் பாடுவது என எண்ணியதும் இறைவன் தம்மை மணப்பந்தலில் பித்தன் எனக் கூறியதால் "பித்தா" எனத் தொடங்கிப் பாடுமாறு முதல் அடி எடுத்துக் கொடுத்தார். அருள் ஞானம் பெற்ற சுந்தரர் இறையருள் அமுதமாகப் "பித்தா பிறை சூடிப் பெருமானே" என்ற தொடரில் பாடினார். இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பெற்ற சுந்தரர் இறைவனின் திருவுளப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சிவாலயங்களைத் தரிசித்துப் பாடல்கள் பாடியும் பல அற்புதங்களைச் செய்தும் வந்தார். இவ்வாறு உலா வந்தபோது திருவாரூரை வந்தடைந்தார்.

திருக்கைலாயத்தில் இறைவனின் பணிப்பின் பேரில் உமையவளின் சேடியான கமலினி என்பவர் திருவாரூரில் கணிகையர் குலத்தில் பிறந்தார். இவர் பரவையார் என்னும் பெயருடன் திருவாரூரில் ஆலயசேவையில் இணைந்திருந்தார். இறை பணியாக ஆலய நந்தவனத்தில் தோழிகளுடன் அதிகாலையில் நறுமலர் கொய்து மாலைகளாக்கிக் காலைப் பூசைக்காக வழங்கி வந்தார். முற்றொடர்பு சார்பாக பரவையார் பூமாலைகளுடன் ஆலயத்துட் செல்லவும் சுந்தரர் அவ்வாலய தரிசனத்துக்காக அவ்விடம் வரவும் இறையருள் கைகூட்டியது. இருவரதும் மையல் இறைவனாலும் ஆலய பக்தர்களாலும் திருமணத்தில் நிறைவடைந்தது.

திருமணத்தில் இணைந்த சுந்தரர் பரவையாரின் வாழ்வாதாரம் மற்றும் நாடிவரும் அடியார்களுக்கு அமுது படைத்தல் போன்ற தேவைகளுக்காகப் பெருநிதியம் தேவைப்பட்டது. தேவைக்கேற்பச் சுந்தரர் இறைவன் மீது பாடி விண்ணப்பித்துத் தமது தேவைகளை நிறைவு செய்தார். தொடர்ந்து சுந்தரரின் தரிசனை உலா ஞாயிறு என்னும் ஊரை நாடியது.

இத்திருவூரில் வாழ்ந்த விவசாயப் பெருங்குடியில் (முன்னர் திருக்கைலாயத்தில் சுந்தரருடன் தொடர்புடைய அனிந்திதை என்பவர்) சங்கிலியார் அவதரித்திருந்தார். சங்கிலியாரும் சிறுவயதிலிருந்தே இறைபக்தி பூண்டவர். பருவப் பெண்ணாகி இறைவழிபாட்டுக்கென ஆலயஞ் சென்றபோது சுந்தரர் இவர் மீது மையல் கொண்டதால் திருமணம் நடைபெற்றது. இறைவனைச் சாட்சியாக வைத்து சங்கிலியாரின் ஊரிலிருந்து பிரிந்து செல்வதில்லை என்ற நிபந்தனை மீறப்பட்டபோது சுந்தரரின் இரு கண்களும் மறைந்தன. இறைவனை வேண்டிப் பாடியதால் கண்பார்வை பெற்றார்.

சுந்தரர் திருக்கைலையில் பெற்ற வினைப்பயன் நிறைவு கண்டது. தமிழகமெல்லாஞ் சென்று சகல சிவாலயங்களையும் தரிசித்தார். பலவிடங்களிலும் பாடல்கள் பாடிய வண்ணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமேஸ்வர தரிசனையையும் கிடைக்கப் பெற்றார். அக்காலத் திற் பிரயாண வசதிகளற்ற காரணத்தால் அக்கரையில் நின்றே இக்கரையிலமைந்த மாதோட்ட நகரின் திருக்கேதீஸ்வரரை ஞானக் கண்ணால் போற்றி வழிபட்டு "நத்தார்படை" என்ற தொடரில் பாடியருளினார்.

தொடர்ந்து வடதிசை நோக்கிச் சிவாலயங்களுக் கெல்லாஞ் சென்று பாடிப் பணி செய்தார். தமிழக வடகரைக்கு அப்பாற் செல்ல பிரயாண வசதியற்ற நிலையில் தமது ஞானக் கண்ணால் இமாலயச் சாரலிலமைந்த பஞ்சநாதத்தலங்களிலொன் றும் பன்னிருஜோதி(சுயம்பு) லிங்கத் தலமுமான கேதாரநாதேஸ் வரரை வேண்டிப் பாடினார். இவ்வற்புதமான பாடற் பதிகம் பெறற்கரிய பாடலாக அமைந்தது. இப்பாடலொன்றைப் பின் அறிவோம்.

சுந்தரர் கைலையில் செய்த தவறுக்காகப் பூலோகத்திற் பிறந்து எண்ணியதை அனுபவித்ததும் ஆட்கொள்வோம் என இறைவன் இயம்பியபடி விதிக்கப்பட்ட காலம் நிறைவு கண்டது. இறைவன் தேவர்கள் மூலம் வெள்ளை யானையில் சுந்தரரை அழைப்பித்தார். சுந்தரர் தமது பதினெட்டாம் வயதில் பூலோகத் திலிருந்து கைலை சென்று தம்பணி ஏற்றார்.

இறைவன் ஆலாலசுந்தரரை இப்புவியில் அவதரிக்கப் பணித்தாலும் உயர் குலமாம் வேதியர்குலத்திற் தோன்ற வைத்தார். செல்வநிலையில் வாழ்வதன் பேரில் அரச போகத்தில் வாழ வைத்தார். சுந்தரரின் வேண்டாத் திருமணபந்தத்தை "ஓலை" கொடுத்துத் தடுத்தாட்கொண்டார். முதல் அடியெடுத்துக் கொடுத்துப் பாடவைத்தார். உரிய பெண்களைத் திருமணஞ் செய்வித்தார். அவரைத் தோழராகவும் நேசித்தார்.

அழகு மிகுந்ததால் சுந்தரர் எனவும் அரச போகத்தில் வாழ்ந்ததால் ஏனைய சமய குரவர்கள் போலல்லாது அரச முடியுடனும் ஆடை அலங்காரங்களுடனும் காணப்பட்டார். இறைவன் சுந்தரரை இப்புவியில் அவதரிக்கச் செய்து தமது சிவநெறி துலங்கப் பாட வைத்தார். சுந்தரர் பல்லாயிரம் பாடல் கள் பாடியபோதும் இன்று எமக்கு நூறு பதிகங்கள் கொண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1026 பாடல்களே கிடைத்தன. இப்பாடல்கள் "திருப் பாட்டு" என வழங்கப்படுகிறது. சுந்தரரின் 1026 பாடல்களும் பன்னிரு திருமுறைகளுள் ஏழாம் திருமுறையாக இடம் பெறுகிறது.

உலகமுய்ய இறையருள் அமுதமாகச் சுந்தரரின் பாடல்கள் சைவ உலகிற்குக் கிடைத்த பேறாகும்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருக்கேதாரத் தேவாரப் பதிகம்

பண் : நட்டபாடை 7ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ் போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ் மேலுற நின்றான்திருக் கேதார மெனீரே.

திருச்சிற்றம்பலம்.

* * * * *

## திருவாசகம் தந்தருளிய மாணிக்கவாசகர் சுவாமிகள்



பலநூற்றாண்டுகளுக்கு முன் கருணைக் கடலான இறைவன் உத்தர கோசமங்கை திருத்தலத்தில் இலவந் திகை மரத்தடியில் ஆயிரம் முனிவர் களுக்கு வேதாகமங்களின் விளக்கத்தை உபதேசித்துக்கொண்டிருந்தார்.

அதே சமயம் இலங்கையில் இராவணனின் மனைவி மண்டோதரி சிவபூசை செய்து கொண்டிருந்தாள். அவள் இறைவன் மீதிருந்த பக்தி மேலீட்டினால் இறைவனைப் பூரண பொலிவுடன் காட்சி தருமாறு வேண்டினாள். தமது பக்தையின் வேண்டுதலுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் இலங்கைக்குச் செல்ல உள்ளதை முனிவர்களுக்குத் தெரிவித்தார். மேலும் தாம் சென்று வரும் வரை வேதாகமங் களைக் காவல் காக்குமாறும் தெரிவித்தார். அதைக் கேட்டதும் முனிவர்கள் இறைவனை வணங்கி எம்பெருமானே இராவணன் கொடியவன்; தாங்கள் அவ்விடம் சென்றால் ஏதும் தீங்கு நேரிடலாம் எனக்கூறினர்.

இதை உணர்ந்த இறைவன் தாம் அங்கு செல்கையில் இராவணன் தம் மீது தீண்டினால் இங்குள்ள கங்கையில் தீப்பிளம்பு தோன்றும் என்று கூறியதும் இறைவன் மறைந்தருளி னார். இறைவன் பூர்வாங்கப் பொலிவுடன் மண்டோதரிக்குக் காட்சி தந்தார். மண்டோதரியும் மிக மகிழ்வுடன் பக்தி மேலிட வணங்கி இன்புற்றாள். அச்சமயம் இராவணன் அவ்விடம் வந்தான். இறைவன் அவ்விடத்தில் ஒரு பச்சிளம் பாலகனாக உரு மாறினார். அழகிய அப்பிள்ளையைக் கண்ட இராவணன் இது யார் பிள்ளை எனக்கூறி அப்பிள்ளையை வாரி எடுத்து மார்போ டணைத்தான். அதே நேரம் கங்கையில் தீப்பிளம்பு தோன்றவும் ஒருவரை விட ஏனைய 999முனிவர்களும் தீப்பிளம்பில் பாய்ந்து மாண்டனர். சற்று நேரத்தில் உமாதேவியார் ஒரு முனிபத்தினி வேடத்தில் வந்து அது தன்பிள்ளை எனக்கூறிப் பிள்ளையை இராவணனிடமிருந்து வாங்கிச் சென்றார்.

பின்னர் இறைவன் உத்தரகோச மங்கைத் தலத்தை வந்தடைந்தபோது 999முனிவர்களும் இறந்தநிலையில் காணப் பட்டனர். ஒருவர் மட்டும் வேதாகமங்களைக் காவல் புரிந்த வண்ணம் காணப்பட்டார். அச்சமயம் இறைவன் முனிவரை நோக்கி இப்பணி செய்த காரணத்தினால் பூவுலகில் பிறந்து மாணிக்கவாசகர் என்னும் பெயருடன் திருவாசகம் பாடி மகிழ் விக்குமாறு தெரிவித்தார். மேலும் உரிய காலத்தில் வந்து தடுத் தாட்கொண்டு திருவாசகத்தின் பெருமையை உலகறியச் செய்வோம் என்றார். அந்த முனிவர் பூமியில் அவதரித்து இறைவ னால் இட்ட பணியை ஏற்க முன்வந்தார். இவர் தமது திருவாசகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் குறிப்பிட்ட பின்வரும் வரிகளுக்கமைவாக பல நூறு வருடங்கள் வரை பல்வேறு பிறவிகளிலும் உருவெடுத்தார். திருவாசகத்தில் அமைந்த வரிகள்,

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்
செல்லாநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன்"

என்று பாடினார்.

மேற்காட்டிய எல்லாப் பிறவிகளையும் கடக்க பல நூற்றாண்டு காலம் நீடித்தது. இறைவனின் திருவுளப்படி நிறைவு செய்யும் காரியத்தைக் காரணமாக வைத்து வேதியர் குலத்தவராக திருவாரூரில் அவதரித்தார். பெற்றோர் இவருக்குத் திருவாதவூரர் எனத் திருநாமஞ் சூட்டித் தமது மரபுப்படி வேண்டிய சடங்கு களையும் செய்து வேதாகமங்களையும் போதித்தனர். இறைவ னின் ஆணைப்படி அவதரித்த திருவாதவூரர் தமிழ் வேதாகமங் களை நன்கு கற்றுத் தேறி குல ஆசாரத்தையும் சிறப்பித்தார். வாலிபப் பருவத்துக்கு முன்பே பல துறைகளிலும் நன்கு கற்றுத் தமது புலமையை வெளியிட்டார்.

திருவாதவூரரின் கல்வித்தகைமைகளுடன் விவேகத்தை யும் கண்ட அருமத்தனபாண்டிய மன்னன் திருவாதவூரரை அழைத்துச் சென்று மந்திரிப் பதவியை வழங்கினான். திருவாத வூரரின் கடமையுணர்வும் திறமையும் முதலமைச்சர் பதவி பெற உதவியது. கடமையே கண்ணாக இருந்த திருவாதவூரர் அரச படைக்கான குதிரைகளை வாங்கும் பணியேற்று பெருநிதியையும் எடுத்துக் கொண்டு திருப்பெருந்துறையை நாடினார்.

சிவப்பரம்பொருளின் திருவிளையாடல் கைகூடிய வேளை திருப்பெருந்துறையில் குருந்தை மரத்தின் கீழ் இறைவன் குரு வடிவில் பலசீடர்களுக்குச் சைவ போதத்தினை உபதேசித்துக் கொண்டிருந்தார். திருவாதவூரர் முற்பிறவித் தொடரும் இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யருளின் கவர்ச்சியும் பக்குவமான மனநிலையும் துணை நிற்கவும் தமது (குதிரை வாங்கச் சென்ற) பணியை மறந்தார். தன்னையும் மறந்து ஞானகுருவின் கால்களில் வீழ்ந்து தன்னையும் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணித்தார். திருவாதவூரரின் பக்குவ நிலையறிந்த குரு வடிவில் இருந்த இறைவன் அவருக்குத் திருவடி தீட்சை தந்து ஆட்கொண்டார். திருவாதவூரர் மணிமணியான பாடல்களால் குருவின் பெருமையை ஓதினார். இறைவன் திருவாதவூரரை நோக்கி மணியான அரிய சொற்களால் பாடியதால் "மாணிக்க வாசகன்" என்னும் நாமத்துடன் தொடர்ந்து பாடுமாறு பணித்தார்.

திருப்பெருந்துறையில் ஆலயப் பணி மற்றும் பாடும் பணியிலிருந்த திருவாதவூரரை அரசன் அழைத்துக் குதிரை வராததைக் காரணமாக வைத்துத் தண்டித்தான். தமது முன்னாட் பணியை மறந்து இறைபணியில் இணைந்தமைக்காக பாண்டியனால் தண்டிக்கப்பட்டார். கொடூரமாகத் தண்டிக்கப்பட்ட போது அத் தண்டனை இறைவனுக்கே உரியதெனக் கூறித் தமது மெய் வருத்தத்தையும் தாங்கிய வண்ணம் பாடிக் கண்ணீர் சொரிந்தார்.

இறைவன் தன் பக்தன் அனுபவிக்கும் கொடிய தண்டனைக்காக வையை நதியைப் பெருகச் செய்தார். நாட்டின் பாதுகாப்பிற்காக குடிமக்கள் மூலம் ஆற்றங்கரையில் அணைகட்ட அரசன் உத்தரவிட்டான். ஒரு ஏழை மூதாட்டியின் பங்கை அளந்து கட்ட எம்பெருமான் கூலியாளாக வந்து வேலையைத் திருப்தியாகச் செய்யாது பாண்டியனால் பிரம்படிபட்டார். இவ்வரிய திருவிளையாடல் மூலம் கவலையின் வேதனையைத் தாங்கியும் இறைவனை நெஞ்சிருத்தியும் பாடிய திருவாசகம் தித்திக்கும் தெள்ளமுதான இறையருளின் அமுதமாக அமைந்தது. மாணிக்கவாசகர் தில்லையில் இறைவனை வழிபட்டபோது இறைவனின் அற்புதத்தையும் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகப் பெருமான் பல திருவாசகப் பாடல்களையும் திருக்கோவையாரையும் பாடினார். இவரால் பாடப்பெற்ற பல பதிகங்களின் இனிமையால் இறைவன் மாணிக்கவாசகரின் முன் முதிர்ந்த வேதியர் வடிவத்தில் வந்து மாணிக்கவாசகர் பாடிய (திருவாசகம் 823, திருக்கோவையார் 400) பாடல்களனைத்தை யும் மீண்டும் பாடுவித்து அதை தமது கையால் எழுதினார். எழுதிய ஏட்டுச் சுவடியின் பிற்பாகத்தில் "திருவாதவூரன் பாட அழகிய சிற்றம்பலமுடையான் எழுதியவை" என எழுதப்பெற்ற ஏட்டுத் தொகுதி அச்சிவாலய வாசற் படியில் வைக்கப் பட்டிருந்தது. மறுநாட் காலை வியப்புடன் அதனைக் கண்டெடுத்த தில்லைவாழ் அந்தணர்கள் விரித்துப் பார்த்தனர். மாணிக்கவாசகரை அணுகி அப்பாடலின் பொருள் யாதெனக் கேட்டனர். வாதவூரர் அவர்களை அழைத்துச் சென்று பொன்னம்பலத்தில் நடராசப் பெருமானைக் காண்பித்து பாடலின் பொருளும் இதுவே என்று கூறினார். அங்கு தோன்றிய சோதியுட் கலந்த மாணிக்கவாசகர் இறையருளின் சிறப்பையும் நோக்க வைத்தார்.

இவர் பாடிய 823 திருவாசகம் மற்றும் திருக்கோவையார் நானூறும் (1023 பாடலும்) பன்னிரு திருமுறையில் எட்டாவது திருமுறையாக அமைந்து அலங்கரிக்கிறது.

திருவாசகம் பன்னிரு திருமுறைகளிலும் தெவிட்டாத தெள்ளமுதமாக ஒப்பற்ற தீஞ்சுவைப் பாடலாக அமைந்தது. இதனை அன்று முதல் வியப்புறாதவர் எவருமில்லை. "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்னும் சிறப்புடையதாகும். மாணிக்கவாசகரைத் தடுத் தாட்கொண்ட இறையருள் அமுதமாகவே திருவாசகம் இன்றும் இனிமை பயக்கிறது. திருவாசகத்தை நன்கு கற்றுணர்ந்த இராமலிங்க வள்ளலார் பின்வருமாறு புகழ்ந்தார்.

"வான்கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனித்ததுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகளின் பல பாடல்களும் ஏற்கனவே வெளிவந்தபோதும் சுவையான ஒரு பாடலையும் அறிந்து இன்புறுவோம்.

**திருப்படையாட்சி** **தில்லை**

கண்களிரண்டும் அவன்கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு
கடைப்பதும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு
மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படும் ஆயிடிலே.

## அச்சோப்பதிகம்


முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தனெனக்
கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

❋❋❋❋❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் ஆணைப்படி திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார்



காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகத்தொழில் செய்து செல்வச் சீமானாக வாழ்ந்தவர் பட்டினத்தடிகள். இவரின் கணக்கப்பிள்ளையாகப் பணியாற்றியவர் சேந்தனார்.

பட்டினத்தார் மகனால் வழங்கப்பெற்ற காதற்ற ஊசியினால் தமது வாழ்வு, சொத்து, சுகம் யாவற்றையுந் துறந்து பரதேசியானார். அப்போது அவர் சேந்தனாரை அழைத்து "எனது சொத்துக்களை எவர் வந்தாலும் எடுத்துச் செல்ல உதவ வேண்டும்" எனக்கூறிச் சென்றார். உடையவன் சொற்படி சொத்துக்கள் பிறரால் எடுத்துச் செல்லப்பட்டன. இதனையறிந்த அவ்வூர் மன்னன் சொத்துக்கள் யாவும் தனக்கே சேர வேண்டியவை எனவும் அதைக் கவர்ந்து செல்ல உதவியதால் சேந்தனைச் சிறையிலிட்டான். மேலும் சேந்தனின் சொந்த உடமைகளையும் எடுத்துச் சென்றான். சேந்தனின் மனைவி தம் மகனையும் அழைத்துச் சென்று அயலூரில் தஞ்சமடைந்தாள்.

சில நாட்கள் செல்லப் பட்டினத்தார் சிவாலய தரிசனத்தின் பேரில் திருவெண்காட்டீசராலயத்துக்கு வருகை தந்தார். இதனையறிந்த சேந்தனின் மனைவியும் மகனும் அங்கு வந்து பட்டினத்தாரை வணங்கினர். சேந்தனாரை அரசன் சிறையிலடைத்தான். அவரை மீட்டுத்தர வேண்டுமெனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிந்தனர். பட்டினத்தார் அவர்களை ஆலயத்துக்குட்கூட்டிச் சென்று இறைவனை நோக்கிப் பாடும்போது சேந்தனைச் சிறையிலிருந்து மீட்டுத் தருமாறு வேண்டினார்.

இறைவன் விநாயகரை நோக்கினார். விநாயகர் பெரிய யானையின் வடிவத்துடன் சிறைக்குச் சென்று சிறையை உடைத்துச் சேந்தனைத் தனது துதிக்கையால் அணைத்து வந்து பட்டினத்தார் முன்விட்டுச் சென்று மறைந்தார். அச்சமயம் சேந்தன் பட்டினத்தாரை வணங்கிச் "சுவாமி இமைப் பொழுதில் என்னைச் சிறையிலிருந்து மீட்டீர்கள். அதேபோல என்னைப் பிறவிப் பெருங்கடலிலிருந்தும் உய்ய உதவுங்கள்" என விண்ணப் பித்தார். சேந்தனாரின் பக்குவ நிலையை அறிந்த பட்டினத்தார் "சேந்தா உன் குடும்பத்துடன் சிதம்பரஞ் சென்று காட்டில் விறகு வெட்டி அதனை விற்றுச் சீவிப்பாயாக. மேலும் தினமும் ஒரு சிவனடியாருக்கு அமுதளித்தால் உன் எண்ணம் நிறைவேறும்" என்றார். அதைக் கேட்டதும் சேந்தனார், மனைவி, மகன் மூவரும் பட்டினத்தாரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி விடைபெற்றனர்.

சேந்தனார் குருவின் உபதேசப்படி தில்லைக் காட்டில் தினமும் விறகு வெட்டி விற்ற பணத்தில் வேண்டிய பொருட்களை வாங்கி வந்தார். தினமும் தாம் உண்ண முன் ஒரு சிவனடியாரைத் தேடி அழைத்து வந்து அமுது வழங்கி வந்தார். இறைவனின் திருவுளப்படி ஒரு வாரமாகப் பெரு மழை கொட்டியதால் சேந்தனார் விறகு வெட்டச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஏற்கனவே நாளாந்தம் விற்று எஞ்சி வந்த விறகினைச் சேமித்து வைத்திருந்தார்.

அன்று கிடைத்த நிதிக்கமைவாக சிவனடியாருக்கு உணவு வழங்கி வருவதன் பேரில் களியமுதுக்கான பொருட்களை வாங்கி வந்தார். இல்லாளும் விருப்புடன் களியைத் தயாரித்தார். சேந்தனார் சிவனடியாரைத் தேடி அழைத்து வரச் சென்றார். இறைவன் தமது திருவிளையாடலால் பக்தனை மேலும் சோதிக்காது தாமே பசியால் வாடிய முதிர்ந்த சிவனடியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடத்தில் தெருவோரச் சத்திரத்தில் காத்திருந்தார். சேந்தனார் சிவனடியாரைக் கண்டதும், அவரைப் பணிந்து தமது இல்லமேகி அமுதுண்ணுமாறு வேண்டினார். சிவனடியார் சேந்தனாருடன் சென்றார்.

தமதில்லத்தில் சிவனடியாரை அன்புடன் வரவேற்றுப் பாதபூசை செய்த பின் களியமுதைப் படைத்தார். சிவனடியார் சேந்தனாரின் பக்தியுடன் கலந்த களியமுதை விருப்புடன் புசித்து இன்புற்றார். எஞ்சிய சிறுபகுதியை இலையுடன் சேர்த்து மடித்துத் தமது சால்வையுள் வைத்துக்கொண்டு சேந்தனாரிடம் விடைபெற்றார். சேந்தனாரின் மனைவி மகன் மூவரும் சட்டியில் எஞ்சிய களியை உண்டதும் உறங்கிவிட்டனர்.

இறைபக்தி மிகுந்த சோழ மன்னன் சிதம்பர ஆலய இரவு காலப் பூசைமணி கேட்ட பின்பே தாமுண்டு உறங்கும் நியதியுடையவர். அன்று நடுநிசியாகியும் பூசைமணி கேட்காத தால் உண்ணாமல் உறங்கிவிட்டார். இறைவன் மன்னனின் கனவிற் தோன்றி மன்னா "எனது பக்தன் சேந்தனின் அழைப்பை ஏற்று களியமுது உண்ணச் சென்றேன். இதனால் நேரம் பிந்தி விட்டது" என்று கூறியதுடன் மறைந்துவிட்டார். பொழுது விடிந்ததும் இறைவனுக்குக் களியமுது படைத்த சேந்தனைத் தரிசிக்க வேண்டுமென மன்னன் ஆவலுற்றார்.

தில்லைக்குச் சென்றபோது திருமுற்றம் எங்கணும் களியமுது சிதறிக் கிடந்தது. களியமுதின் நறுமணம் வீசியது. தாம் கண்ட அடியார்களிடமும் தில்லையில் வாழும் அந்தணர் களிடமும் இது பற்றியும் தமது கனவைப் பற்றியும் கூறினார். யாவரும் சேந்தனாரைத் தாமும் தரிசிக்கும் ஆவலைத் தெரிவித்தனர்.

சிலநாட்கள் செல்ல மார்கழித் திருவாதிரை மகோற்சவ காலத் தேரோட்ட நன்னாளில் வீதியுலா வரும் தேர் நகர மறுத்தது. அப்போது "நம்மைக் குறித்துச் சேந்தன் பல்லாண்டு பாடினால் தேர் ஓடும் என இறைவனின் அசரீரி ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய தினம் தரிசிக்கவென ஆலயத்துக்கு வந்த சேந்தனார் தேரடிக்கு வந்து இறைவனை வணங்கித் திருப்பல்லாண்டுப் பாடல்களைப் பாடினார். தேர் எதுவித தடையுமின்றி ஓடத் தொடங்கியது. இறையருளும் சேந்தனாரின் பக்தியான திருப் பல்லாண்டுப் பாடலும் அங்கு கூடியிருந்த அனைவரதும் ஆசையை நிறைவேற்றியது. யாவரும் சேந்தனாரைப் போற்றியதுடன் இறைவனின் கருணையையும் எண்ணிப் புகழ்ந்தனர்.

அன்று தொட்டு வருடாவருடம் மார்கழித் தேர் உற்சவத் தன்று ஆடல் பிரானுக்குக் களியமுது படைக்கும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. சேந்தனாரின் திருத்தொண்டை வியந்த சந்தான ஆச்சாரியார் கொற்றங்குடி வள்ளலார் பின்வருமாறு பாடினார்.

"அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அமுதை
அவிழ்ந்த மனத்தோடு அளித்தது - அவிழ்ந்தசடை
வேந்தனார்க்கு இன்னமுதம் ஆயிற்றே மெய்பத்தி
சேந்தனார் செய்த திறம்"

அரிபிரமேந்திராதி தேவர்களும் தேடியும் தேடொணாத இறைவன் திருவடியை வணங்கிப் பாதபூசை செய்து தமது இல்லத்தில் களியமுதை உவந்தளித்துத் தமது பக்தியால் இன்புற்றவர் சேந்தனார். சேந்தனார் வறுமையில் வாடியபோதும் நாள் தவறாமல் சிவனடியாருக்கு அமுது படைக்கும் பேற்றினை அடைந்தவர். தமது ஞானகுருவாகிய பட்டினத்தாரின் வழி காட்டலில் உள்ளன்போடு பக்தி பூண்டவர். இதனால் இவரது களியமுதை விரும்பித் தாமும் உண்டு எஞ்சியதைத் தமது ஆலய முன்றலில் தம்மை நாடும் தேவபக்தர்கள் உண்ணும் நோக்கில் வைத்திருந்தார். இறைவனால் வைக்கப் பெற்ற திருவமுதாம் களியமுதினைத் தேவர்கள் விரும்பி ஏற்றும் மிகுதி பல்கிப் பெருகிக் காணப்பட்டமை எம் பெருமானின் திருவிளையாடலே யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலு இறைவன் சேந்தனாரின் புகழை யாவரும் அறியும் வண்ணம் தேரை ஓடாது நிற்பாட்டியும் சேந்தனார் திருப் பல்லாண்டு பாட ஓடியமையும் இறையருளேயாகும். சேந்தனார் ஏற்கனவே திருவிசைப்பாவும் பாடியுள்ளார். ஒன்பதாந் திருமுறை யில் ஒன்பது அடியார்கள் பாடிய **29** பதிகங்களில் **303** பாடல்கள் இடம்பெறுகின்றன. திருவிசைப்பாவுடன் பதின்மூன்று பாடல் கள் கொண்ட திருப்பல்லாண்டும் அடங்கும். சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு இறைவனின் வேண்டுதலுக்கமையவே பாடப் பெற்ற இறையருள் அமுதமாகவே அமைந்துள்ளது. சேந்தனாரின் திருப்பல்லாண்டுப் பாடலில் ஒன்றை மட்டும் நோக்குவோம்.

"ஆரார் வந்தார் அமரர்குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

❋❋❋❋❋

## காரைக்கால் அம்மையார்



சோழவள நாட்டின் கடலோர நகரமாகத் திகழும் காரைக்கால் வணிகப் பெருமக்களின் தாயகமாகும். இப் புண்ணிய பூமியில் வணிகர் திலகமான தனதத்தன் என்பவர் சிவநெறியின் பக்தியுடன் செய்தொழிலும் பிரகாசித்துச் செல்வச் சீமானாக வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையருள் மிக்க இவ்வணிகரின் ஆர்வத்தினால் பெரு நிதியின் அதிபதியானார். இறையருளும் திருவருளும் மிகுந்த இவ்வணிகரின் திருமகளாக அவதரித்தவர் புனிதவதியார். இவர் பெற்றோரின் பக்திக்கேற்பத் தாமும் சிறுவயதிலிருந்தே சிவ பக்தியில் மூழ்கியிருந்தார். வளர்ந்து திருமணப் பருவம் வந்ததும் பெற்றோர் நாகபட்டினத்திலுள்ள பரமதத்தன் என்னும் வணிகருக்கும் புனிதவதிக்கும் திருமணஞ்செய்து வைத்தனர். இவர்களுக்கென காரைக்காலில் புதியதோர் இல்லமமைத்து இல்லறம் பேண வைத்தனர்.

பரமதத்தன் தமது வணிகத் தொழிலில் நன்கு பிரகாசித் தான். புனிதவதி இல்லத்தின் ஒளி விளக்காக அமைந்த சைவநெறி பேணும் குடும்பப் பெண்ணானாள். தம்மை நாடும் சிவனடியார் களுக்கு உணவளித்து இறைவனைப் போற்றி வந்தாள். ஒருநாள் பரமதத்தனிடம் வணிக நிலையத்துக்கு வந்த அன்பரொருவர் இரு மாங்கனிகளை வழங்கினார். பரமதத்தன் அக்கனிகளைத் தமது இல்லத்துக்கு அனுப்பி வைத்தார். புனிதவதியார் அக்கனிகளை வாங்கி வைத்துள்ளார். சிறிது நேரத்தில் பசியால் வாடிய சிவனடியார் ஒருவர் புனிதவதியாரை நாடியதும் அவரை உபசரித்து இன்சொல்லால் ஆதரவு தந்தார். சோற்றுக்கான கறிகளின் சமையல் முடியாததால் சோற்றுடன் கணவனாற் தரப்பட்ட மாங்கனி ஒன்றை வெட்டிச் சேர்த்துப் பரிமாறினாள். அவற்றை உண்ட சிவனடியார் புனிதவதியாரை வாழ்த்திவிட்டு விடைபெற்றார்.

மதிய உணவுக்காகப் பரமதத்தன் இல்லம் ஏகியதும் புனிதவதியார் மதிய உணவைப் பரிவுடன் பரிமாறினார். அதே சமயம் கணவன் தம்மால் அனுப்பப் பெற்ற மாங்கனியொன்றைத் தருமாறு கோரினார். புனிதவதியார் அம்மாங்கனியையும் அன்புடன் பரிமாறினார். அக்கனியின் நறுஞ்சுவை அடுத்த கனியையும் கோர வைத்தது. புனிதவதியார் தமது கணவனின் அனுமதியின்றிச் சிவனடியாருக்கு வழங்கியது தவறு என்றும் கணவனின் விருப்பத்துக்காக உதவுமாறு இறைவனை வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டினார். அடியார்க்குதவும் இறைவன் அருளால் புனிதவதியாரின் கையில் ஒரு மாங்கனி கிடைத்தது. புனிதவதியார் அக்கனியைக் கணவனிடம் தந்தாள். அக்கனி அற்புதமான தெய்வீகச் சுவை யானதால் அக்கனியைப் பற்றி மனைவியிடம் கேட்டான். புனிதவதியார் இக்கனி இறையருளால் கிடைத்ததாகவும் கூறித் தனது நிலையையும் தெரிவித்தார்.

இதைக்கேட்ட பரமதத்தன் உனது இறைவனிடம் வேறொரு கனியையும் வாங்கித் தருமாறு கூறினான். புனிதவதியார் வீட்டினுள் சென்று தன் நிலையைக் கூறித் தனக்கு உதவுமாறு வேண்டினார். இறையருள் மீண்டுமொரு மாங்கனியை வழங்கியது. புனிதவதியார் அக்கனியைக் கணவனிடம் தந்ததும் அக்கனி தானாகவே மறைந்துவிட்டது. பரமதத்தன் இறை யருளின் சிறப்பையும் தன் மனைவியின் பக்தியையும் உணர்ந்து தடுமாறினான். புனிதவதி ஒரு தெய்வ மகளிராவார். இவருடன் இல்லறம் பேண முடியாது என உணர்ந்து தான் ஒதுங்கி வாழ எண்ணினான். சில நாட்கள் சென்றதும் தான் கடல் வழிச் சென்று வணிக மூலம் பொருளீட்டுவதன் பேரில் செல்வதாகக் கூறிச் சென்றான். சென்றவிடத்தில் நற்பொருளீட்டி வணிகர்குலப் பெண்ணொருவரை மணந்து அங்கேயே வாழ்ந்தான். அவர்களுக்குப் பிறந்த பெண் குழந்தைக்குப் புனிதவதியெனப் பெயரிட்டு வாழ்ந்தனர்.

இதே சமயம் புனிதவதியார் தன் கணவன் நீண்ட நாட்களாகியும் திரும்பாதபோதும் கற்புநெறியுடன் இறை வனையே சிந்தித்து வாழ்ந்தார். இவரின் சுற்றத்தார் பரமதத்தன் இருக்குமிடத்தையறிந்து புனிதவதியாரைப் பல்லக்கில் அழைத்துச் சென்று கணவனிடஞ் சேர்க்க எண்ணினர். சுற்றத்தவரும் பெண்களும் புடைசூழ பரமதத்தனின் இடத்தை நாடினர். புனிதவதியார் வருவதையறிந்த பரமதத்தன் தனது மனைவி மகளுடன் எதிர் கொண்டு வந்து அவரின் கால்களில் வீழ்ந்து வணங்கினான். புனிதவதியாரை வணங்கியதைக் கண்ட உறவினர் மனைவியின் காலில் கணவன் வணங்குவது முறையல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றனர். பரமதத்தன் இவர் ஒரு தெய்வீகப் பெண் யாவரும் இவரை வணங்குங்கள் என்றான். இதைக் கேட்ட புனிதவதியார் இறைவனை வேண்டித் தாம் கணவனுக்காகவே இளமையைக் காப்பாற்றியதாகவும் தனது உடலை மாற்றிப் பேயுருவமாக வழங்குமாறும் கேட்டார்.

இறைவனின் திருவுளப்படி புனிதவதியார் பேயுருவாக மாறினார். அங்கு குழுமியிருந்தோர் பயந்து அகன்றனர். வானத்திலிருந்து மலர் மாரி பொழிந்தது. தேவதுந்துபிகள் முழங்கத் தேவர்களும் முனிவர்களும் ஆர்ப்பரிக்கத் தேவ கணங்களும் வந்துகூடப் பேரொலி ஒலித்தது. அச்சமயம் புனிதவதியார் இறைவனை வணங்கித் தமது ஞானத்தால் உணர்ந்து இறைவன் திருவடியை அடைய முற்பட்டார்.

பேயுருவத்துடன் மனோவேகத்தில் திருக்கைலாயத்தை நாடினார். அண்மித்ததும் பெருமைசேர் இறைவன் முன் காலால் நடக்காது தலையால் நடந்து சென்றார். இதனைக் கண்ட உமையாள் எம்பெருமானே! இங்கு தலையால் நடந்துவரும் என்புருவின் பக்திதான் என்னே! என்றார். அப்போது இறைவன் இவள் எனது பக்தை. இவ்வுருவத்தை விரும்பிப் பெற்றவள். எம்மை நாடி வருகிறாள் என்று கூறினார். அம்மையார் தம்மை அண்மித்ததும் இறைவன் "அம்மையே" என்றார். அவரும் "அப்பா" என்றழைத்தார். அச்சமயம் இறைவன் அவரை நோக்கி இங்கு வந்த நீ வேண்டுவது யாது? எனக் கேட்டார். அம்மையார் இறைவனை வணங்கி "இறைவரே! என்றும் இறவாமை வேண்டும். மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் நான் மறவாதிருக்க வேண்டும். தர்ம வடிவமே! நீர் ஆனந்த நடனம் ஆடும்போது அடியேன் உன் திருவடியின் கீழிருந்து பாட வேண்டும்" என்று விண்ணப்பித்தார்.

அப்போது இறைவன் அருள் சுரந்து "அம்மையே தென்திசையில் பழையனூர் திருவாலங்காட்டில் நாம் நடனமாடுவோம். அத்திருநடனத்தை நீ கண்டு இன்புற்று எப்பொழுதும் எம்மைப் பாடிக்கொண்டே இருப்பாயாக" எனத் திருவாய் மலர்ந்தருளினார். இறைவனின் பரிசுரையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதும் அம்மையார் பெருமகிழ்வோடு தலையால் நடந்து திருவாலங்காட்டை அடைந்தார். அங்கு இறைவன் அண்டமுற நிமிர்ந்தாடும் திருநடனக் காட்சியைக் கண்டு தரிசித்தார். இறைவன் ஆணைப்படி மூத்ததிருப்பதிகத்தைப் பாடினார்.

**திருவாலங்காட்டுச் சிறப்பு**

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவ யிற்றுப்
பங்கி சிவந்திரு பற்க ணீண்டு பாடுயர்
நீள் கணைக் காலொர் பெண்பேய்
தங்கி யலறி யுலறு காட்டிற்
றாள்சடை யெட்டுத் திசையும் வீசி
யங்கங் குளிர்ந்தன லாடு மெங்க
ளப்ப னிடந்திரு வாலங்காடே
ஒப்பினை யில்லவன் பேய்கள் கூடி
யொன்றினை யொன்றடித் தொக்களித்துப்
பப்பினை யிட்டுப் பகண்டை
பாடிருந் தந்நரி யாழ மைப்ப
வப்பனை யணிதிரு வாலங்காட்டு னடிகளைச்
செடிதலைக் காரைக் காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்ப மெய்துவரே

**இறைவனின் திருநடனச் சிறப்பு**

எட்டி யிலவ மீகை சூரை காரை படர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சேர்ந்த குடர் கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல்வழி கட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழகனாடுமே

இவ்வாறு காரைக்காலம்மையார் தமது பக்திநெறியாலும் இறையருளினாலும் தமது பணியாகப் பின்வரும் பல பாடல்களைப் பாடியருளினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அற்புதத்திருவந்தாதி - 100 பாடல்
2. திருவீரட்டை மணிமாலை 20 பாடல்கள்
3. அம்மை மூத்த திருப்பதிகம்
திருத்தலத்தைப் போற்றியது - 11 பாடல்கள்
திருநடனத்தைப் போற்றியது - 11 பாடல்கள்

காரைக்கால் அம்மையாரின் வாழ்வும் வளமும், முன் செய்த தவப்பயனும் இறைபக்தியை நாட வைத்தது. மானிட வடிவில் காண முடியாத தவப்பேற்றினை எண்ணிப் பேய் வடிவத்தை வேண்டிப் பெற்றவர். இறைவனால் "அம்மையே" என அழைக்கப் பெற்றவர். அவரின் வேண்டுதலில் அம்மையாருக்குத் திருநடனக் காட்சி தந்து பாட வைத்தவர். அம்மையாரின் பாடல்கள் பன்னிரு திருமுறைகளில் பதினோராந் திருமுறையில் அமைந்துள்ளது. இவரின் சிறப்பால் பெரிய புராணத்தில் 63 நாயன்மார்களிலுள்ள மூன்று பெண்ணடியார்களில் தலைசிறந்தவராகவும் அற்புதங்கள் நிறைந்தவர்களாகவும் அமைந்து இறையருள் அமுதம் தந்து எம்மை உய்வித்தார்.

❋❋❋❋❋

## பொள்ளாப் பிள்ளையாரின் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பி

"சோழவள நாடு சோறுடைத்து" என்பது ஆன்றோர் மொழியாகும். இப்புண்ணியபூமியில் அமைந்துள்ள நாரையூர் நனிசிறந்த ஞானத்தின் உறைவிடமாகும். இப்புனிதமான திருவூரிலே அருள் பாலிப்பவர் பொள்ளாப்பிள்ளையார். பொள்ளா என்றால் உளியால் செதுக்கப்படாது சுயமாகவே தோன்றிய பிள்ளையார். நாளடைவில் பொள்ளாப் பிள்ளையார் என்ற பெயர் பொல்லாப் பிள்ளையார் என மருவியது. இவர் அநாதியானவர். யாவரையும் கருணையினால் உய்விப்பவர்

இப்பிள்ளையாரை அவ்வூர் ஆதி சைவ குலத்தவர் நியமம் தவறாது ஆசார சீலராய் உள்ளன்போடு பூசை செய்து வழிபடுபவர். இவரின் புதல்வரான நம்பி என்பவர் பெற்றோரின் வழிகாட்டலில் தமது குல மரபுப்படி உரிய வயதுக்குரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குகள் செய்யப் பெற்றவர். இவர் சிறந்த கல்வியறிவும் ஆகம பயிற்சியும் பெற்று வந்தார். இவரின் சிறுவயதில் தந்தை அயலூருக்குச் செல்ல வேண்டியதால் பொள்ளாப் பிள்ளையாரின் பூசையை நிறைவேற்றுமாறு நம்பிக்குத் தெரிவித்தார். நாள் தோறும் தந்தை பிள்ளையாரின் நைவேத்தியத்தை ஆலய பூசைக்குக் கொண்டு செல்வார். வரும்போது வெற்றுப் பாத்திரத்துடனேயே வருவதை நம்பி ஏற்கெனவே கண்டுள்ளார். பிஞ்சுப் பாலகனான நம்பி அந்த நைவேத்தியத்தைப் பிள்ளையாரே உண்டார் எனச் சிந்தித்தார். தந்தை சொற்படி நம்பி வீட்டிலிருந்து நைவேத்தியத்துடன் சென்று முறைப்படி பூசை செய்து நைவேத்தியத்தையும் படைத்தார். பிள்ளையார் அதனை உண்ணாததால் மனம் வெதும்பி அழுதார். தமது பூசை முறையில் பிழைகள் இருக்கெனத் தந்தை கோபிப்பார் என எண்ணித் தமது தலையை ஆலயக் கருவறைச் சுவரில் மோதினார். அப்பாலகனின் கருத்தறிந்த பிள்ளையார் பாலகனை நோக்கி "நம்பி பொறு" என்று கூறியதுடன் நைவேத்தி யத்தை முழுமையாக உண்டுவிட்டார்.

நம்பி பாடசாலைக்குச் செல்பவர். இப்பூசையினால் நேரம் பிந்திவிட்டது. பாடசாலையில் தண்டனை பெற வேண்டுமே என்றெண்ணி மீண்டும் அழுதார். உடனே பிள்ளை யார் நம்பியைச் சாந்தப்படுத்தித் தாமே ஞான அறிவை ஊட்டினார். வீடு சென்ற நம்பி தமது அனுபவத்தைச் சொல்லியதும் பெற்றோர் அவரின் கூற்றையும் செயலையும் பரிசோதிக்க எண்ணினர். தந்தையார் மறுநாட்காலை நம்பியைத் தொடர்ந்து சென்று ஆலயத்தில் மறைந்திருந்தார். பூசை முடிவில் பிள்ளையார் நைவேத்தியத்தை உண்டதை நேரிக் கண்டு பெரு மகிழ்வடைந்தார். இவ்வரிய நிகழ்வை பெற்றோரிருவரும் பகிர்ந்து இன்புற்றனர்.

தொடர்ந்து நம்பி பொள்ளாப் பிள்ளையாருக்கு உள்ளன் புடன் பூசை செய்தும் குறுகிய காலத்தில் பிள்ளையாரிடம் ஞான உபதேசம் பெற்றுத் தலைசிறந்த ஞானியானார். நம்பி பிள்ளை யாரின் கருணையால் ஞானம் பெற்றதால் தமது நன்றிக்கடனாக அரியதோர் பாடல் பாடினார். பாடல் பின்வருமாறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரகமகிழ் சோலை வியல்நாரை யர்முக்கண்
அரகமகிழ் அத்திமுகத்தான்"

என்னும் முதற் பாடலைப் பாடிப்பிள்ளையாரை நினைந்து மேலும் பல பாடல்களைப் பாடினார். நம்பியால் ஆட் கொள்ளப்பட்ட ஞானதேசிகன் நம்பியாண்டார் நம்பி என அழைக்கப்பெற்று யாவராலும் போற்றப்பெற்றார். இவரின் ஞானமும் அற்புதங்களும் யாவராலும் வியந்து பெருமதிப்பளிக் கப் பெற்றது. இச்செய்தி இராஜராஜசோழனுக்கும் எட்டியது. அச்சமயம் சோழ மன்னனான இராஜராஜசோழனின் அரண் மனைக்கு வந்த சிவனடியார்கள் அற்புதமான தேவாரங்களை ஓதிய வண்ணம் வந்தனர். இப்பாடல்கள் இறைவனின் பக்தியை ஏற்படுத்தும் இனிய தமிழிசையாக இருந்தன. மன்னன் இப்பாடல் கள் எங்கிருந்து வந்தவை என அறிய முற்பட்டான். இச் சந்தேகத்தை நம்பியாண்டார் நம்பியிடமே கேட்டறிய எண்ணினான்.

இராஜராஜசோழன் விநாயகருக்குப் படைக்கவென அவருக்கு விருப்பமான பழவகை, சிற்றுண்டி அடங்கலாக இருபத் தொரு வகைப் பொருட்களுடன் பால், இளநீர், கரும்பு, தாம்பூலம் பூசைக்குரிய பூக்கள் யாவற்றையும் பரிசுத்தமாக எடுத்துக் கொண்டு தாமும் உள்ளன்போடு ஆசார சீலராக சேனைகள் புடை சூழ நாரையூரில் நம்பியாண்டார் நம்பியைக் கண்டு வணங் கினான். தாம் கொண்டு சென்ற பூசைப் பொருட்களைப் பிள்ளை யாருக்குப் படைக்குமாறு பணிந்தான். நம்பி அப்பொருட்களை அன்புடன் வாங்கி மீண்டும் அதனைச் சுத்தஞ் செய்து யாவற்றை யும் முறைப்படி பிள்ளையாருக்குப் படைத்துப் பூசித்தார். பிள்ளையாரும் தமக்குப் படைக்கப் பெற்ற யாவற்றையும் உண்டார். இதனைக் கண்ணுற்ற மன்னன் பெருமகிழ் வடைந்தான்.

மீண்டும் நம்பியை வணங்கிய மன்னன் தேவாரத் திருமுறைகள் இருக்கும் இடத்தைப் பிள்ளையாரிடம் கேட்டறியு மாறு வேண்டினான். நம்பியாண்டார் நம்பி மன்னனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்தை வ...யமாகக் கூறினார். நம்பியின் வேண்டுதலை ஏற்ற விநாயகர் தில்லையில் கனகசபையின் மேற்கிலுள்ள அறையில் பூட்டி வைக்கப்பட்டதாகத் தெரிவித்தார். மேலும் திருத் தொண்டர்களின் வரலாற்றையும் பிள்ளையார் நம்பிக்கு எடுத்துரைத்தார்.

நம்பியும் சோழமன்னனும் தில்லைக்குச் சென்று ஆசார சீலராய் ஆலயத்துட் சென்றதும் நம்பி ஆடல்பிரானை வேண்டிப் பாடினார். அங்கிருந்த தில்லைவாழ் அந்தணர்கள் தேவாரப் பதிகங்கள் யாவும் அறைக்குள் வைத்து வேதத்தினாற் பூட்டப் பெற்றது. தேவாரங்களைப் பாடியவர்கள் நேரில் வந்து திருமுறை களை எடுக்கலாம் என்ற நியதியும் இருப்பதாகத் தெரிவித்தனர். அப்போது நம்பி தேவாரம் பாடிய மூவரதும் திருவுருவப் படங் களுடன் வந்து இறைவனை வேண்டிப் பாடினார். அந்தணர்கள் திருக்கதவைத் திறந்து விட்டனர். அறையினுட் சென்றதும் நம்பியும் அரசனும் திருமுறைகளை ஆராய்ந்தனர். பெரும்பகுதி கறையான் புற்று மண்ணால் மூடப்பட்டிருந்தன. பழுதில்லா வற்றை எடுத்தபின் மன்னனும் நம்பியும் பெருந்துயரடைந்தனர். அப்போது இறைவன் “இக்காலத்துக்குத் தேவையானவையை விட ஏனையவற்றைக் கறையான் புற்று மண்ணால் மூடச் செய்தோம்” என அசரீரியாகச் சொன்னார். இருவரும் கிடைத்த வற்றை நிரைப்படி நோக்கியபோது திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் 384 பதிகங்களைக் கொண்ட 4159 பாடல்களும் அப்பர் சுவாமிகள் பாடிய 313 பதிகங்களைக் கொண்ட 3045 பாடல்களும் சுந்தரர் பாடிய 100 பதிகங்களைக் கொண்ட 1026 பாடல்களும் கிடைத்தன. யாவும் மொத்தமாக 747 பதிகங்களைக் கொண்ட 8230 பாடல்களையும் எடுத்துக் கொண்டனர். இப் பாடல்களில் திருஞானசம்பந்தரின் பாடல்கள் முதல்மூன்று திருமுறைகளாகவும் அப்பர் பாடியவை 4, 5, 6ஆம் திருமுறை களாகவும், சுந்தரர் பாடிய பாடல்களை ஏழாம் திருமுறையாகவும் நம்பி வகுத்தார்.

இத்திருமுறைகளுக்கான பண் அடைவைத் திருஎருக்கத் தம் புலியூர் ஆலயத்துக்குச் சென்று இறைவனிடம் கேட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் வழிகாட்டலில் உரிய பண் அடைவைப் பெற்ற பின் இராஜராஜசோழ மன்னனின் உதவியுடன் திருமுறைகள் யாவும் செப்பேடுகளில் பதிக்கப் பெற்றன. இதனால் இத்திருமுறைகள் இன்றுவரை எமது சைவசமய அறிவை விருத்தி செய்ய வழிகாட்டு கின்றன. இவ்வேழு திருமுறைகளும் "அடங்கன் முறை" எனப்படும்.

இவ்வாறு பெறற்கரிய சேவையை ஆற்றிய நம்பியாண் டார் நம்பி பல பாடல்களையும் நூல்களையும் எழுதிச் சைவ உலகிற்கு அர்ப்பணித்தார். பொள்ளாப் பிள்ளையார் போதித்த ஞானக் கல்வியால் சைவ உலகிற்கே அரும்பணியாற்றினார். பிள்ளையார் திருத்தொண்டர்களின் வரலாற்றை உபதேசித்ததும் அவ்விபரங்களை ஒன்றுதிரட்டி "திருத்தொண்டர் திருவந்தாதி" என்னும் நூலை எழுதினார். இந்த நூலில் முதற்பாடல் இதுவாகும்.

"பொன்னி வடகரைசேர் நாரையூரிற் புழைக்கைமுக
மன்ன னறுபத்துமூவர் பதிதேம் மரபுசெயல்
பன்னஅத் தொண்டத் தொகைவகை பங்குமந் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதந் துணைத்துணையே"

நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த கோயில் திருப் பணியார் விருத்தம் பின்வருமாறு,

"புண்ணிய னேஎன்று போற்றி செயாது புலன் வழியே
தண்ணிய னேற்கினி யாதுகொலாம்புகல் என்னுள் வந்திட்டு
அண்ணிய னேதில்லை அம்பலவாஅலர் திங்கள் வைத்த
கண்ணிய னேசெய்ய காமன் வெளுப்பக் கறுத்தவனே"

இப்பாடல் பதினொராம் திருமுறையில் அமைந்துள்ளது.


பொள்ளாப்பிள்ளையாரை உள்ளன்போடு பூசித்து வணங்கி யும் ஞானக்கல்வியையும் பெற்று ஞான சீலரான நம்பியாண்டார் நம்பி தாம் பெற்ற இறையருளால் செயற்கரிய செயல்களாகப் பல அற்புதங்களையுஞ் செய்தார். தமது ஞான அறிவு பெற்ற நன்றிக் கடனை நிறைவு செய்து அமுதமான பாடல்களைப் பாடியும், திருமுறைகளை வகுத்தும் அரும்பணியாற்றினார்.

❋ ❋ ❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதற்ற ஊசியால் பரதேசியான பட்டினத்தடிகள்



தமிழகத்தின் காவிரிப்பூம்பட்டினம் பல்வளங்களும் மலிந்த திருநகரமாகும். இப்பூமியில் அவதரித்து உலகியல் வாழ்வையும் இறை தத்துவங்களையும் தோற்றுவித்த பட்டினத் தார் என்னும் சித்தரின் வரவால் பல அற்புதங்கள் மலிந்து சிவநெறி பிரகாசிக்கவும் ஏதுவானது.

இப்பட்டினத்தாரின் முற்றொடர்பை நோக்குவோம். தேவலோகத்தில் சகல சம்பத்துக்களுக்கும் அதிபதியாய் விளங்கிய குபேரன் தமது பணிச்சிறப்பினால் கர்வமுற்றான். தமது ஜீவாத்மாக்கள் யாவரையும் ஆட்டுவிக்கும் ஆடல்பிரான் குபேரனின் கர்வத்தை அடக்கச் சித்தங் கொண்டார். இதன் பேறாக வானவீதியில் சிவசக்தியாக உலாவரும்போது இறைவன் குபேரனையும் அழைத்துச் சென்றார். குபேரனின் கர்வத்தை மேலும் உயர்த்த எண்ணி வானிலிருந்தே பரத கண்டத்தின் ஆலயங்களையும் நோக்க வைத்தார். அச்சமயம் ஆலயங்களின் சிறப்பான தரிசனத்தைக் காண விரும்பிய குபேரனைப் பூமியிற் பிறந்து யாவற்றையும் கண்டு வருமாறு இறைவன் பணித்தார்.

தமிழகத்தில் அன்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் இறையருளின் பேறாக திருவும் கல்வியும் இறையருளும் வணிகத் தொழில் விருத்தியும் காணப் பெற்றது. இப்புனித பூமியில் சிவநெறி போற்றும் வணிகர் திலகமான சிவநேசகுப்தர் என்பவர் மகப்பேறு வேண்டித் திருவெண்காட்டீசரை வழிபட்டார். சிவனேசகுப்தர் ஞானகலை தம்பதியினரின் வேண்டுதலும் குபேரனின் மறுவாழ்வு நியதியும் வந்தமைந்தன. திருவெண் காட்டீசரின் திருவருளால் சிவனேசரின் பேறாக ஓர் ஆண்மகவு கிடைத்தது. இப்பிள்ளைக்கு "திருவெண்காடர்" எனப் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டி அன்புடன் வளர்த்தனர். சிறப்புடன் வாழ்ந்த திருவெண்காடரின் தந்தை மகனின் சிறுவயதிலேயே மறுமை யெய்தினார்.

திருவெண்காடரை அவரின் தாயார் உரிய வயதில் கல்வி கற்க வைத்தார். இவரின் கல்விச்சிறப்புடன் திருவெண்காட்டில் சிவதீட்சை பெற்றுச் சிவஞான சாத்திரங்களையும் சிவ பக்தியை யும் கற்றார். இதனால் அன்னதானம் முதலான அறப் பணிகளை யுஞ் செய்தார். தொடர்ந்து தமது குலத்தொழிலான வணிகத்தை யும் உரிய முறைப்படி வளர்த்தார். இறையருளின் பேறாக இவரின் அயராத உழைப்பினால் பெருநிதியின் உறைவிடமானார். இவர் தமது பதினாறாம் வயதில் சிவகலை என்னும் பெண்ணுடன் இல்லறத்தில் இணைந்தார்.

இறைவனின் திருவுளப்படி தமது முப்பது வயதுவரை செய்தொழில் மூலம் பெருநிதியை வளர்த்தபோதும் மகப் பேறின்றியே வாழ்ந்தனர். இறையருளின் நாட்டம் திரு வெண்காடரின் தேட்டத்துக்கமைய திருவிடை மருதூர் இறைவனால் இறையம்சம் பொருந்திய ஆண்மகவு கிடைத்தது. இப்பிள்ளைக்கு "மருதபிரான்" எனப் பெயர் சூட்டி அன்புடன் வளர்த்து வந்தனர். திருவெண்காடர் தேடிய பெருநிதிச் சிறப்பால் பட்டினத்துச் செட்டியார் என அழைக்கப்பெற்றார். இவரிடம் தமக்கு நிதி தேவைப்படும்போது அவ்வூர் அரசன் அவ்வப்போது கடன் வாங்கிய சிறப்பையும் பெற்றார்.

திருவெண்காடரின் முற்றவப் பயனால் இறையருட் செல்வமும், பொருட் செல்வமும் மருதவாணீஸ்வரரின் அருளாற் கிடைத்த மழலைச் செல்வமும் மன நிறைவைத் தந்தன. மகனுக்கு உரிய வயதில் நற்கல்வியையும், நற்சிந்தனையையும் இறையருள் நாட்டத்தையும் வியாபார நுணுக்கங்களையும் பெற உதவினார். மகன் மருதபிரான் பதினாறு வயது வந்தபோது இறைவன் திரு விளையாடலைக் காரணமாக வைத்துக் கடல் கடந்து வியாபாரத் துக்குச் செல்ல முன் வந்தார். திருவெண்காடர் தமது செல்வம் சேர்க்கும் பெரு விருப்புடன் வேண்டியன செய்து உதவினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலில் ஏற்றப்பட்ட வணிகப் பொருட்களும் வணிக நண்பர்களும் உடன் செல்லக் கப்பல் வணிகத்துறையான தீவக மொன்றை அடைந்தது. மருதபிரான் தமது பொருட்களால் கிடைத்த பெருநிதியத்தை அறப் பணியில் செலவிட்டார். தந்தை யின் பிறப்பை அவரே உணர வேண்டுமென்ற நியதிக்கேற்ப எரு விறாட்டிகளையும் தவிட்டினையும் மூடைக்கணக்கில் வாங்கிக் கப்பலில் ஏற்றிக் காவிரிப் பூம்பட்டினத்தையடைந்தார். திருவெண்காடர் நிதி பெருக்கும் அவாவினால் துறைமுகத்துக்கே சென்று பொருட்களைப் பார்வையிட்டதும் நிலைதடுமாறினார். தன் மகனுக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டதோ எனச் சினந்து ஒரு எரு விறாட்டியை வீசி எறிந்தார். அது உடைந்து மாணிக்கக் கற்களாகவும் தவிடு பொன்னாகவும் காட்சி தந்தன. வியப்பினால் மகனைத் தேடினார். வீட்டுக்குச் சென்றார். மகனைக் காணவில்லை. மகன் தந்ததான ஓலைப்பெட்டியை மனைவி கொடுத்தாள். ஆவலுடன் அப் பெட்டியைத் திறந்தார். அதனுள் ஒரு காதற்ற ஊசியும் ஒரு ஓலை நறுக்கும் தென்பட்டது. ஓலையை ஆவலுடன் படித்தார்.

அவ்வோலையில் "காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே" என எழுதப்பட்டிருந்தது. இதனால் இறைவனின் திரு விளையாடலான தடுத்தாட்கொள்ளும் செயலாக ஞானநிலை ஏற்பட்டது. பரதேசியானார். தமது இல்லறம், பொருள், சுகம் யாவற்றையும் துறந்து துறவியாக வெளியேறத் தலைப்பட்டார். கணக்கப்பிள்ளையான சேந்தனாரை அழைத்து தாம் தேடிய சிவ சொத்தினைச் சிவனடியார்களுக்கே வழங்குமாறு கூறினார். மனைவி மற்றும் தாயார் தடுத்தபோது அவர்களுக்கு ஆறுதல் சொன்னார். மேலும் தாயாரிடம் அவரின் இறுதிக் கடமைகளை நிறைவு செய்த பின்பே ஊரை விட்டுச் செல்வதாகக் கூறினார். அவ்வூர்ப் பொது மண்டபத்தையடைந்து தவநிலையிற் காணப் பட்டார். பசிவந்தவேளை இல்லங்கள் தோறும் திருவோடேந்திப் பிச்சை ஏற்று உண்டார். யாவரும் செல்வச் சீமான் நிலைமாறிப் பிச்சை ஏற்பதை உணர்ந்து மனித வாழ்வையும் இறையருளையும் வியந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது காலத்தில் தாயார் இறந்தார். இறையருளால் உணர்ந்ததும் தான் குடியிருந்த கோயிலுக்குக் கொள்ளி சொருகப் போவதாகக் கூறியவண்ணம் மனித வாழ்வின் தத்துவங்களையும் யாக்கை நிலையாமையையும் ஒரு தாயின் சிறப்பையும் போற்றிப் பாடிய வண்ணம் மயானத்தை அடைந்தார். தாயின் பூத உடலைப் பச்சை வாழை மட்டைகளினால் அமைத்த சிதையில் வைத்து திருவருளை வேண்டிப் பாடினார். தீ வளர்ந்து பூதவுடலைத் தகனஞ் செய்தது. தாயின் பெற்ற கடனைத் தீர்த்ததும் பரதேசிக் கோலத்தில் ஆலய தரிசனைக்காகப் புறப்பட்டார்.

முதலில் திருவிடை மருதூர் சென்று சிவவழிபாட்டுடன் பாடல்கள் பாடி வழிபட்டார். தொடர்ந்து சிவாலய தரிசனைக் காக பல்வேறிடங்களுக்குச் சென்றார். இவரின் சிவாலய தரிசனம் தொடர்ந்தபோது வடநாட்டில் மாகாளம் என்னும் திருத் தலத்தில் நிலை கொண்டது. அங்குள்ள விநாயகராலயத்தை தமது தியான நிலைக்கு ஏற்றதாக உணர்ந்தார். இவரின் சித்து மகிமை பல சிறப்புகளை அடைய இறையருள் பாலித்தது. இரவு பகல் நோக்காது விநாயகர் ஆலயத்தில் யோக நிலையில் இருந்தார். ஒரு நாள் இரவு அவ்வூர் அரசனான பத்திரகிரியாரின் அரண்மனையில் திருடிய திருடன் தமது எண்ணம் சிறப்பாக அமைந்ததால் முத்துமாலை ஒன்றை விநாயகருக்குக் காணிக்கை செலுத்த எண்ணினான். இருளானதால் விநாயகரின் சிலை எண்றெண்ணிப் பட்டினத்தாரின் மீது முத்துமாலையைப் போட்டுச் சென்றான். மறுநாட்காலை திருடரைத் தேடி வந்த காவலர்கள் முத்துமாலை அணிந்திருந்த பட்டினத்தாரை அழைத்துச் சென்று மன்னனின் முன் நிறுத்தினர். விசாரணை ஏதுஞ் செய்யாத மன்னன் கழுமரத் தில் ஏற்றுமாறு பணித்தான். காவலர்கள் பட்டினத்தாரைக் கழுவில் ஏற்ற முற்பட்டபோது அவர் சிவசிவ என உச்சரித்தார். என்செயலாவது யாதொன்றில்லைத் தெய்வமே என்ற பாடலைப் பாடினார். அப்போது கழுமரம் தீப்பற்றி எரிந்தது.

இத்தகவலை அறிந்த மன்னன் தனது தவறை உணர்ந்து அவரது காலில் விழுந்து மன்னிக்குமாறு வேண்டியதுடன் தானும் துறவு பூண்டு அவரைத் தொடர்ந்து சென்றான். இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதங்கள் பல செய்ததுடன் பட்டினத்தாரின் தரிசனை உலாவில் திருவெண்காட்டீசரை அடைந்தார். அவ்விடத்தில் சேந்தனார் அவ்வூர் அரசனின் சிறையிலிருப்பதை அறிந்து இறையருளால் சிறையிலிருந்து விடுவித்தார். மேலும் சேந்தனார் முத்தியடையும் மார்க்கத்தினையும் கூறினார்.

தமது முத்தியை நாடி இறைவனை வேண்டினார். முதிய வேதியரின் வடிவில் வந்த இறைவன் ஒரு கரும்பைக் கொடுத்து நுனிக்கரும்பு எப்போது இனிக்கிறதோ அத் தலமே முத்தித் தலமாகுமென்று கூறி மறைந்தார். தொடர்ந்து திருவொற்றியூரில் நுனிக்கரும்பு இனித்தது. தாம் முத்தியடையும் தலம் இதுவென அறிந்து அச்சூழலில் கடற்கரையில் விளையாடிய சிறுவர்களுடன் தாமும் விளையாடினார். தமது சித்து மகிமையாற் பல திருவிளை யாடல்களைப் புரிந்தார். சலவைத் தொழிலாளரின் சலவை செய்யும் பெரிய சால் ஒன்றினால் தம்மை மூடுமாறு கூறினார். அவர்கள் மூடிய பின் வேறோர் இடத்தில் காட்சி தந்தார். இறுதி யில் மூடிய சிறுவர்கள் சற்று நேரஞ் செல்லத் திறந்தபோது அவரின் உடல் சிவலிங்க வடிவில் இருந்தது. யாவரும் வந்து பார்த்து வியந்து வணங்கினர். இவ்விடத்தில் அரியதோர் ஆலயம் அமைத்து வழிபட்டனர். இன்றுவரை இவ்வாலயம் சிறப்பாக இயங்குகிறது.

பட்டினத்தார் இறைவனின் நியதிப்படி தமது கடமை களை நிறைவு செய்து இறைவனை அடைந்தார். தமிழ் மக்கள் தமது தூய சைவ சமயத்தைச் சிறப்புடன் அனுசரிக்கவும் மனித வாழ்வின் தத்துவங்களையும் யாக்கை நிலையாமையையும் பெற்ற தாயின் பெருமைகளையும் தாய்க்குச் செய்யவேண்டிய கடமை களையும் தவறாது பணியாற்ற வழிகாட்டினார்.

இறையருளால் பல சீருஞ் சிறப்பும் நிதிவளமும் மிகுந்து வாழ்ந்தவரை இறைவன் தடுத்தாட்கொண்டது போல உணர்த்தி யதால் துறவு பூண்டார். இறையருளால் சித்தராகிப் பல அற்புதங் களையுஞ் செய்தார். இறைவனின் பெருமையைக் குறிக்கும் அநேக பாடல்களைப் பாடி அதன்படி உணர்ந்து ஒழுகுமாறு வாழ்ந்தும் காட்டினார். இச்சித்தரின் பாடல்களால் நாம் இறையருளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகவும் ஒழுகவும் பேருதவியாய் அமைந்துள்ளன. இறைவனின் நியதிப்படி யாவும் சிறப்பாக நடந்தன. இறையருள் அமுதமான இப்பாடல்களை நாமனைவரும் கற்றுணர்ந்து சைவ சமயஞ் சிறக்க ஒழுகுவோமாக. பட்டினத்தார் இறைவனைப் பணிந்து பாடிய பாடலையும் அறிவோம்.

வாளால் மகவரிந் தூட்டவல் லேனல்லன்; மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேனல்லன்; தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடத் தப்பவல் லேனல்லன்; நானினிச் சென்று
அளாவதெப்படி யோதிருக் காளத்தி அப்பனுக்கே.

❋❋❋❋❋

## பெரிய புராணத்தை அருளிச்செய்த சேக்கிழார் சுவாமிகள்



பல வளங்களும் செறிந்து சிவநெறி, கல்வி, கலைகளாற் சிறந்து விளங்கும் தொண்டை நாட்டின் புலியூர்க் கோட்டத்தில் அமைந்த குன்றத் தூர் பார் போற்றும் புண்ணிய பூமி யாகும்.

சோழ மன்னன் நாடு சிறக்கும் விவசாயத்தை மேம்படுத்த ஏனைய இடங்களிலிருந்தும் நற்குடிப் பிறந்த சிறந்த குடிமக்களைக் குடியமர்த்தி நீதி தவறாது அரசாண்டான். இங்கு குடியமர்ந்த பலர் தமது கல்வித் திறமையால் அரச பணியாற்றினர். குன்றத்தூரில் சேக்கிழார் குடியில் வாழ்ந்த சகோதரர்களான அருள்மொழி இராமத்தேவர், பாலறாவாயர் ஆகிய இருவரும் தமது குல ஆசாரப்படி சிவநெறியிலும் கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கினர். இதனால் வாய்மை, நற்பண்பு, செயலாற்றல் போன்றவை இச்சகோதரர்களிடம் உறைவிடமானது. இவர்கள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேக்கிழார்" என்னும் குடிப் பெருமையை உலகறியச் செய்யவே அவதரித்தனர். இவர்களின் சிறப்பை அறிந்த அநபாயச்சோழன் அருள்மொழி இராமதேவரைத் தமது தூதுவர்கள் மூலம் பல சீர்வரிசையுடன் அழைத்துத் தமது மந்திரியாக்கினான். அவரின் செயற்றிறன் அவரது குடிமரபான "சேக்கிழார்" என்றே அழைக்க வைத்தது. சேக்கிழார் தமது பதவிக்கேற்ப நாட்டு நிர்வாகப் பணியுடன் மன்னனுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கி வந்தார்.

சோழ மன்னனின் நீதி தவறாத நல்லாட்சியில் யாவும் அமைதியாக அமைந்ததால் மன்னன் தமது பொழுதுபோக்காக ஐம்பெருங் காப்பியங்களிலொன்றான சீவகசிந்தாமணி என்னும் நூலை வாசித்து இன்புற்றான். இதனைக் கண்ணுற்ற சேக்கிழார் சமண முனிவர்களால் ஆக்கப்பெற்ற இச்சீவகசிந்தாமணி சிற்றின்ப போதனைகளையே தருகின்றன. இதனைப் படிப்பதனால் நாட்டு மக்களும் நன்னெறியுடன் வாழ முடியாது. பேரின்பத்தைத் தரும் நூல்களைக் கற்றால் இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தை அனுபவிக்கலாம் என இயம்பினார். சேக்கிழாரின் சொற்கேட்ட அநபாயச்சோழன் சிவகதை கூறும் நூல்கள் வரலாறுகளைக் கூறுமாறு கேட்டான்.

சேக்கிழார் மன்னனை நோக்கி அரசே சிவபெருமானின் அடியவர்களான திருத்தொண்டர்கள் பலரின் வரலாறுகளையும் அறியலாமெனக் கூறினார். மேலும் இத்தொண்டர்களின் பெருமையைப் பாடுமாறு சிவபிரானே சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அடியெடுத்துக் கொடுத்தார். அதனால் சுந்தரர் திருத்தொண்டர்களின் திருப்பாட்டைப் பாடினார். நம்பி யாண்டர் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலைப் பாடினார். இப்பாடல்களை யாவரும் பாராட்டினர் இவைகள் எம்மவரின் ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவ வல்லன என்றார்.

இதைக் கேட்டதும் அநபாயச்சோழன் சேக்கிழார் மூலம் திருத்தொண்டர்களின் வரலாற்றைக் கூறக் கேட்டதும் பக்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோங்கக் கேட்டு இன்புற்றும் அவனுடைய ஆவல் குறைய வில்லை. இத்திருத்தொண்டர்களின் வரலாறுகளைத் திரட்டி ஒரு காவியமாக எழுதுமாறு பணித்தான். சேக்கிழார் தான் தில்லைக்குச் சென்று அம்பலக்கூத்தின் ஆசியுடன் தன்பணியைத் தொடங்குவதற்காக அனுமதியும் பெற்றுச் சென்றார்.

தில்லையை அடைந்த சேக்கிழார் ஆசாரம் பேணி நடராசப் பெருமானை வணங்கித் தம்பணியைத் தொடர உதவு மாறும் ஆரம்பிக்கும் தொடக்கத்தையும் கேட்டு விண்ணப்பித் தார். அப்போது "உலகெலாம்" என்னும் ஒலி அசரீரியாகக் கேட்டது. அச்சமயம் தில்லை வாழ் அந்தணர்கள் சிவனடியார்கள் யாவரும் இறைவனின் திருவருளை வியந்தனர். சேக்கிழார் இறைவன் கூறிய முதல் அடியை வியந்து அடியார்கள் புடைசூழ ஆலயத்தின் ஆயிரங்கால் மண்டபத்தை அடைந்தார். இறைவனை மீண்டும் வணங்கித் திருத்தொண்டர் புராணம் என்னும் காவியத்தை எழுதத் தொடங்கினார். சோழ மன்னன் வேண்டிய சகல தேவைகளையும் நிறைவு செய்தான். சேக்கிழார் இறைவன் திருவருளால் தவநெறி தழுவி நெஞ்சில் உறைந்த கூத்தர் பிரானின் தூண்டுதலால் திருத்தொண்டர்களின் வரலாற்றை ஒரு வருட காலத்தில் எழுதி நிறைவு செய்தார். இந்த நூலின் நிறைவை அறிந்த சோழ மன்னன் தனது பரிவாரங்கள் புடைசூழ தில்லை நகரை வந்தடைந்தான்.

தில்லைவாழ் அந்தணர்களும் சேக்கிழாரும் மற்றும் அங்குள்ளோரும் அரசனை வரவேற்றனர். அரசன் சேக்கிழாரின் தெய்வீகமான அங்கப் பொலிவைக் கண்டதும் அற்புதப் பணியாற்றியதை வியந்தார். அப்போது "வையம் காக்கும் வளவனே! நாம் உலகெலாம் என்ற அடியெடுத்துக் கொடுக்க என் அன்பரான சேக்கிழார் திருத்தொண்டர் வரலாற்றை விபரமாகப் பாடியுள்ளார். இக்காவியத்தைக் கேட்பாயாக" என அசரீரி ஒலித்தது. அத்துடன் சிலம்பொலியும் ஒலித்தது. இதனைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்ட யாவரும் மெய் சிலிர்த்தனர். அநபாயச்சோழ மன்னன் சேக்கிழாரின் பாடல்களை நாட்டவர்கள் யாவரும் கேட்டின் புறும் வண்ணம் யாவருக்கும் அழைப்பு விடுத்து மிகச் சிறப்பான விழாவுக்கு ஏற்பாடு செய்தான்.

தில்லைத் திருத்தலம் நன்கு சுத்தம் செய்து உள்ளும் புறமும் நன்கு அலங்கரிக்கப்பெற்றது. தில்லைவாழ் அந்தணர்கள் வேதமோதி யாக பூசை செய்தனர். சிவனடியார்கள் ஓதுவார்கள் திருமுறைகளை ஓதியும் இறைவனை ஏற்றியும் போற்றியும் பாடி மகிழ்ந்தனர். மக்கள் கூட்டம் பல்கிப் பெருகியது. தில்லைத் திருச் சிற்றம்பலத்தின் முன்னிலையில் வேதியர்கள் ஆசார சீலத்துடன் மேடையமைத்து மேடை மீது சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்தை வைத்தனர். அதற்கு தூப தீபம் காட்டி வணங்கினர். அநபாயச்சோழன் சேக்கிழாரை நோக்கி திருத்தொண்டர் புராணத்தை வாசித்து பொருள் கூறுமாறு வணங்கினான்.

அநபாயச்சோழன், வேதியர்கள், கற்றோர்கள், மூதறிஞர் கள், பெருந்திரளான அடியார்கள் முன்னிலையில் சேக்கிழார் தமது திருத்தொண்டர் புராண காவியத்திலிருந்தும் அறுபத்து மூவர் மற்றும் தொகையடியார்களின் வரலாற்றினைக் கூறி அதன் பொருளையும் நயம்பட உரைத்தார். சிவபிரானின் விருப்பு நாளான சித்திரைத் திருவாதிரை அன்று ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட காலம் நிறைவு செய்து அடுத்த வருடச் சித்திரைத் திருவாதிரை அன்று நிறைவேற்றப்பட்டது. சேக்கிழார் தமது புராண காவியத்தின் கதைகளையும் விளக்கத்தையும் ஏற்ற இடத்தில் திருமுறைகளை ஓதியும் தொடர்சொற்பொழிவாக நடத்தினார். பொதுமக்கள் அடியார்கள் யாவரும் நாள் நேரம் பாராது வந்து கேட்டின்புற்றனர். இதனை நன்கு அவதானித்த அநபாயச்சோழன் அகமகிழ்வினால் இறைவனை வணங்கி அரங்கேற்றப்பட்ட திருத்தொண்டர் புராண ஏட்டுச் சுவடுகளைப் பட்டாடையால் சுற்றிப் பொற்தட்டத்தில் வைத்துத் தமது பட்டத்து யானை மீது ஏற்றிச் சேக்கிழாரையும் யானை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதிருத்தினான். தாமும் யானை மீது சேக்கிழாரின் பின்னிருந்து இரு கைகளாலும் சேக்கிழாருக்குச் சாமரம் வீசிப் பெருமைப் படுத்தினான். ஆலய வீதி எங்கணும் வாழை, மகர தோரணங் களாலும் மாலைகளாலும் அலங்கரித்து பக்திநெறி பூண்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் பேருவகையுடன் ஆடியும் பாடியும் மகிழ யானை மீது சேக்கிழார் ஆலய வீதியுலா வந்தார்.

வீதியுலா திருச்சிற்றம்பலத்தின் முன்றலில் முடிவுற்றதும் காவியச் சுவடுகள் ஆடல் பிரானின் முன் வைக்கப்பெற்றது. அச்சமயம் சோழ மன்னன் சேக்கிழாரை வாழ்த்தி வணங்கி "தொண்டர் சீர்பரவுவார்" என்னும் திருநாமஞ்சூட்டி ஞான முடியும் அணிவித்துப் பணிந்து நின்றான். இவ்வாறு பல சிறப்புகளையும் கொண்ட திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரிய புராணம் ஏற்கெனவே வகுக்கப்பெற்ற பதினொரு திருமுறைகளுடன் பன்னிரண்டாவது திருமுறையாகவும் வகுக்கப்பெற்றது. இதனால் சேக்கிழாரைப் பாட வைத்த அநபாயச்சோழன் சிறப்புற்றான்.

பெரிய புராணத்தில் அறுபத்துமூன்று நாயன்மார்கள் மற்றும் ஒன்பது தொகையடியார்கள் வரலாறுகள் பாடல்களாக அமைந்தன. இப்பாடல்களின் முதலடியும் நிறைவான (கடைசி) அடியும் உட்பட காவியத்தின் அடங்கலாக பதின்நான்கு இடங் களில் "உலகெலாம்" என்னும் இறைவனின் இறையருள் போற்றும் சீரடி பரவியுள்ளது. தெய்வச்சேக்கிழார் தமது இறையின்ப உணர் வால் திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரிய புராணத்தை செந்தமிழில் சொற்சுவை, பொருட்சுவை, அருட்சுவை ததும்பிய **4253** பாடல்களால் தொகுத்தமைத்துள்ளார்.

சேக்கிழாரின் தூய கல்விச்சிறப்பும் அநபாயச்சோழ மன்னனின் வேண்டுதலும் கைகூட்ட இறையருள் அமுதமாக எமக்குக் கிடைத்த பெரிய புராணம் சைவ உலகின் வழிபாட்டின் சிறப்புக்கு உதவுவது இறையருளேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வச் சேக்கிழாரின் புராணம்

"உலகெ லாம்உ ணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்


(முதற்பாடல்)

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்"

(நிறைவுப் பாடல்)

* * * * *

## திருநாளைப்போவார் என்னும் நந்தனார்



சோழவள நாட்டின் தஞ்சாவூர் மாவட்டம் ஆலயங்களின் பொலிவினால் தெய்வீக பூமியாக மிளிர்கிறது. இம் மாவட்டத்தில் மேல் ஆதனூர் என்ற கிராமம் நெல்வயல் சூழ்ந்த ஒரு பகுதியில் புலையர் குடிமக்களும் வாழ்ந்தனர். இவர்கள் தமது குலத் தொழிலுடன் அவ்வூர் வயல்நிலச் சொந்தக்காரர்களின் அடிமைக் குடிமைகளாகவும் வாழ்ந்தனர்.

இப்புலையர் குடிமரபில் தோன்றிய நந்தனார் என்பவன் கல்வி கற்காத போதும் தனது முற்றவப் பயனாற் தேடிய தேட்டமாக இறையருள் நாட்டத்தில் இடையறாத சிவபக்தியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி வந்தான். தனது குடும்பத் தொழிலில் கிடைக்கும் மிருகங்களின் தோலால் சிவாலயங்களில் உபயோகிக்கும் பேரிகை முதலான தோற்கருவிகளுக்கான தோல் மற்றும் வார்க்கயிறு போன்றவற்றை வழங்கியும் ஆலயப் பணியில் உயர்ந்து வந்தான். ஆலய தரிசனையின்போது இறைவனை வேண்டி இனிய பாடல்களையும் பாடி வந்தான். தமது குடும்ப வாழ்வாதாரமாக ஒரு வேதியரின் அடிமையாக இருந்து வயல்வேலை செய்து வந்தான். ஓய்வு நேரமெல்லாம் ஆடியும் பாடியும் இறை பக்தியில் பித்துப் பிடித்தே திரிவான். ஏனைய புலையர்கள் இவன் பித்துப் பிடித்தே அலைகிறான் என்றனர்.

அயலவர்களின் கேலியான வார்த்தைகளைக் கேட்டதும் "பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குதாம் பேரின்பமன்றினுள்ளே - மற்ற மருந்துகள் தின்றாலுமுள்ளுக்கு வல்லே வல்லே... என்ற தொடரில் பாடித் தனது இறைபக்தியை வெளியிடுவான். ஒருநாள் திருப்புன்கூர் சிவாலய தரிசனைக்குச் சென்றான். (நந்தனின் மரபினர் அக்காலத்தில் ஆலயத்தின் உட்செல்ல அனுமதிக்கப் படுவதில்லை) வெளிவாசலில் தேரடியில் நின்று தரிசித்தபோது நந்தி (கல்) விக்கிரகம் தடையாக இருந்தது. அப்போது நந்தன் இறைவனை நோக்கி "வழி மறைத்திருக்குதே மலைபோலேயொரு மாடு படுத்திருக்குதாம்" என்று பாடினார். இறைவன் தன் பக்தனுக்காக இரங்கி நந்தியை நோக்கி "சற்றே விலகியிரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம்" என்று பணித்தார். நந்தி (கல் விக்கிரகம்) இறைவனருளால் சற்று விலகியது. நந்தன் நன்று கண்ணாரக் கண்டு வழிபட்டான்.

இவ்வாறு வெளிவீதிகளையே வலம்வந்து தரிசித்தான். ஒருநாள் ஆலயத்தின் தெற்கு வாசலில் அடியார்களின் தேவைகருதித் திருக்குளம் ஒன்றைத் தோண்ட முற்பட்டான். வேலை நிறைவடையாததால் இறைவனிடம் விண்ணப்பித்தான். இறைவன் விநாயகரை நோக்கினார். விநாயகர் தமது சிவ பூதகணங்கள் புடைசூழ வேண்டிய ஆயுத தளபாடங்களுடன் சென்று திருக்குளத்தை ஒரு இரவில் நிறைவு செய்தார். இத்திருக் குளம் இன்றுவரை "ரிஷப தீர்த்தம்" என அழைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தனின் பக்தி மேலோங்கவும் சிதம்பர திருத்தலத்தில் மார்கழி மாத திருவெம்பாவையையொட்டிய திருவாதிரைப் பெருவிழாவைக் காண ஆவலுற்றான். தமது ஆண்டானான வேதியரிடம் சிதம்பரஞ் செல்லவென அனுமதி கோரினான். அடிமைகளான புலையருக்கு ஏன் ஆலய தரிசனம் என்று கூறிய வேதியர் மறுத்துவிட்டார். நந்தன் தமது சேரி வாழ் மக்களிடம் தான் நாளைக்கு சிதம்பரம் போகவேண்டும் எனக் கூறினான். வேதியரின் மறுப்புத் தொடர்ந்தது. நந்தனும் தான் நாளைக்குப் போவேன் என்று தினமும் கூறியதால் ஏனையோர் நந்தனை "திருநாளைப்போவார்" எனக் கேலி செய்தனர்.

நந்தன் தொடர்ந்து அனுமதி கோரியதால் வேதியர் பல தீமைகளைச் செய்தார். வெறுப்புடன் கட்டாய நிபந்தனைகளை யும் விதித்தார். தமது நிபந்தனையில் நாற்பது வேலி நிலத்திலும் நெற்பயிர் வளர்ந்து அறுவடைக்கு வந்ததும் போகலாம் எனக் கூறினார். இதைக் கேட்டதும் வருந்திய நந்தன் தில்லை நடராசப் பெருமானை வேண்டித் தமது துயரை வெளியிட்டான். தன் பக்தனுக்கு அருள்புரியத் திருவுளங் கொண்ட இறைவன் தமது சிவபூதகணங்களை ஏவி நாற்பது வேலி நிலத்திலும் நெற்பயிரை முற்றி விளைந்து அறுவடைக்கு ஏற்றவாறு செயற்படுத்தினார்.

நந்தனின் கனவிற் தோன்றிய இறைவன் நாற்பது வேலி நிலத்தில் நெல் விளைந்துள்ளது. வேதியரை அழைத்துச் சென்று காண்பித்துவிட்டுத் தரிசனைக்கு வருமாறும் கூறினார். மறுநாட் காலை வயலுக்குச் சென்ற நந்தன் இறைவனின் திருவருளை வியந்து பாடினான். "களை எடாமல் சலம் விடாமல் கதிரொரு முழம் காணுமாம்" என்று பாடிய வண்ணம் வேதியரிடம் சென்று அழைத்து வந்து காண்பித்தான். நந்தனின் மீதிருந்த வெறுப் பினால் பல தீமைகள் செய்தபோதும் வயலை நோக்கியதும் நந்தனின் பக்தியையும் இறையருளின் திருவிளையாடலையும் எண்ணினார். உடனே நந்தனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தான் செய்த தவறுகளை மன்னிக்குமாறு வேண்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து தான் சிவபூசையைத் தவறாது செய்தும் தமக்கு அருள் புரியாது தமது பக்தனான நந்தனுக்கு இறைவன் காட்டிய திருவருளை வியந்து தமக்கு உபதேசஞ் செய்யுமாறு வணங்கினார். இவ்வேளை நந்தன் அடிமையான தன்னை ஆண்டானான வேதியர் வணங்குவது தகாது எனக்கூறி வேதியரை வலம் வந்து வணங்கிச் சிதம்பரஞ் செல்ல விடை பெற்றார்.

சிதம்பரஞ் சென்ற நந்தன் தலைமேற் கூப்பிய கைகளுடன் ஆலய வெளிவீதியைப் பலமுறை வலம் வந்தார். தமது குலப் பிறப்பினால் இறைவனை அண்மையிற் சென்று வணங்க முடியவில்லையே என்ற கவலையுடன் பல தடவை வலம் வந்த களைப்பினால் வெளிவீதியிலேயே உறங்கிவிட்டார். நந்தனின் கனவிற் தோன்றிய இறைவன் "தெற்கு வாசலில் தீ வளர்த்து அதனுட் பிரவேசித்து எமது அந்தணர்களுடன் இணைவாயாக" என்று கூறினார். இறைவன் தில்லை வாழ் அந்தணர்களிடம் கனவிற் தோன்றித் தெற்கு வாசலில் தீ வளர்த்து அங்கு காணும் நந்தனைத் தீயில் மூழ்குமாறு கூறும்படி தெரிவித்தார்.

இறைவனின் ஆணைப்படி வேதியர்கள் தெற்கு வாசலில் தீ வளர்த்து நந்தனை உட்புகுமாறு வேண்டினர். நந்தன் இறைவனை எண்ணிப் பாடிய வண்ணம் தீயை வலம் வந்து கைகளை உயர்த்தியவாறு தீயிற் சங்கமமானார். சற்று நேரத்தில் முன்பிருந்த கோலம் மாறிய நந்தன் சிவந்த மேனியில் பூணூலும் சடாமுடியுடன் கூடிய முனிவரைப் போலத் தீயிலிருந்து வெளிவந்தார். யாவரும் இறைவனை எண்ணி ஆரவாரஞ் செய்து மகிழ்ந்தனர்.

நந்தன் நேராகச் சென்று இறைவனை வலம் வந்து அங்கு தோன்றிய சோதியிற் சங்கமமானார். யாவரும் நந்தனைக் காணாது திகைத்தனர். இதேசமயம் இமயமலை அடிவாரத்தில் பல முனிவர்கள் தவஞ் செய்துகொண்டிருந்தனர். அவர்களுட் சிறப்பான உபமன்னிய முனிவரும் இருந்தார். அப்போது ஆயிரம் சூரியப் பிரகாசமுடைய ஒளிப்பிளம்பு கைலையை நோக்கி வந்ததை யாவரும் கண்டு திகைத்தனர். நந்தனார் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார் கை.....லக்குச் செல்கின்றார் என்று கூறித் தலைமேற் கூப்பிய கரங்களுடன் அப்பேரொளி சென்ற திசையை நோக்கி யாவரும் வணங்கினர்.

இறைவனின் திருவுளப்படி இறையடி தழுவிய நந்தனா ரின் பெருமையும் அவர்தம் பக்தியும் இறையருளின் அமுத மாகவே அமைந்தது. கற்றுணராதபோதும் முற்றவப் பயனால் சிவ பக்தி பூண்ட நந்தனார் இறைவனின் சித்தப்படி ஆலய சேவை செய்து பாடி வந்தார். நந்தனாரின் பெருமையை உலகறியச் செய்து சிவநெறிக்குப் பெருமை தேடிய இறைவன் நந்தி விக்கிர கத்தை நகரச் செய்தார். மேலும் திருக்குளம் அமைத்தும் வேதியரின் வேண்டுதலுக்காக நாற்பது வேலி நெல் விளைவித்தும் சிறப்பித்தார். சிதம்பர தரிசனையைத் தந்தும் தமது சோதியினால் இணைத்தும் அருள் பாலித்தார்.

நந்தனாரின் சிவபக்தியும் இறைவனின் திருவிளை யாடலும் எமது மனிதகுலம் விருப்புடன் சைவநெறியை வழிபடச் செய்த இறையருள் அமுதமாகவே அமைந்துள்ளது. நந்தனாரின் சிறப்பு அறுபத்து மூவர் பெரிய புராணக் கதைகளில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகப் பதிவு செய்யப்பட்டதும் இறையருளேயாகும். திருநாளைப் போவாரின் குருபூசைத் தினம் பிரதி வருடமும் புரட்டாதி மாத ரோகினி நட்சத்திரமாகும்.

* * * * *

## மகாசக்தியின் கேதாரகௌரி விரதமும் திருக்கேதாரநாதமும்


இமயமலைச் சாரலில் அமைந்துள்ள பஞ்சநாதத் திருத் தலங்களான கைலாயம், பசுபதிநாதம், அமரநாதம், கேதாரநாதம், பத்திரிநாதம் ஆகிய அற்புதமான தலங்களுள் கேதாரநாதம் சிறப் புடையது.

கைலாயம் திபெத் நாட்டில் மலை உருவத்திலும், பசுபதி நாதர் நேபாளத்தில் பஞ்சமுகேஸ்வரராகவும் அமைந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் வட எல்லையில் பனிக்கட்டியாலான இலிங்க வடிவில் அமர்நாதரும், கேதாரநாதர் எருதின் ஏரி வடிவிலமைந்த சுயம்பு லிங்கமாகவும் காட்சி தருகின்றனர். பத்திரிநாதர் சாளக்கிரமத்தில் நாராயணராகவும் அமர்ந்திருக்கிறார். இத் திருத் தலங்கள் யாவும் உயர்ந்த மலைகளிலமைந்ததால் உறைபனியால் கூடிய காலங்கள் மூடியிருக்கும்.



கேதாரநாதத்தை நாம் நோக்கினால் இத்திருத்தலம் பன்னிரு ஜோதிலிங்கங்களில் பதினொராவது ஜோதிர் (சுயம்பு) லிங்கமாகவும் சிவசக்தியினர் அர்த்தநாரீஸ்வரராக இணைந்த திருத்தலமாகவும் அமைந்துள்ளது. இச்சிறப்பான ஆலயத்தைத் தரிசிக்க வருடத்தில் ஆறுமாதங்கள் மட்டும் செல்லலாம். வைகாசி மாதம் முதல் ஐப்பசி மாதம் வரை சூரிய ஒளியால் பனி உருகுவதால் தரிசிக்கவும் ஏதுவாகும். ஏனைய ஆறுமாதமும் பனி உறைந்து ஆலயத்தை முற்றாக மூடியிருக்கும். கார்த்திகையில் ஆரம்பமாகும் உறை பனியைத் தொடர்ந்து சித்திரை முடியும் வரை எவரும் செல்ல முடியாது. மார்கழி மாதத்தில் பல சிரமங்களின் மத்தியில் ஆலய அர்ச்சகர் கள் இறைவனுக்கு மலர் சாத்தி விளக்கேற்றி வைப்பர். இத்துடன் திருக்கதவு அடைக்கப்படும். தொடர்ந்து பனி படர்ந்து கட்டியாகி மலையாக ஆலயத்தையே மூடிவிடும்.

வைகாசி மாதம் கதவு திறப்பதற்கு முன் கோடரியால் கதவை மூடிய பனிக்கட்டியை வெட்டி அகற்றியே திறந்து ஏனைய பணிகளை ஆரம்பிப்பர். இத்திருத்தலத்தில் திருக்கதவை அடைக்கும்போது ஏற்றிய திருவிளக்கு அணையாது சுடர்விட்டுப் பிரகாசிக்கும். அன்று சாத்திய மலர்களும் வாடாது காணப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்திடை அற்புதத்தை நேரிற் பார்க்கவென பக்தர்கள் முதல் நாளே அங்கு சென்றிருப்பர்.

கேதாரகௌரி விரதத்தை ஐயாயிரம் வருடங்களுக்கு மேலாகவே அடியார்கள் பக்தி பூர்வமாக வழிபடும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவோம்.

**கேதாரகௌரி விரத வரலாறு**

முன்னொரு காலத்திலே திருக்கைலாய வசந்த மண்டபத்தில் சிவபிரான் பார்வதிதேவியுடன் பக்தர்களின் தரிசனைக்காக வீற்றிருந்தார். அங்கு கூடியிருந்த தேவர்கள், முனிவர்கள் , சித்தர்கள் போன்ற பலரும் இறைவனையும் இறைவியையும் சுற்றி வலம் வந்து வணங்கினர். அச்சமயம் பிரிங்கி முனிவர் இறைவனை மட்டும் சுற்றி வந்து வணங்கி நின்றார். இதனால் விசனமுற்ற பார்வதிதேவி இந்த முனிவர் மட்டும் என்னைத் தவிர்த்த காரணம் யாதென இறைவனை வினவினார். அதற்கு இறைவன் தேகப் பற்றுடன் கூடியவர்கள் உன்னையும் என்னையும் சேர்த்துச் சுற்றி வருவர். இந்த முனிவர் தேகப் பற்றற்ற நிலையில் உயிர்ப்பற்றுடன் என்னை வணங்கினார் எனப் பகர்ந்தார். இதைக் கேட்டதும் உமையாள் முனிவரின் உடலின் சக்தியை வலுவிழக்கச் செய்தார். அச்சமயம் பிரிங்கி முனிவர் உடற்சக்தியற்று எலும்புக்கூடாக நடக்கவும் முடியாது வருந்தினார். அச்சமயம் இறைவன் ஊன்று கோலொன்றை முனிவர் பெற உதவினார். முனிவர் தமக்குக் கிடைத்த ஊன்றுகோலுடன் மீண்டும் இறைவனை மட்டும் வலம் வந்து வணங்கினார். இதனால் சலிப்புற்ற உமையவள் கைலையை விட்டகன்று பூவுலகிற்கு வந்து கௌதம முனிவரின் ஆச்சிரம வில்வமரமொன்றின் கீழமர்ந்து தவத்தினை மேற்கொண்டார்.

பன்னிரு வருடகாலமாக மழையின்மையால் அவ்வனச் சூழலிலிருந்த மரஞ்செடிகள் யாவும் நீரின்றி நலிவுற்று அழிவுறு நிலையிலிருந்தன. உமா சக்தியின் புதுவரவால் மரங்கள் யாவும் தழைத்துப் பூத்துக் குலுங்கவும் காய்கனிகள் காய்த்துப் பலன் தரவும் கண்ட கௌதம முனிவர் தமது ஞானக் கண்ணால் நிலைமையை உணர்ந்தார். உமாதேவியாரை அணுகியதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை வணங்கி உபசார வார்த்தைகள் பேசி வெறும் தரையில் அமர்ந்த தேவியரைத் தமது மந்திர சக்தியால் அமைந்த சிம்மாசனத்தில் அமரச் செய்தார். மீண்டும் பணிவுடன் அன்னை இவ்விடம் வந்த காரணத்தைக் கேட்டறிந்தார்.

தேவியின் கவலையை நீக்க எண்ணிய கௌதம முனிவர் இல்லற இணைவுக்கான விரதமொன்று இருப்பதை நினைவு கூர்ந்தார். "கேதாரகௌரி விரதம்" என்னும் விரதத்தை முறைப்படி அனுட்டித்தால் யாவும் கைகூடுமெனக் கூறினார்.

"இக்கேதாரகௌரி" விரதத்தை இதுவரை எவரும் கடைப் பிடித்ததில்லை. இதைத் தாங்கள் அனுட்டித்தால் தங்கள் விருப்பம் நிறைவேறும். மேலும் பூலோகத்தவரும் இதனை அனுட்டித்துத் தாங்கள் விரும்பும் வரங்களைப் பெறுவர். இதைக் கேட்டு மகிழ்ந்த சக்திதேவி இவ்விரதத்தைத் தாம் அனுட்டிக்க வேண்டிய விதிமுறைகளை விபரமாகக் கூறுமாறு வேண்டினார். கௌதமமுனிவரும் கேதாரகௌரி விரதத்தின் எல்லா விபரங் களையும் பின்வருமாறு தெரிவித்தார்.

புரட்டாதி மாதத்தின் வளர்பிறை நவமியன்று அல்லது அதன் முன் பின்னான அட்டமி அல்லது தசமி (21 நாள் வரக் கூடியதாக வரும் திதியில்) நாளில் ஆரம்பித்து ஐப்பசி மாத அமாவாசை (தீபாவளி) யன்று முடிவுறும். இருபத்தொரு நாள் விரதமாகும். இவ்விரதமனுட்டிப்போர் இருபத்தொரு நாளும் புனித நீராடி சந்தியா வந்தனஞ் செய்தபின் ஆலமரத்தினடியில் அல்லது இதுபோன்ற புனிதமான மரத்தடியில் ஆசாரத்துடன் அமர வேண்டும். ஈர மண்ணினால் சிவலிங்கம் பிடித்து வைத்து முறைப்படி கேதீஸ்வரரை ஆவாகனஞ்செய்து நீர் தெளித்து விபூதி, சந்தனம், நறுமலர்கள், மாலைகள், பட்டுத்துணி என்பவற் றால் அலங்கரித்தல் வேண்டும். நைவேத்தியம் வைத்துத் தூபம், தீபம் காட்டி எல்லா உபசாரங்களுடன் முறைப்படி பூசை செய்து வழிபடல் வேண்டும். இப்பூசைக்கு நைவேத்தியமாக எள்ளருண்டை, மஞ்சளுருண்டை, அதிரசம், பழவகை (வாழைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழம் உட்பட) தேங்காய், வெற்றிலை, பாக்கு ஆகிய விசேடமான பொருட்கள் வைக்கப்படல் வேண்டும். இவ்விரதத்துக்கான நைவேத்தியம் படைத்தலில் ஒரு விசேட விதிமுறைகளைக் காணலாம். முதலாம் நாள் மேற்கூறிய நைவேத்தியப் பொருட்கள் நாளுக்கு நாள் ஒவ்வொன்றாகக் கூடி இருபத்தோராம் நாளன்று சகல பொருட்களும் இருபத்தொன்றாக வைக்கப்படல் வேண்டும். மேலும் 21 பட்டு நூல்களை ஒன்றாக முறுக்கி இலிங்கத்தின் மீது முதல் நாளே சார்த்திவிட வேண்டும். இந்த நூல் "தோரணக் காப்பு" என அழைக்கப்படும். ஒவ்வொரு நாளும் பூசையை நிறைவு செய்த பின் அச்சிவலிங்கத்தை வலம் வந்து வணங்கியதும் லிங்கத்தின் மீது சார்த்தியுள்ள நூலில் ஒரு முடிச்சுப் போட வேண்டும். பூசை முடிவில் வலம் வருதலும் நாளுக்கு நாள் கூடி கடைசித் தினத்தன்று இருபத்தொன்றாகவே காணப்படும். இவ்வாறு இருபத்தொரு நாளும் உள்ளன்போடு வழிபாடு செய்ததும் கேதாரநாதரின் அருளை வேண்டி இலிங்கத்தின் மீது சார்த்தியிருந்த தோரணக் காப்புநூலை தமது விருப்பப்படி முன்கையிலோ, புயத்திலோ, கழுத்திலோ அணிதல் வேண்டும். இவ்வாறு அணியப் பெறும் காப்பு நூல் அடுத்த வருடம் இதே காலம் வரை புனிதமாகப் பேணப்படல் வேண்டும். அடுத்த வருடம் புதிய நூல் கட்டுவதன் பேரில் முன்னர் அணிந்த நூலையும் வழிபட்ட இலிங்கத்தையும் புனித நீரில் சேர்த்துவிடல் வேண்டும்.

இவ்வாறு பூசிப்பவர் அன்று விரதமிருந்து பூசையின் போது உபயோகித்த தீர்த்தத்தையும் நைவேத்தியத்துக்காகச் செய்து வைத்த உணவுப் பண்டங்களையும் பழங்களையும் மட்டும் உணவாக மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு இருபத்தொரு நாளும் சக்திதேவியின் இத்தூய விரதத்தை அனுட்டித்தால் (தீபாவளி) அமாவாசையன்று பரமசிவன் தமது இடபவாகனத்தில் வந்து உமாதேவியை அழைத்துச் செல்வார் என்னும் விதி இருப்பதாகக் கௌதம முனிவர் கேதாரகௌரி விரதத்தின் சிறப்பினை எடுத்தியம்பினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வற்புதத்தைக் கூறக் கேட்டின்புற்ற தேவி கௌதம முனிவரையே வேண்டிய சகல ஏற்பாடுகளையுஞ் செய்து குருவாக ஏற்று இவ்விரதத்தை நிறைவு செய்தார். நிறைவு நாளான தீபாவளி அன்று இறைவன் தேவி முன் தோன்றி அவரைக் கைலைக்கு அழைத்துச் சென்றார். இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட திருப்பதி திருக்கேதாரநாதமாகும். அப்பதியில் இறைவன் தமது உடலின் இடப்பாகத்தை இறைவிக்கு வழங்கி அர்த்த நாரீஸ்வரர் வடிவத்தைப் பெற்றனர். இவ்வரிய நிகழ்வின் பேறாக இத்திருத்தலமூலவர் கேதாரநாதர், கேதாரகௌரி என்னும் திருப் பெயர்களால் அன்றிலிருந்து அழைக்கப் பெற்றார்.

இறைவனும் இறைவியும் ஓர் உருவில் சரிபாதியாக இணைந்த பின்பும் பிருங்கி முனிவர் தாம் சிவனை மட்டும் வலம் வரும் வழிபாட்டு முறையில் தரிசிப்பதனையே நிறைவேற்ற முன் வந்தார். இறைவனைத் தியானித்துத் தமது தபோபலத்தால் சக்தி வாய்ந்த வண்டின் வடிவமெடுத்து சிவலிங்கத்தின் பின்புறத்தில் நடுவே துளைத்து இலிங்கத்தின் வலப்பாகத்தை மட்டும் வலம் வந்து வணங்கினார். பிருங்கம் - வண்டு. இப்பெயரால் இந்த முனிவர் பிருங்க முனிவர் என்னும் பெயரை அடைந்தார். இவர் பூசித்த இலிங்கம் பல துளைகளுடன் திருவெண்ணெய் நல்லூர்த் திருப்பதியில் மூலவராக அமைந்து அருள் பாலிக்கிறார். இந்த இலிங்கம் பொன் நிறமாகவே காட்சி தருகிறார். ஒரே நாளில் ஐந்து அற்புத நிறங்களாகவும் மாற்றம் தருகிறார். இத்திருப்பதியில் குடிகொண்ட இறைவன் திருநாவுக்கரசுநாயனாருக்குத் திருவடி தீட்சை வழங்கிய பெருமையையும் உடையவர். அப்பர் சுவாமிகளும் சம்பந்தப் பெருமானும் இவ்வாலயத்தின் மீது பாடல் பாடியதும் குறிப்பாக அமர்நீதி நாயனார் முத்திபெற்றதும் இத்திருநல்லூர் பதியிலேயாகும்.

பார்வதிதேவியால் அனுட்டிக்கப்பெற்ற கேதாரகௌரி விரதம் பூவுலகத்தில் சுமங்கலிப் பெண்களாலும் (இன்று) கன்னிப் பெண்களாலும் ஆசாரசீலமாக அனுட்டிக்கப் பெறுவதை அறிகிறோம். இன்று இவ்விரதம் சிவ, சக்தி ஆலயங்களில் சிவாச் சாரியார்களின் நெறிப்படுத்துதலில் **21** முடிச்சுகள் போட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கத்தின் மீது சார்த்தப் பெற்றுள்ள தோரணக் காப்பை அதே ஆலயத்தில் 21 நாளும் ஆசார சீலமாக வழிபட்டு வருவதுடன் சிவாச்சாரியாரால் நூலையும் கட்டுவித்து நன்மையடைகின்றனர். இக்காப்பு நூலை புனிதம் பேணாமலும், அகம்பாவத்தினாலும் பணச் செருக்கினாலும் தொடர்ந்து அனுட்டிக்காதவர்கள் இறையருளால் பல கெடுதிகளையும் பல துன்பங்களையும் அனுபவித்தனர்.

நாவலர் பெருமானின் தூண்டுதலால் கந்த புராண படனத்தை உள்ளன்போடு ஓதியும் உணர்ந்தும் கேட்டும் இன்புற்றவர்களிற் பலர் பெண்களாவர். இதனால் யாழ் மண்ணில் கந்த புராண கலாசாரம் நிலைநிறுத்தப் பெற்றது. இப்புனித மண்ணில் இவ்வரிய கேதாரகௌரி விரதத்தை முற்று முழுதான சுமங்கலிப் பெண்களும் கூடுதலான கன்னிப் பெண்களும் தூய சிந்தனையுடன் அனுட்டித்து வருகின்றனர். இதனால் கணவன் மனைவியரிடையே நெருங்கிய உறவும் கன்னிப் பெண்களுக்கு அவரவர் எதிர்பார்க்கும் நல்ல கணவன் கிடைப்பதையும் அறிகிறோம். வேறு நாடுகளுடன் ஒப்பிடும்போது யாழ் மண்ணில் சமயநெறியும் ஆசாரமும் குடும்ப நிலைக்கேற்ற இன்புடன் வாழ்வது சிறப்பாகும். ஏனைய மாவட்டங்களில் ஏற்படும் மணமுறிவு இல்லறப் பிரச்சினைகள் எம்மண்ணில் அரிதாகவே காணப்படுவது எம்மண்ணில் குடிகொண்டுள்ள தெய்வங்கள் குறிப்பாகச் சக்திதேவியரின் பேரருளால் கிடைத்தமை நாம் பெற்ற பெரும்பேறாகும்.

கேதாரநாதரின் பெருமையைத் தமது ஞானக்கண்ணால் நோக்கிய திருஞானசம்பந்தப் பெருமானும் சுந்தரமூர்த்தி நாயனாரும் தென்தமிழகத்திலிருந்தே பாடல் பாடியுள்ளனர். அவர்களின் தேவாரத் திருப்பதிகங்களைப் பின்னர் அறிவோம்.

(பஞ்ச பாண்டவர்கள் பாரதப்போர் முடிந்ததால் ஏற்பட்ட வீரகத்தி, பிரம்மகத்தி தோஷங்களிலிருந்து தம்மைக் காப்பாற்றுவதன் பேரில் கேதாரநாதத்தில் லிங்க பிரதிஷ்டை செய்து நன்மையடைந்த இவ்வரலாற்றை அறியலாம். இதன் பேறாகவே அவர்கள் மோட்சத்தை அடைந்த மார்க்கத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றனர். இக்கேதாரநாதத் திருத்தலத்தில் பாண்டவர் கால நினைவுச் சின்னங்களும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது)

## கௌரி காப்பு

முன்நின்று செய்யுள் முறையாய் புனைதற்கு
என் நின்ற ருள்க எலியூர்தி ~ மன்னவா
சொற்குற்றம் ஏனைப்பொருள் சேர் தொடைக்குற்றம்
எக்குற்றம் வாராமலே
காப்பெடுக்க வந்தேனே கௌரீ அம்பாள் தாயாளே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளி மகாதேவியாரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாய் முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளி மகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கைக்கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறுமுன்னே போட்டவளே
அசுரர் குலம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனை அணைத்தே அருள் மாரி பொழிந்தானே
வகையாற்று படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான ...ந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப் பருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விளைகாப்பு அருளுமம்மா
பிள்ளைகள் அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நாம் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைய தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பலவகைத் திரவியங்கள்
நானுனக்கு தாறேனம்மா நயந்தென்னைக் காரும் மம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினை காக்கும் காப்பவளே
என் தாயே வாழ்ந்திடுவோம் எல்லாம் உனதருளே
காசினியில் வெற்றுமையைக் கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்திழையே தாயாரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனதும் இளகிவிடும்
ஞானம் பெருவி வரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்தே அணிவோருக்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவிடும்
நாள் கோள் இவையெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்பினைக் கட்டிவிட்டு கடமை முடிந்தென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் பொழுதெல்லாம் நறும் காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதில் விழித்திடுவேன்
ஞானக் கொழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்கு கையில் பூண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிபோல் கனன்றிடுவேன்
தீமைச் செயலேதும் கண்திறந்து காட்டுமம்மா
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள்வரையில் இசையும் விரதமொடு
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
பக்தி மனதோடு பரவி அணிவோருக்கு
சித்தி யெலாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால முணர்வுமுண்டு
இச்சகத்தில் உள்ளோர் எல்லாம் ஏற்றியெம்மைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலக்கமொடு வந்திடவே
அச்சக்தியெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவிட
ஞானங் கிளர்ந்து வர நல்லருளைச் செய்திடுவாய்
தெவிட்டாத தீங்கனியே தேவிபராசக்தியம்மா
காளியாய் வந்தமர்ந்த கௌரியம்மா காப்பருள்வாய்

## நவராத்திரி விரதம்

உலக மகாசக்தியாம் ஆதிபராசக்தியானவள் உலக மாதாவான தன்மையால் மிகுந்த கருணையுடன் சகல வல்லமை களையும் கொண்டவள். சக்தியின் வலிமையால் சிவபிரானை உறுதுணையாகக் கொண்டு சகல உயிரினங்களையும் படைத்தும், காத்தும், அழித்தும் வருகிறாள். சிவாம்சத்துடன் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளையும் தோற்றுவித் தாள். இவர்களுக்கு உறுதுணையாக சரஸ்வதி, மகாலட்சுமி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கை ஆகிய முச்சக்திகளையும் தமது அம்சத்திலிருந்து தோற்றுவித்தார். மும்மூர்த்திகளையும் முச்சக்திகள் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய பணிகளைச் சிறப்புடன் இயங்க வைத்துப் பிரபஞ்சத்தை இயக்குகின்றனர்.

மகாசக்தியின் திருவுளப்படி சகல உயிரினங்களும் தத்தமது முன்வினைப்படி இம்மையில் வாழ்கின்றனர். குறிப்பாக மூவுலகையும் சேர்ந்த தேவர்கள், மனிதர்கள், அசுரர்களும் மேற் காட்டிய நிபந்தனைப்படி வாழ்ந்தனர். அதர்மம் கூடிய அசுரர்கள் தேவர்களிலும் தாம் உயர்வுடனும் ஏனையோரைக் கொடுமைப் படுத்தியும் முதன்மை நிலையை அடைய எண்ணினர். இதனால் இக்கொடிய அசுரர்கள் பலர் தமது நன்மை கருதி மும்மூர்த்தி களையும் இறைவன் இறைவியையும் வேண்டித் தவம் புரிந்தனர். அவர்களின் அருளால் பல வரங்களைப் பெற்றனர். தேவர்கள், முனிவர்கள், மனிதர்களைக் கொடுமைப்படுத்தினர். கொடுமை தாங்காத தேவர்கள் முனிவர்கள் இறைவனிடம் முறையிடு கின்றனர். மும்மூர்த்திகளிடமும் வரம் கேட்கும்போது தமக்கு பெண்கள் (பெண்கள் பலவீனமானவர்கள் என்பதால்) தவிர்ந்த எவராலும் தமக்கு மரணம் ஏற்படக்கூடாதென்றும் தமக்கு போதிய மனதைரியமும் வீரமும் தாராளமாகக் கிடைக்க வேண்டு மென்றே வரங்கள் பெற்றனர்.

தம்மால் தோற்றுவிக்கப்பட்ட தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள் அச்சமின்றி வாழ வேண்டிய நியதியின் பொறுப்பை ஏற்ற அன்னை சக்தியவள் தமது பக்தர்களைக் காப்பதன் பேரில் அசுரர்களை வதஞ் செய்து பக்தர்கள் யாவரையும் காத்தாள். இதன் பேறாக சக்தியவள் தமது அம்சமாக (ஒன்பது) நவசக்தி களையும் தோற்றுவித்தாள். மகாசக்தி பூரண தவநிலையிலிருந்து அசுரர்களை வதஞ் செய்யும் பணியையும் ஏற்றாள். ஆதிபராசக்தி தமது பணி நிறைவேறும் வண்ணம் கடுந் தவமிருந்து ஒன்பது நாட்கள் மாநோன்பிருந்தாள். (மானோன்பு மருவி மானம்பூ ஆகியது) ஒன்பது நாட்களிலும் சக்தியின் வடிவங்களான ஒன்பது சக்திகள் தோன்றி கொடிய அசுரர் குலத்தையே அழித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தொழிலையும் மும்மூர்த்திகளுடன் இணைந்து இயங்கும் முத்தேவியரும் இந்த ஒன்பது நாளிரவிலும் பல்வேறு வடிவத்தில் வந்து அரும்பணியாற்றினர். இந்த ஒன்பது நாட்களிலும் ஒன்பது (நவ) இராத்திரியாக அமைந்து இத் தேவியரை மக்கள் ஆசாரத்துடன் விரதமிருந்து வழிபட்டனர். இதனையே நவராத்திரி விரதகாலமாக இறையருள் அமைத்தது.

புரட்டாதி மாதத்தில் வளர்பிறை பிரதமை முதல் நவமி வரையுள்ள ஒன்பது நாட்களையும் நவராத்திரிக் காலமாகக் கொள்கின்றனர். இந்த ஒன்பது நாளில் மகாசக்தியின் சிறப்பான துர்க்கை முதல் மூன்று நாட்களும், அடுத்த மூன்று நாட்கள் மகா லட்சுமியும், இறுதி மூன்று நாட்களில் சரஸ்வதியும் வழி பாட்டுக்கு உரியவர்களாவர். இந்த ஒன்பது நாளும் மகாசக்தி அசுரர்களை அழிக்கவென மகாநோன்பிருந்து தவமியற்றுகிறாள். இதே காலத்தில் சக்தியின் அம்சங்களாக வடிவெடுத்த நவசக்திகள் பூசிக்கப்படுகின்றனர். தமிழ் மக்கள் வாழ்கின்ற இடமெங்கும் எல்லா ஆலயங்களிலும் நவராத்திரி விழாக்காலம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சக்தியின் ஆலயங்களில் சிறப்புடனும் பயபக்தியுடனும் பூசைகள் விழாக்கள் நடைபெறுகின்றன. மகாநவமியன்று மகிடாசுரன் வதையும் ஒருசில ஆலயங்களில் நடைபெறுவதுடன் புராணகால நிகழ்வுகளையும் உணர வைக் கிறது. ஆலயங்கள் மட்டுமன்றி கல்விக்கூடங்கள் தனியார் கல்வி நிலையங்கள், இந்து மன்றங்கள், அரச தனியார் நிறுவனக் காரி யாலயங்களில் சரஸ்வதி பூசை பக்திபூர்வமாக நடைபெறுகிறது. தமது பக்தி ஆர்வத்தினால் இல்லங்களிலும் பூசிக்கிறார்கள்.

## நவராத்திரி விழாக்கள்

புரட்டாதி மாத வளர்பிறை பிரதமையன்று அதிகாலை யில் பிரதமைதிதி கூடியிருக்கும் வேளை நவராத்திரி விழாப் பூசைக்கான ஆயத்தம் தொடங்குகிறது. யாகசாலையில் அமைந்துள்ள மேடை மீது சந்திரகும்பம் வைத்து அதனைச் சுற்றிலும் நவதானியங்கள் முளைக்கத் தூவி விடுவர். பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பம் அமைத்து உபசார பூசைகள் நடாத்துவதுடன் அக்கினி வளர்த்துச் சிறப்பான வழிபாடுகளுஞ் செய்வர். ஒன்பதாம் நாள் இரவு விசேட பூசையுடன் யாகம் வளர்த்து பலிதானம் வழங்குவர். பத்தாம் நாள் விஜயதசமியன்று பிரதான கும்பத்தை சக்தி ஆலயங் களில் மூலவருக்கு அபிசேகஞ் செய்வர். ஏனைய ஆலயங்களில் இக்கும்ப நீரை புனித நீர்நிலைகளிற் சேர்ப்பர். இதனைக் கும்பஞ் சரித்தல் என்பர்.

பத்தாம் நாட்காலை கும்பஞ் சரித்தலின் பின் சிறுவர் களுக்கு ஏடு தொடக்குதல் இடம்பெறும். கல்விக்கூடங்கள் வேலைத்தளங்களில் மாணவரின் புத்தகங்கள் ஏனைய இடங்களில் தொழில் உபகரணங்களைப் பூசையில் வைத்து பூசித்த பின் மாணவர்கள் புத்தகங்களைப் படித்தும் தொழில் உபகரணங்களைப் பூசை முடிந்ததும் உபயோகித்தும் மகிழ்வர்.

நவராத்திரி விழாக் காலங்களில் முதல் மூன்று நாட் களிலும் வீரத்தையும் தைரியத்தையும் வேண்டித் துர்க்கையை வழிபடுவர். அடுத்த மூன்று நாட்களிலும் செல்வத்தை வேண்டி மகாலட்சுமியையும் இறுதி மூன்று நாட்களிலும் கல்வி, கலை ஞானம் ஆகியவற்றை வேண்டி சரஸ்வதியையும் வழிபடுவர். இந்த நவராத்திரிக் கால விரத நாட்களில் முதலாம் நாள் சக்தியை மகேஸ்வரியாக அலங்கரித்து அபயம், வரதம், புத்தகம், அட்சர மாலை ஆகியவற்றுடன் தோற்றுவிப்பர். இத்தோற்றம் மது, கடைபர் ஆகிய இரு அசுரர்களை வதஞ் செய்த பாவனைக்காகவே அலங்கரிப்பர். இரண்டாம் நாள் மகிடாசுரனின் சேனைகளைக் கொல்லப் புறப்படும் பாவனையில், இராஜராஜேஸ்வரியாக அமைத்து கரும்பு, வில், மலரம்பு, பாசாங்குசம் ஏந்திய வண்ணம் அலங்கரிப்பர். மூன்றாம் நாள் வராகியாகத் தேவி சூலமேந்தி எருமை வாகனமேறிய பாவனையாக அலங்கரிப்பர்.

நாலாம் நாள் மகாலட்சுமியாகவும் துர்க்கையை ஜய துர்க்கையாகவும் அலங்கரித்து வழிபடுவர். துர்க்கை வெற்றிக் கோலத்தில் அமைந்த பாவனையில் வருவதுபோல் அலங்கரித்து வழிபடுவர். ஐந்தாம் நாள் சும்சனின் தூதுவனாக சுக்கிரீவன் சொல்வதை அவதானிக்கும் வைஷ்ணவியாக அலங்கரிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் நாள் தூம்பரலோசன் என்னும் அசுரனை அழித்த சண்டிகாதேவியின் கோலத்தில் அலங்கரிப்பர். சண்டிகாதேவி அட்சர மாலையும் மண்டை ஓடும், தாமரை மலரும் பொற் கலசமும் தாங்கிய வண்ணம் தலையிற் பிறையுடன் சர்ப்ப வாகனத்தில் வெளிவரும் காட்சியாக அலங்கரிப்பர்.

ஏழாம் நாள் பிராக்மிதேவியாக சடைமுண்டர்கள் என்னும் அசுரர்களை அழித்த பேருவகையில் பொற்பீடத்தில் அமர்ந்து தாமரை மலர் மீதில் கால் ஊன்றியதுபோல் /கையில் வீணை மீட்ட தேவியின் தோற்றத்தில் காட்சி தரவும் அலங்கரித் திருப்பர்.

எட்டாம் நாள் கருணை மிகுந்த முக பாவனையில் கரும்பு வில் ஏந்திய வண்ணம் நாரலிம்கியாகத் தேவியை அலங்கரிப்பர். இத்தேவியைத் துர்க்கா என்றழைப்பர்.

ஒன்பதாம்நாள் தேவி கைகளில் வில், அம்பு, அங்குசம், சூலம் ஆகியவற்றை ஏந்திய கோலத்தில் சாமுண்டியாக அலங்கரித்திருப்பர். இக்கோலம் சுபத்திராதேவியாகச் சகல அலங்காரத்துடனும் விளங்குவது சிறப்பாகும்.

இந்த ஒன்பதாம் நாளில் மகாநவமியன்று சிவசக்தியின் ஆலயங்களில் மகிடாசுரன் வதையும் வெகுசிறப்பான காட்சியாக வும் அமைந்திருக்கும். அன்று சக்தி அன்னையவள் சர்வாலங்காரத் துடன் சிம்ம வாகனத்திலேறி வந்து மகிடாசுரனை வதஞ் செய்யும் அருங்காட்சி இணுவில் சிவகாமி அம்பாளின் ஆலயத்தில் கடந்த எண்பத்திமூன்று வருடங்களாக நடைபெறுவது இவ்வாலயத்தின் சிறப்பையும் இவ்வூர்ப்பக்தர்களின் பக்தி சிரத்தையையும் எடுத்தியம்புகின்றது.

பத்தாம் நாள் சிவனும் சக்தியும் ஒருங்கமைந்த காட்சியாக அமைந்து அடியார்களுக்கு வேண்டிய அருள் பாலிக்கும் சிவ சக்தி யாகவே அலங்கரிப்பர்.

நவராத்திரி காலம் ஒன்பது நாளாகும். விரதமனுட்டிப் போர் முதல் எட்டு நாளும் பசியிருந்து அன்று இரவு தம் வீட்டில் சுவாமிப் படங்களுக்கு நிவேதிக்கும் அவல், கடலை, சுண்டல், கற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு, பால், பழம் ஆகியவற்றைப் பூசை முடிந்த பின் உண்பர். ஒன்பதாம் நாள் உபவாசமிருந்து விஜயதசமியன்று அதிகாலை அறுசுவை உண்டியைத் தயாரித்து படங்களுக்குப் படைத்துப் பூசை வழிபாடு செய்து சிறுவர்கள் நாட்படிப்புப் படித்துக் காலை எட்டரை மணிக்கு முன் பாறணையை முடித்தல் நியதியாகும்.

நவராத்திரிக் காலத்தில் முறைப்படி விரதமிருந்து வழிபட முடியாத நோயாளிகள், உடல்வலுவற்றவர்கள், முதியோர்கள் பகல் ஒருநேர உணவருந்தித் தமது வழிபாட்டை நிறைவு செய்யவும், ஒன்பதாம் நாள் உபவாசமிருந்து இரவில் பால், பழம் ஏற்றும் வழிபடுவர்.

ஆலயங்களில் மகாசக்தி மகாநோன்பிருந்து அருள் பாலிக்கும் அன்னைக்கு ஒன்பது நாளும் ஒன்பது விதமான மாலை கள் அணிவர். அன்னைக்கு உவந்ததான மல்லிகை, முல்லை, பிட்சி, சம்பங்கி, ஜாதிமல்லிகை, பாரிசாதம், பவளமல்லிகை, தாளம்பூ, செவ்வரத்தை, ரோசா, தாமரை போன்ற மலர்களில் வசதியுள்ள நறுமலர்கள் சூட்டி அர்ச்சித்து வழிபடுவர். மேலும் வில்வம், துளசி, மருது, கதிர்ப்பச்சை, விபூதிப்பச்சை, சந்தன இலை, தும்பை இலை, பன்னீர் இலை, மருக்கொழுந்து ஆகிய வற்றால் மாலைகட்டி அன்னைக்குச் சார்த்தி மகிழ்விப்பர்.

அன்னையின் உவப்பான நாவற்பழம், கற்கண்டு, பழவகை, தேங்காய், வெற்றிலை, பாக்கு ஆகியவற்றைப் படைத்து வணங்குவர்.

நவராத்திரிக்காலத்தில் எண்ணெய் தேய்த்து முழுகுதல் தவிர்க்கப்படும். இக்காலத்தில் புரட்டாதிச் சனிக்கிழமை விரதம் பிடிப்போரும் எண்ணெய் தேய்க்காது அவ்விரதத்தைக் கைக்கொள்வர். அன்று சனி பகவானுக்கு எள் எண்ணெய் எரித்து வழிபடலாம். நவராத்திரி விரதத்தைப் பக்தி பூர்வமாக ஆசாரத் துடன் தொடர்ந்து ஒன்பது வருடங்கள் அனுட்டித்தவர்கள் வசதி குறைந்தால் இவ்விரதத்தைக் கைவிடலாம். விரும்பியோர் தமது நிலைக்கேற்பத் தொடர்ந்தும் கடைப்பிடிக்கலாம். இவ்விரதத்தை நன்கு கடைப்பிடித்தால் சக்தியின் பேரருள் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரகுருபரர் சுவாமிகள்



பாண்டி நாட்டின் திருவைகுண்டம் என்னும் திருப்பதியில் வாழ்ந்த சைவவேளாண்குடியிற் தோன்றிய சண்முகசிகாமணிக் கவிராயர் சிவகாமி தம்பதியினர் முற்றவப் பயனாக இம்மையில் அரும்பேறு பெற்றனர். இவர்களுக்கு வாய் பேச முடியாத பாலகன் ஒருவன் அவதரித்தான். ஐந்து வயது வரை ஊமையாகவே திகழ்ந்தான். பெற்றோர் ஆறாத கவலை கொண்டு தமது பாலகனுடன் திருச்செந்தூர் சென்று முருகன் முன் பிள்ளையைப் படுக்க வைத்தனர். தாமும் கவலை தீர அழுது புலம்பி முருகனிடம் விண்ணப்பித்தனர்.

காலம் கனிந்தது போல இறையருள் கைகூட்டியது. சிறுவன் தன் திருவாய் திறந்து முருகன் புகழை வியந்து பாடினான். இப்பாடல்கள் மடை திறந்த வெள்ளம் போலப் பாடவும் அதன் பொருள் கந்தர் கலிவெண்பாகவாக அமைந்தது. முருகப் பெருமானின் அருளாசிமணியான முத்துக்களைப் பாமாலை யாக்கித் திருச்செந்தூர் முருகனுக்கு அர்ப்பணித்ததால் குமர குருபரர் என அழைக்கப் பெற்றார். யாவரும் வியந்து இன்புற்றனர்.

சைவசித்தாந்த மரபினையும் இலக்கண இலக்கியங்களை யும் முருகனருளால் இலகுவில் நன்கு கற்றறிந்தார். முருகனின் ஆணைப்படி ஆலய தரிசனைக்காக வடதிசையை நாடினார். சென்ற பாதையில் மதுரை மீனாட்சியம்மையை வணங்கி அவ் வாலயத்திற் சில காலம் தங்கினார். முருகன் அருளும் குமரகுருபர ரின் பக்தி மற்றும் கல்வியறிவும் உணர்த்தியதால் மதுரை மீனாட்சி யம்மனின் மீது பிள்ளைத்தமிழ் பாடினார். இதனை அந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டரசன் திருமலை நாயக்கன் முன்னிலையில் ஆலய மண்டபத்தில் பாடி அரங்கேற்ற இறையருள் பாலித்தது.

பாடல் ஆரம்பித்து வருகைப் பருவத்தின் பாடலான "கொடுக்கும் கடவுட்பழம் பாடற் தொடையின் பயனே" என்ற தொடரிற் பாடி அதன் பொருளைச் சொல்லும் வேளை அழகிய சிறுமியொருத்தி பட்டாடைகள் நவமணி மாலைகள் அலங்கரித்து குறுநடையுடன் வந்தமர்ந்து கேட்டுக்கொண்டிருந்தாள். விளக்கம் முடிந்ததும் மன்னனின் கழுத்திலிருந்த மணிமாலை ஒன்றை எடுத்துக் குமரகுருபரருக்கு அணிவித்த பின் மறைந்தருளினார். யாவரும் மீனாட்சி அம்பாளின் கருணையை வியந்தனர். குமரகுருபரரின் சிறப்பையறிந்த மன்னன் தாமும் பெறுமதியான பரிசில் வழங்கிக் கௌரவித்தான்.

மீனாட்சி அம்பாளின் இறையருளை வியந்த குமரகுருபரர் அம்பாள் மீது மதுரைக் கலம்பகம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, நீதிநெறி விளக்கம் ஆகிய பாடல்களைப் பாடினார். தொடர்ந்து பல திருத்தலங்களைத் தரிசித்த வண்ணம் திருவாரூரை அடைந்தார். அங்கும் இறைவன் மீது பாடல் பாடி மகிழ்ந்தார். மேலும் தாம் சிறுவனாக இருந்ததால் ஒரு ஞான குருவின் வழிகாட்டலில் தமது இறைபணியை நிறைவேற்ற எண்ணினார். அதன் பேறாக அங்கு வாழ்ந்த ஸ்ரீ மாசிலாமணித் தேசிகர் என்பவரிடம் குரு உபதேசம் பெற்றார். தொடர்ந்து பல திருத்தலங்களிற் தங்கிப் பாடிய வண்ணம் சிதம்பர நடராசர் சிவகாமி அம்பாள் மீது பாடல்கள் பாடிய பின் தருமபுரஞ் சென்று குருவின் ஆலோசனைப்படி துறவு பூண்டு காசிக்குச் சென்றார்.

காசியில் பெருமானை வணங்கிப் பாமாலைகள் புனைந்தார். அங்குள்ள துண்டி விநாயகர் மீதும் பாடினார். தொடர்ந்து காசி மன்னனின் ஆதரவைப் பெறும் நோக்கில் வடமொழி பேசிப் பழக எண்ணினார். அக்கல்வியை நாடியதால் சரஸ்வதி தேவியின் மீது "சகலகலாவல்லிமாலை" என்னும் பதிகத்தைப் பாடினார். சரஸ்வதி தேவியின் பேரருளால் வடமொழியை இலகுவிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயின்று மன்னனுடன் அன்பு முறையாடிக் காசியில் திருக்கேதார நாதர் ஆலயத்தில் முகமதியரால் மறைக்கப்பெற்ற கேதார லிங்கத்தை வெளிப்படுத்தி ஆலயத்தையும் புனர்நிர்மாணஞ் செய்தார். ஆலயம் பூசை வழிபாடுகளால் மேம்படவும் அவ்விடத்தில் திருமடம் ஒன்றை அமைத்தார். அந்த மடத்தில் புராண படனஞ் செய்யும் நோக்கில் புராணசாலை அமைத்து தமிழிலும் வடமொழியிலும் புராண படனஞ் செய்யும் சிறப்பை வட நாட்டிற் செய்வித்தார்.

பலகாலம் காசியில் வாழ்ந்து சைவத்தையும் தமிழையும் நிலை நாட்டிய பெருமையைத் தனதாக்கினார். இறையருளால் இவர் தந்த அமுதமான பாடல்களும் பணியும் இன்றுவரை காசியில் நிலை கொண்டுள்ளது. இவரின் இறையருள் அமுதமான "சகலகலாவல்லி மாலை" நவராத்திரிக் காலத்தின் ஒப்பற்ற பாமாலையாக இன்றும் பக்தியை வளர்க்கிறது.

## குமரகுருபர சுவாமிகள் அருளிய
## சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே! - 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைப்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே! - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே! - 03

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே! - 04

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! - 05

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! - 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
தாயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதம் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே! - 07

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே!
சகல கலாவல்லியே.! - 08

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே! - 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்
டேனும் விளம்பினுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ?
சகல கலாவல்லியே! - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகனின் வேண்டுதலுக்காக கந்தபுராணம் பாடிய கச்சியப்பச் சிவாச்சாரியார்

காஞ்சிமாநகரின் கந்தகோட்டத்து அர்ச்சகர் பரம் பரையைச் சேர்ந்த ஆதிசைவகுல மரபிலுதித்த காளத்தியப்ப சிவாச்சாரியார் தம்பதியினரின் முற்றவப் பயனாக அவதரித்தவர் கச்சியப்பச் சிவாச்சாரியார்.

இவர் தமது குலமரபிற்கேற்ப இறைபக்தியும் செந்தமிழ், வடமொழி மற்றும் ஆயகலைகளும் நன்கு கற்றவர். தமது ஆசார சீலத்தில் இறைவனைப் பணியும் ஆற்றலும் கல்வியிற் புலமையும் பெற்றவர். இவரின் நற்பண்பினால் முருகப் பெருமானை நெஞ்சில் இருத்தி இடையறாது போற்றும் நியதியுடையவர். ஒருநாளிரவு இவரின் கனவிற் தோன்றிய முருகப் பெருமான் தமது வரலாற்றை கந்தபுராணம் என்னும் நூலுருவிற் படைக்குமாறு கூறியதுடன் "திகடசக்கரம்" என்னும் முதலடியுடன் தொடங்குமாறும் தெரிவித்து மறைந்தருளினார்.

மறுநாட்காலை எழுந்த கச்சியப்பச் சிவாச்சாரியார் கந்த கோட்டத்து முருகப்பெருமானே கனவில் வந்து பணித்ததை எண்ணி வியந்தார். ஒரு சுபதினத்தில் புனித நீராடி ஆசாரத்துடன் கந்தகோட்டத்து முருகப் பெருமானை மன நிறைவுடன் வழிபட்டார். முருகப்பெருமானை நெஞ்சில் உறைய வைத்து ஆலயத்தின் அமைதியான ஒரு புறத்தில் அமர்ந்தார். உவகை யுடன் ஆனந்தக் கண்ணீர் மல்க முருகப் பெருமானின் உந்துத லுடன் "கந்தபுராணம்" எழுதும் பணியை ஆரம்பித்தார்.

பாடல்களை ஆரம்பிக்குமுன் நாளாந்தம் நூறு செய்யுள் கள் எழுதி முடிப்பதாகவும் திடசங்கற்பம் பூண்டார். முருகப் பெருமான் எடுத்துக் கொடுத்த முதலடியான "திகடசக்கரத்துடன் கந்தபுராண ஆக்கம் தொடர்கிறது.

"திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
னகர சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய பாடல் அடங்கலாக அன்று நூறு பாடல்கள் எழுதி நிறைவு கண்டதும் யாவற்றையும் ஒன்றாகக் கட்டி முருகப் பெருமானின் திருமுன் வைத்துவிட்டு இரவில் வீடேகினார். மறுநாள் விடிந்ததும் வழமைபோல எழுது முன் முதல் நாள் எழுதி வைத்ததை எடுத்துப் பார்த்தார். ஒரு சில திருத்தங்கள் செய்யப் பட்டிருந்தது. இதனால் வியப்படைந்த கச்சியப்பர் தமது படைப்பை முருகப் பெருமான் படித்துத் திருத்தஞ் செய்ததைக் கண்டு இன்புற்றார். முருகப் பெருமானால் தமது ஆக்கம் அங்கீகரிக்கப் பெற்றதை எண்ணித் தமது படைப்பைச் சிறப்பாகச் செய்ய முற்பட்டார். நாளாந்தம் எழுதி வைக்கப்பெற்ற பாடல்கள் அன்றே திருத்தியதால் எழுத்துப்பணி துரிதமடைந்தது.

கந்தபுராண காவியம் ஆறு சருக்களாக அமைக்கப் பெற்றன. மொத்தமாக 10345 பாடல்கள் இடம்பெற்றன. முருகப் பெருமானால் ஏற்கப் பெற்ற "கந்த புராணம்" என்னும் நூலை நாவல்லோரான பாவலரும் பண்டிதர்களும் கூடிய மகாசபையில் அரங்கேற்றவும் கச்சியப்பர் சித்தங்கொண்டார். தமது அரும் பணியை யாவரும் ஆய்ந்து ஆசி வழங்குமாறு தொண்டை நாட்டி லுள்ள கல்விமான்களுக்குத் திகதி நேரம் குறித்து வருகை தருமாறு அழைப்பு விடுத்தார். கந்த கோட்டத்து முருகன் திருத்தலத்தில் கற்றோரும் மற்றோருமான புத்திஜீவிகளின் மகாசபை கூடுகிறது.

சபையோர் முன் தோன்றிய கச்சியப்ப சிவாச்சாரியார் முருகப்பெருமானைத் தமது இதயத்திலிருத்தினார். கந்த புராண நூலுக்குப் பூசைகள் செய்து கையிலெடுத்தார். சபையோரை வணங்கியதும் முதலாவது பாடலான "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்னும் பாடலைப் பாடி அதன் பொருளை விரிக்கத் தொடங்கினார். அச்சமயம் சபையிலிருந்த முதுபெரும் புலவ ரொருவர் எழுந்து திகழ் சக்கரம் என்னும் பொருள் திகட சக்கரம் என்று மாறுவதன் விதி யாதெனக் கூறும்படியும் இப்புணர்ச்சி எந்த இலக்கண நூல்களிலும் காணப்படவில்லை என்றும் கூறினார்.

இதைக் கேட்டதும் கச்சியப்பர் புலவர் பெருமானே இது பற்றி நானும் அறிந்திலேன். இப்பதம் முருகனால் கூறப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும் என்றார். வாதாடிய புலவர் இது முருகனின் சொற்றொட ரானால் அவரே நேரில் வந்து சபை முன் விதியைக் கூறட்டும் என்றார். சபை கலைந்தது. கச்சியப்பர் அன்றே இப்புராணத்தை முருகப் பெருமான் முன் வைத்து வீழ்ந்து வணங்கியபடி தமது அவமானத்தை நீக்கியருள வேண்டுமென அழுது புலம்பினார். கச்சியப்பர் அழுத சோர்வினால் அவ்விடத்திலேயே உறங்கி விட்டார். அவரின் கனவிற் தோன்றிய முருகப் பெருமான் நாளை சோழநாட்டுப் புலவரொருவர் சபையில் விளக்கமளிப்பார் எனக் கூறினார்.

மறுநாட்காலை கச்சியப்பர் யாவரையும் அழைத்தார். சபைகூடியது. சபை நடுவில் ஒரு இளம்புலவர் கையில் ஏட்டுச் சுவடியுடன் காணப்பெற்றார். முதல்நாள் வாதாடிய புலவர் கச்சியப்பரை விதியைக் கூறுமாறு கேட்டார். சபையிலிருந்த இளம்புலவர் எழுந்து "நாம் சோழ நாட்டினோம். என் கையிலிருப்பது வீரசோழியம் என்னும் இலக்கண நூலாகும். இதன் சந்திப் படலத்தின் பதினெட்டாம் பாடலில் ழகரம் கூடி டகரமாகும் விதியை நீவிர் அறியீரோ என்றார்.

அப்போது பல புலவர்கள் எழுந்து இதை நாம் அறிவோம். உரிய நேரத்தில் எமக்கு இவ்விதி தோன்றவில்லையெனக் கூறினர். விதியை வெளிப்படுத்திய புலவர் மறைந்தருளினார். அச்சமயம் விதியைக் கூற வந்தது முருகப் பெருமானே என்று யாவரும் உணர்ந்து கச்சியப்பச் சிவாச்சாரியாரைப் பாராட்டினர். வாதாடிய புலவர் கச்சியப்பரை வீழ்ந்து வணங்கித் தம்மை மன்னிக்குமாறு வேண்டினார்.

கச்சியப்பர் அவரை நோக்கிப் புலவரே நீவிர் இடை மறித் ததாலன்றோ முருகப் பெருமானை யாவரும் நேரிற் தரிசிக்கும் பேறு கிடைத்தது என்று புகழ்ந்தார். உடனே அங்கு சூழ்ந்திருந்த யாவரும் கச்சியப்பரையும் கந்தபுராண காவியச் சுவடிகளையும் பல்லக்கிலேற்றிப் பவனி வந்து பெருமைப்படுத்தினர்.

கச்சியப்பச்சிவாச்சாரியார் தமது முதன்மைச் சீடர்களான ஞானவரோதயர் முதலானவர்களுக்கு இந்த நூலினை நன்குபதேசித்தார். யாவரும முருகப் பெருமானை நெஞ்சில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இருத்தி நூலினை ஏற்றவாறு பல பகுதிகளாக வகுத்து எழுதக் கச்சியப்பர் நெறிப்படுத்தினார். இந்த முறைப்படியே கந்த புராணம் இன்று சைவ மக்களிடையே இறையருள் அமுதமாகப் பாய்கிறது.

யாழ் மண்ணில் கந்தபுராணத்தை உள்ளன்போடு அறிய வைத்து அதன்படி ஒழுக வைத்து எம்மண்ணில் கந்தபுராணக் கலாசாரம் என்பதை நிலைநாட்டிய பெருமை நல்லை நகர் நாவலர் பெருமானுக்கே உரியதாகும். நாமும் தவறாது போற்றி வழிபடுவோமாக.

❋ ❋ ❋ ❋ ❋

## திருப்புகழ் அமுதளித்த அருணகிரிநாத சுவாமிகள்

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிருதோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே.



அருளோங்கும் திருவண்ணா மலை தியாகேசர் திருத்தலத்தில் பணியாற்றிய உருத்திர கணிகைய ரான முருகம்மை சிவப்பணியிலும் நற்பண்பிலும் சிறந்து விளங்கினாள். இவரின் முன்வினைப் பயனுக்கேற்ப இம்மையில் நற்புகழீட்டும் அருளாள ரைப் பெற்றெடுக்கும் நியதி இருந்தது.

காலமும் கனிந்து வரும்போது ஒருநாளிரவில் முருகம்மை யின் கனவிற் தோன்றிய முருகப் பெருமான் "பெண்ணே நீயொரு பெண் மகவைப் பெற்றெடுப்பாய்" எனக் கூறி மறைந்தார். முருகப் பெருமானின் அறிவுரைக்கேற்ப முருகம்மை ஒரு பெண் மகவின் தாயாராகி ஆதியென்னும் திருநாமஞ்சூட்டி அன்புடன் வளர்த்து வந்தாள். ஐந்து வருடங்களுக்குப் பின் மீண்டுமொரு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப் பெருமான் முருகம்மையின் கனவிற் தோன்றி "பெருமைக் குரியவளே எதிர்காலத்தில் சிறப்புடன் போற்றப்படும் சற்புத்திரனையும் பெற்றெடுப்பாய். அவன் புகழால் உனக்கு முத்தியின்பமும் கிடைக்கும்" எனக்கூறி மறைந்தருளினார்.

முருகப் பெருமானின் வாக்குப்படி முருகம்மை மிக்க அழகுடைய ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். மகனின் அழகுக் கேற்ப அண்ணாமலையைக் குறிக்கும் "அருணகிரி" என்னும் திருநாமஞ்சூட்டினாள். இரு பிள்ளைகளையும் தன் இரு கண்களெனப் போற்றி அரவணைத்து மகிழ்ந்தாள். அருணகிரி வளர்ந்து பள்ளிப் பருவம் வந்ததும் கல்விக்காகப் பாடசாலையிற் சேர்த்தாள். அருணகிரியோ கல்வியை நாடாது வீண்பொழுது போக்கினான்.

சிறிது காலஞ் சென்றதும் முருகம்மை தனது இரு பிள்ளை களையும் அழைத்து நல்லுரை பகிர்ந்தாள். ஆதியை நோக்கி அருணகிரியை உன் தம்பியாக மட்டுமன்றி அவனின் தாயாகவு மிருந்து காப்பாற்றுமாறு வேண்டினாள். காலங்கள் கடந்தன. முருகம்மை இயற்கையெய்தினாள். தாய் சொல்லைத் தட்டாத ஆதி தன் தம்பியை மிக அன்புடனும் சகோதர/ தாய்ப்பாசத் துடனும் பேணி வந்தாள். அருணகிரிக்குத் தீய நண்பர் கூட்டமும் பெருக நெறிதவறியும் வாழ்ந்தான். தீய நண்பர்களின் சக வாசமும் வழிகாட்டலும் மேனியழகும் விலைமாதர்களைக் கவர வைத்தது. ஆதி, தம்பி நெறி தவறினாலும் கண்டிக்காது அவன் கேட்கும் போதெல்லாம் வேண்டியனவற்றைக் கொடுத்து வந்தாள். அருணகிரியின் தவறிய பாதைக்கு வீண் செலவுக்காக முருகப் பெருமான் ஆண்டிக் கோலத்தில் வந்து அவ்வப்போது பொற் காசுகளை வழங்கினார். அருணகிரிக்கு மேலும் பாவவினையைக் கூட்டத்தக்க தீய நண்பர்களின் வழிகாட்டல் பொது மகளிருக் காக வாரி இறைத்ததால் தாயாரின் தேட்டம் யாவும் சிதறியது. மேலும் அருணகிரிக்குதவும் நோக்கில் பொது மகளின் வீடுகளிற் தான் கூலி வேலை செய்து தம்பியின் தவறான போகத்தின் தேவைக்கு உதவினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரியின் முன்செய்த கர்மவினை நிறைவு பெறும் காலம் வரவும் ஆதியின் பொறுப்பிலிருந்த பொருள், வீடு மற்றும் அவளின் சரீர சுகம் யாவும் வீணே கரைந்தன. அருணகிரி சகல சொத்துக்களையும் இழந்து பாலியல் நோயால் பீடிக்கப்பெற்று வருந்தினான். உயிருடன் வாழ்வதில் யாது பயனுமற்ற நிலையில் அண்ணாமலையானின் கோபுரம் மீதேறி "முருகா" என்று கூறிய வண்ணம் கீழே குதித்தான்.

இறைவனின் திருவிளையாடலும் நல்வினைப் பயனும் சேர்ந்தாற்போல் முருகப் பெருமான் அருணகிரியைக் கீழே விழாத வண்ணம் காப்பாற்றினார். காப்பாற்றிய முருகப் பெருமான் அருணகிரியை நோக்கி "ஆற்றல் மிகுந்த இளைஞனே! நீ இவ்வாறு உயிர் விடத் துணியலாமா? வடபுறக் கோயில் வாசலில் இறைவன் உன்னைக் காத்து நிற்கிறார் உலகமே உன்னைப் போற்றி வணங்கும்" என்று கூறி நயன தீட்சையையும் திருவடி தீட்சையை யும் தந்து திருநீறிட்டார். அருணகிரியின் உடல் நோய் முற்றாக நீங்கியது. உளநோயும் நீங்கி ஞான உணர்வு ஏற்பட்டது. முருகப் பெருமான் காட்டிய பாதையில் அருணகிரி சென்று தவநிலையில் இருந்தார்.

இதேசமயம் தம்பியைத் தேடி வந்த ஆதியும் ஏனை யோரும் வந்து அருணகிரியின் தவநிலையைக் கண்டு வியந்தனர். முருகப் பெருமானின் திருவடி தேவர்கள் மீதும் அருணகிரியாரின் தலை மீதும் முருகனின் மயில் மீதும் ஆகிய மூன்று இடங்களில் மட்டும் பட்டது பெரும்பேறாகும்.

முருகப் பெருமான் அருணகிரியாரை நோக்கித்தன் புகழைப் பாடுமாறு பணித்தார். அருணகிரியார் முதலில் எவ்வாறு தொடங்குவது எனத் தயங்கியபோது "முத்து" என முதல் அடி எடுத்துக் கொடுத்தார். அருணகிரியார் முருகப் பெருமானின் திருவருளையும் அவரின் புகழையும் அவரால் அடிஎடுத்துக் கொடுத்தபடி பின்வருமாறு பாடினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக்குருபரன் எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவருள்
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்
பத்துத் தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகு பொருள்
பட்சத்தொடு ரட்ஷித் தருள்வது மொருநாளே
தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந கடிக்கப் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொடு தொக்குத் தொடு தொடு
சித்ரப் பவுரிக்குத் திரிகடக எனவோதக்
கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்புற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

முருகப் பெருமானின் ஆணைப்படி அருணகிரிநாதர் வயலூர் நகருக்குச் சென்றார். வழியில் மலையடிவாரத்தில் அமைந்த பொய்யா கணபதியைத் தரிசிக்கிறார். விநாயகப் பெருமான் அருணகிரியாரை நோக்கி "உயர்திருப்புகழை விருப் பொடு செப்பு" என்று ஆசி வழங்கியதுடன் அதனைப் பாடும் முறையையும் உபதேசித்தார். அருணகிரியார் விநாயகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானின் பெருங்கருணையை எண்ணித் தமது நன்றியறித லாகத் திருப்புகழைப் பாடி வணங்கினார்.

விநாயகப் பெருமானின் வழிகாட்டலில் தம்மை ஆட் கொண்டு பாடவைத்த முருகப்பெருமான் மீது ஐம்பத்தைந்து திருப்புகழ் பாடல்களைப் பாடினார். முருகப்பெருமான் அருணகிரிநாதரைத் தமது ஆலயங்கள் தோறுஞ் சென்று தன் புகழைப் பாடுமாறு தெரிவித்தார். இதன் பேறாக விராலி மலை திருத்தலத்தில் முருகப்பெருமானின் அற்புதத் தரிசனங்களைக் கண்டும் அட்டமாசித்திகளையும் பெற்றார். இதனால் முருகப் பெருமானின் ஞான உபதேசம் பெற்றபேறையும் அடைந்தார்.

திருவண்ணாமலை திருவிடைக்களி திருச்செங்கோடு, திருத்தணிகை போன்ற திருத்தலங்களில் தரிசனை செய்து பெற்ற அற்புதங்களை வியந்து "திருவகுப்புத் தொகுப்பு" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். முருகப்பெருமானின் பேரருளால் பல அற்புதங்களையும் செய்தார். ஒருசமயம் அப்பகுதி அரசனுடன் நட்புரிமையுடன் சம்பந்தாண்டான் என்னும் சக்தி உபாசகரும் அருணகிரிநாதரும் சந்தித்தபோது அரசன் சம்பந்தாண்டானை சக்தியின் தரிசனையையும் அருணகிரியாரை முருக தரிசனத்தை யும் அண்ணாமலையானின் ஆலயச் சூழலில் காண்பிக்குமாறு பணித்தான். சம்பந்தாண்டானின் கோரிக்கையைச் சக்தி ஏற்க மறுத்தாள். இதனால் முருகனையும் தரிசனம் காண்பிக்கவிடாது தடுக்குமாறு சக்தியை வேண்டினான். அருணகிரி முருகனை வேண்டி சீர்பாத வகுப்பு என்னும் தொகுப்பான பாடலைப் பாடியும் முருகன் வரவில்லை. உடனே அருணகிரியார் மயில் விருத்தமான பின்வரும் பாடலைப் பாடினார்.

"அதல சேட னாராட வகிலமேரு மீதாட
வபின - காளி தானாட - வவளோடன்
றதிரவிசி வாதாடும் விடையினேறு வாராட
வருகு பூத வேதாள - மவையாட
மதுரவாணி தானாட மலரின் வேதனாராட
மருவுவானு ளோராட மதியாட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனமாமி தானாட நெடிய மாமனாராட
மயிலுமாடி நீயாடி வரவேணும்
கதைவிடாத தோள்வீம எதிர் கொள்வாளி யால் விடு
கருதலார்கள் மாசேனை பொடியாகக்
கதறுகாலி போய்மீள விசயனேறு தேர்மீது
கனகவேதி கோடுதி யலைமோதும்
உததிமீதி லேசாயு முலகமூடு சீர்பாத
உவணவூர்தி மாமாயன் மருகோனே!
உதயதாம மார்பான பரபுடதேவ மாராஜ
னுளனுமாட வாழ்தேவர் பெருமானே!

இப்பாடலைக் கேட்டதும் தோகை விரித்தாடிய மயில் முருகப் பெருமானின் அருகே சென்று களிநடனம் புரிந்தது. முருகப் பெருமான் மயில் மீது தாவி அமர்ந்தார். மயில் அருணகிரிநாதரின் பாடலாற் கவரப்பட்டு அண்ணாமலையானின் ஆலய வீதியில் அருங்காட்சி தந்தது. முருகனின் பேரொளி அரசனின் கண்பார்வையை ஒளி மழுங்கச் செய்தது. அருணகிரியார் திருநீறிட்டு அரசனின் கண்பார்வையைக் கிடைக்கச் செய்தார்.

வேறொரு சமயம் அரசன் சம்பந்தாண்டானின் சூழ்ச்சியால் கற்பக மலரெடுத்து வருமாறு அருணகிரியை வேண்டினான். அருணகிரியார் தமது அட்டமாசித்தியின் பேறாக தமது உடலை விடுத்துக் கிளி வடிவத்துடன் தேவலோகஞ் சென்று கற்பக மலரெடுத்து வந்தார். தமது சொந்த உடலில் மாற இருந்தார். இதற்கிடையில் சம்பந்தாண்டான் அவரின் உடலை எரித்து விட்டான்.

அருணகிரியார் கிளி வடிவத்தில் அரசனிடஞ் சென்று மலரைக் கொடுத்துவிட்டு கந்தர் அனுபூதியைப் பாடியதும் அண்ணாமலைக் கோபுரத்தின் மீதமர்ந்தார்.

முன்செய்த கர்மவினையிலிருந்து முருகப் பெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டு முருகனைப் பாடி **226** முருகனாலயங்களைத் தரிசித்து ஒப்பற்ற சந்தக் கவிகள் பதினாறாயிரம் பாடல்களைப் பாடினார். இப்பாடல்களுள் நமக்குக் கிடைத்தவை **1328**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்கள் மட்டுமே. இவை யாவும் கந்தபுராணம், பெரிய புராணம், சிவமகாபுராணம், தேவி பாகவதம், மகாபாரதம் ஆகிய நூல்களிற் தோன்றிய தெய்வீகத் தத்துவங்களை வெளிப்படுத்து கின்றன. இப்பாடல்கள் யாவும், சொற்சுவை, பொருட்சுவை, சங்கீத அழகு நடையுடன் தித்திக்கும் தேன்மாரியாக செந்தமிழின் சிறப்பை அலங்கரிக்கிறது.

முருகப் பெருமானின் இறையருளால் எமக்குக் கிடைத்த தெள்ளமுதான திருப்புகழை நாமும் பாடி இன்புறுவோமாக.

"உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்
கருவா யுயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் யருள்வாய் குகனே"

❊ ❊ ❊ ❊ ❊

## பகழிக்கூத்தர் அருளிய திருப்புகழ்

ஓராறு முகமாட ஈராறு புசமாட
ஓங்கு வடிவேலுமாட
உச்சிதக் குண்டலமும் கச்சிதமுடியாட
ஒளிவான சுட்டியாட
பாரான தண்டையும் பாதச்சிலம்பாடப்
பணிந்திடும் பக்தர் ஆட
பன்னிரு கரமாட பணிந்த பூஷணமாடப்
பவளவெண் குடைகள் ஆட
தோராத மயிலாடக் கோழிக் கவசமாடத்
துலங்கு நீர் காவியாட
தொண்டர்கள் முதலான சண்டி கேஸ்வரராடத்
தொந்த நவவீரர் ஆட
தாராத தவமுனிவர் தானாட நீயாடித்
தமியனேன் முன்பு வருவாய்
தகதகென மயிலேறித் திருநடன மாடிவரும்
தணிகாசலக் கடவுளே

❊ ❊ ❊ ❊ ❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக்குரியவர்கள்

சைவநெறி போற்றும் 'இறையருள் அமுதம்' என்னும் நூலை எழுதுமாறு என்னை உணர்த்திய சிவகாமி அம்பாளுக்கு முதற்கண் நன்றிகள்,

இவ்வரிய நூலின் கனதியை அறிந்து அரிய அருளுரையும் வாழ்த்துச்செய்தியும் தந்துதவிய அகிலமே போற்றும் அறப் பணியாளர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்,

இணுவையூரின் கல்வி மற்றும் சமயப் பணிகளை நன்குணர்ந்து எம்மால் எழுதப்பெற்ற 'இறையருள் அமுதம்' என்னும் நூலுக்கு அரியதோர் அணிந்துரை வழங்கிய சைவப்புலவர் சங்கத் தலைவர் திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள்,

சைவக்கற்கைநெறிக்கான எனது எல்லா நூல்களையும் வாங்கிக் கற்பதுடன் தமது பிற்சந்ததியினரையும் சிவநெறி கற்க ஊக்கமளிக்கும் பொதுமக்கள்,

தொடர்ந்து எமது அறநெறிப் பாடசாலை இயங்கவும், நூல்கள் வெளிவரவும் உறுதுணையாக இருந்து ஊக்கமளிக்கும் இணுவில் சைவத்திருநெறிக்கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள்

எமது அறநெறிப்பாடசாலையில் படித்து எமது அரிய நூல்களை அவாவுடன் கற்கும் மழலைச் செல்வங்கள்,

'இறையருள் அமுதம்' என்னும் இந்த நூலைக் குறுகிய காலத்தில் வெகு சிறப்பாகவும் கவர்ச்சியாகவும் உருவாக்கிய இணுவையூர் சுடர்நிலவு கிறபிக்ஸ் உரிமையாளர் பா. ராஜேஷ்கண்ணா அவர்கள் உட்பட மேற்கூறிய அனைத்து உள்ளங்களுக்கும் மன மார்ந்த நன்றி கூறுவதுடன் எமது அறநெறி மாணவர்கள் சார்பாக இறையருள் கிடைக்கப் பிரார்த்திப்பதில் மன நிறைவடைகின்றேன்.

என்றும் அறப்பணி போற்றும்

**இணுவையூர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரின் ஆக்கங்கள்

1. அறநெறிக்களஞ்சியம் ................................ 2003
2. சீரிணுவைத் திருவூர் ................................ 2004
3. திருமுறைத் தோத்திரப் பாடல்கள் ............... 2005
4. இல்லஞ் சிறந்திட வாழ்க! .......................... 2007
5. இறையருட் செல்வர்கள் ............................ 2007
6. சிவகாமி அறநெறிப்பாடசாலை 10ஆம் ஆண்டு மலர் ................................................ 2007
7. மழலைச் செல்வங்கள் ............................. 2008
8. ஈழத்துச் சக்தியின் அற்புதங்கள் ................ 2009
9. ஐயப்பன் வழிபாடு .................................. 2009
10. பிள்ளைக்கனி அமுது .............................. 2010
11. தேவிபாகவதக் கதைகள் ......................... 2011
12. யாழ் மண்ணில் சைவமும் தமிழும் வளர்த்த சான்றோர்கள் ........................................ 2012
13. கலைஞானசுரபி ...................................... 2012
14. திருமுறைப் பாடல்கள் ............................ 2012
15. அருள்ஞானதீபம் .................................... 2013
16. இணையிலி ............................................ 2013
17. உதயதாரகை ......................................... 2014
18. இறையருள் அமுதம் ................................ 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கேதாரநாதம்
திருக்கோவிலின் முகப்புத்தோற்றமும்
பனிமலையும்



திருநல்லூர் மூலவர்
இது பிருங்கி முனிவரால் பூசிக்கப்பட்டது. இதில்
பலதுளைகள் இருப்பது உற்றுநோக்கத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org